இரங்கும் உள்ள மெல்லாம் இரத்த வெறிகொண்டதம்மா

நினைவிழந்து நிலத்தில் கிடப்பவர் எத்தனை பேரம்மா
நிலையிழந்து காட்டில் திரிபவர் எத்தனை பேரம்மா
மனையிழந்து வாழ்வில் தவிப்பவர் எத்தனை பேரம்மா
மதியிழந்து பித்துப் பிடித்தவர் எத்தனை பேரம்மா

எல்லாம் நிறுத்த வேண்டுமென்பதை - நாம்
முன்னே உணர்த்த வேண்டுமம்மா
கல்லாய் இருந்து விட்டோமம்மா - அதனால்
இன்று கவலைப் படுகின்றோமம்மா

பண்பை இழந்ததம்மா - மாந்தர் கலத்தினில்
பாசம் விட்டகன்ற தம்மா
ஓங்கிய நாடுகள் - இன்று
ஓய்ந்து போய் விட்டதம்மா

அன்று தென்றல் வீசியதம்மா - இன்றது
புயலாக வீசுதம்மா - நன்று
புரிந்தோமம்மா நாம்விட்ட தவறையம்மா
சிந்திக்க நேரமில்லை இனி சீரழிய வேண்டுமம்மா

இன வெறி பிடித்ததம்மா - மாந்தர்குலம்
தறிகெட்டு ஓடியதம்மா - நாள்
தோறும் பொழிந்ததம்மா - அது
நாடழிக்கும் குண்டுமழை தானம்மா

பாழ்பட்ட சமுதாயத்திற்கு - இதை
யுணர்த்த வழி தெரியவில்லையம்மா
கால் கெட்டு போனோமம்மா
இனி காயவேண் டியதானம்மா
பாருலகம் உய்வு பெற - இனி
என்னவும் வாய்ப்பில்லையம்மா
வருந்தி வேலையில்லையம்மா
எல்லாம் முடிந்துவிட்டதம்மா
எல்லாம் முடிந்து விட்டதம்மா

பாடம் படிப்பென்பதை - படிக்க
பாடசாலை யில்லையம்மா - மாய்ந்து
போய் விட்டதம்மா - மீண்டும்
உய்ய வழி யில்லையாம்மா

மண்ணாய் போய்விட்டதம்மா - மயங்கிய
மாந்தரின்று மண்வாரிப் போடல்போல்
தறிகெட்ட செயல் புரிந்தனரம்மா
எல்லாம் முடிந்து விட்டதம்மா
எல்லாம் முடிந்து விட்டதம்மா.

A. ஹரிஷன்

*With Best Compliments*

*From*

# THE LAUNDROMAT (PVT) LTD.

Office :
No. 126, Reid Avenue,
Colombo 04.
Tel: 582766

*With Best Compliments From:*

YTTE

**YADURSHAN TRAVELS & TOURS ENTERPRISES**

**AIR TICKETING, TOURIST TRANSPORT,
SALES OF FANCY ITEMS, DRESS ITEMS OF
LOCAL IMPORT AND SECRETARIAL
WORK OF DOCUMENTAION.**

**S 54, SECOND FLOOR C.C.S.M.C. COLOMBO-11.
TEL- 336171, 074-712731
FAX- 074-712731**

*With Best Compliments From:*

LT

# LUXMY TRADERS

***Importens, Wholesale & Retail Dealers in Oilmans Goods, Groceries & Stationeries***

**44/5, DAM STREET,
COLOMBO-12.
Phone : 320063**

# திண்ணிய நெஞ்சம் வேண்டும்

பாடசாலைக்குள் நடைபெற்ற போட்டிகளில் மேற்பிரிவில்
1ம் இடம்பெற்ற கட்டுரை

"திண்ணிய நெஞ்சம் வேண்டும் தெளிந்த நல்லறிவு வேண்டும்" என்றான் பாரதி இங்கு எமக்குத் தேவையானது திண்ணிய நெஞ்சம் வேண்டும் என்ற வரி மட்டுமே. திண்ணிய நெஞ்சம் வேண்டும் அதாவது திடமான எதையும் தாங்கக் கூடிய நெஞ்சம் வேண்டும் என்பதாகும். இந் நெஞ்சத்தில் எழும் எண்ணங்கள் உடலை எவ்வாறு ஆட்டிப்படைக்கின்றன என்று யோசிக்கும் போது எனக்கு வியப்பாக இருக்கிறது என்று கூறுகின்றான் கவிஞன் கேதே. இந்த நெஞ்சத்தில் எழும் ஒவ்வொரு எண்ணத்தினது பிரதிபலிப்புகளையும் அடுத்த கணமே நம் உடலில் அவதானிக்க முடிகின்றது இது எமது எண்ணங்களால் ஏற்படுவது உதாரணமாக ஒரு பாதிரியார் கட்டுப்பல் அணிந்திருந்தவர் ஒருநாள் இரவு அவர் அதை கழற்றி வைக்க மறந்துவிட்டார் மறுநாள் காலையில் அந்தக்கட்டுப்பற்களை காணவில்லை அவர் அதை தான் விழுங்கி விட்டதாகவே எண்ணி வைத்தியரை சந்தித்து நடந்ததைக் கூறி தனது குடலில் அது சிக்கி அரிப்பதாகவும் கூறினார் ஆனால் வைத்தியப்பரிசோதனையின் பின்னர் அவர் அதைவிழுங்கவில்லை என்று தெரிந்தும் அவர் அவ்வாறு நம்பவில்லை மறுநாள் அவர் மனைவியிடம் இருந்து ஒரு தந்தி வந்தது அதாவது அவரது கட்டுப்பற்கள் கட்டிலுக்கு அடியில் இருந்ததாக செய்தி இருந்தது உடனே அவரது வயிற்று வலி மாறிற்று தன் உடைகளை அணிந்து வீடுதிரும்பினார் அவர். இவ்வாறு நெஞ்சம் எமது வாழ்வில் மிக முக்கியமான பங்கை வகிக்கின்றது.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணிய, திண்ணியராகப் பெறின்" என்பது திருவள்ளுவர் வாக்கு அதாவது எண்ணியவற்றை எண்ணியபடி முழு முயற்சியுடன் செய்து முடித்தல் வேண்டும் இதற்கு நெஞ்சம் வலிமையாக அமைய வேண்டும் தற்போது நான் இக்கட்டுரையை எழுதும் போது இது நன்றாக வரவேண்டும் என்ற ஆவலுடன் எழுதும் போது இக்கட்டுரை நன்றாக அமைந்துவிடுகின்றது. நம் வாழ்வியல ரீதியில் கூட இதற்கு உதாரணமாக கொல்லரையும் உடற்பயிற்சியாளரையும் எடுத்துக் கொள்ளலாம் கொல்லரது தோள்கள் வலுவாக இருந்தாலும் அவை உருண்டு திரண்டு அமைந்திருப்பதில்லை காரணம் அவன் இரும்பை அடிக்கும் போது அது தட்டையாக வேண்டும் என்ற எண்ணத்தில் அடிக்கிறான் இதனால் அவனது தோள்கள் உருண்டு திரண்டு வாளிப்பாக இருப்பதில்லை ஆனால் உடற் பயிற்சியாளனோ அவன் உடற்பயிற்சி செய்யும் போது தனது உடல் வலுவடைய வேண்டும் தனது தசைகள் இறுக வேண்டும். என்ற எண்ணத்துடன் உடற்பயிற்சி செய்வதால் அவனது தோள்கள் உருண்டு திரண்டு காட்சியளிக்கின்றன.

இந்தத்திடமான நெஞ்சம் மற்றும் அதில் எழும் எண்ணங்களால் பலர் பல சாதனைகளைப் படைத்துள்ளனர் இதனால், பல நன்மைகளும் சில வேளைகளில் பேரழிவுகளும் ஏற்பட்ட சான்றுகள் உள்ளன. உதாரணமாக இந்த நூற்றாண்டின் இணையற்ற மாமனித தாமரைகளுள் தங்கத்தாமரை போன்று ஜொலித்துக்கொண்டிருக்கும் மகாத்மா காந்தியிடம் இந்தத் திண்ணிய நெஞ்சம் இருந்தது இதனால் அவர் தன் தாய்நாடு இந்தியாவை சுதந்திர பூமியாக்குவேன் என்று வீறுகொண்டெழுந்தார் தன் மனதை தளரவிடாமல் தொடர்ந்து போரிட்டார் கடைசியில் சத்தியாக்கிரகத்தால் வெள்ளையரை வென்றார். ஒருவன் அம்பெய்து ஒரு முயலை வீழ்த்திவிட்டேன் என்று அம்முயலைக்காட்டுவதில் பெருமையில்லை யானைக்கு முன்னின்று அதற்கு வேலால்

எறிந்தேன் அது ஒரு சிறுகாயத்துடன் தப்பிவிட்டது என்றுஅவன் வேலைக்காட்டுவதில் தான் பெருமை உண்டு இதுதான் எமது திண்ணிய நெஞ்சத்தை காட்டுகின்றது.

இந்தத் திடமான நெஞ்சத்தால் தீவினைகள் ஏற்படும் என்று சொன்னேனே ஞாபகமிருக்கிறதா இதற்கு உதாரண புருஷராக இருப்பவர் சர்வாதிகாரி என புகழப்படும் ஹிட்லர் ஆவார் ஹிட்லர் தான் எல்லாநாடுகளையும் ஆட்சிசெய்யவேண்டும். என் ஆதிக்கம் உலகெங்கிலும் பரவவேண்டும் என்ற அவாவினால் எல்லா நாடுகளுடனும் போர் தொடுத்து தன் திண்ணிய நெஞ்சத்தால் வெற்றி பெற எண்ணிய அவன் கடைசிவரை தன் நெஞ்சை தளரவிடாமல் போர் செய்து கடைசியில் மடிந்தான் இங்கு இவனது திண்ணிய நெஞ்சும் அங்கு மகாத்மாவின திண்ணிய நெஞ்சும் முற்றிலும் வேறுபட்ட இரு காரியங்களை செய்து முடித்து விட்டது ஆனால் இதிலும் திண்ணிய நெஞ்சத்தில் எழும் எண்ணங்களாலும் பல பாதிப்புகள் ஏற்படுகின்றன.

எம் நெஞ்சத்தில் எண்ண அலைகள் ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு மரம் தாவி இன்னொரு மரத்தை நாடுகின்றது காரணங்களோ பல உள்ளன. ஒரு பேராசிரியர் ஒருவர் இதைப்பற்றி நடத்திய ஆராய்ச்சியில் அவருக்கு பல தகவல்கள் கிடைத்துள்ளன அதாவது ஒருவன் எதைப்பற்றி எண்ணுகின்றானோ அவனது எண்ணத்திற் கேற்ப தலை சாிகின்றது காரணம் யோசனை இதை வலுவாக்க இரத்தம் தலைக்கு அதிகமாக செலுத்தப்படுவதால் தலையில் பாரம் அதிகமாகி தலை சாிகின்றது. ஒருவர் தனது பெருவிரலைப்பற்றி யோசித்துக்கொண்டிருக்கும் போது பெருவிரலில் இரத்தம் அதிகமாக ஓட்டத்திற்குள்ளாகி பெருவிரற்பகுதி சிவப்பாக காணப்படுகின்றது இதற்கு காரணம் எமது எண்ணமே.

ஆராய்ச்சியாளர்கள் இந்த மட்டில் விடவில்லை பலரது வியர்வையையும் கூடவே எடுத்து பரிசோதனை செய்து பார்த்துள்ளார்கள் இதிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டதாவது ஒரு குற்றம் செய்தவனின் வியர்வையில் இரத்தத்தின் ஒரு சிறிதளவு விகிதம் கரைந்திருக்குமாம் இதை சோதனைக்குட்படுத்தி உலர விடப்பட்ட பொழுது இத்தகவல் பெறப்பட்டது. எண்ணங்கள் எம்மை இத்தோடு விட்டுவிடவில்லை ஆராய்ச்சியாளரும் விடவில்லை தாயையும் ஒரு சிறுவனையும் கூட சோதனைக்கு உட்படுத்திப் பார்த்துள்ளார்கள் ஒரு நாயிற்கு உணவைப்பார்க்க முன்னரே அதாவது உணவின் மோப்பம் பிடிபட்ட உடனேயே அந்த உணவைச் செரிக்கச் செய்யும் சுரப்பிகள் அதன் உடலில் சுரக்க ஆரம்பித்து விடுகின்றது. அதேவேளையிலேயே ஒரு சிறுவனை வைத்துக்கொண்டு ஒரு உணவைப்பற்றிப் பேசும் பொழுதும் அவனது உடலில் உணவைச் செரிக்கச்செய்யும் சுரப்பிகள் சுரக்கின்றன. இவை எல்லாவற்றிற்கும் காரணம் எம் நெஞ்சத்தில் எழும் எண்ண அலைகளே.

நாம் நெஞ்சம் பற்றிய முக்கியமான ஒன்றை விட்டுவிட்டோம் அதாவது ஒரு அதிர்ச்சியான செய்தியை கேட்டவுடன் அதை நினைத்து நெஞ்சத்தில் அதிக மகிழ்வு உண்டாவதால் உடலிற்கு அதிக இரத்தம் பாச்சப்படுகின்றது இந்த அமுக்கத்தை தாங்க முடியாது இரத்த நாளங்கள் வெடிப்பதால் உயிர் இழப்புகள் ஏற்படுகின்றன ஆதலால் நாம் ஒரு சீரான மகிழ்வான வாழ்வு வாழ "திண்ணிய நெஞ்சம் வேண்டும் தெளிந்த நல்லறிவு வேண்டும்"

M.பிரணவன்
10 "R"

# இந்து மாணவர் மன்றத்தால் நடாத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான சமயத்திறன்காண் போட்டிகளும், முடிவுகளும்

## கீழ்ப்பிரிவு

| | | | |
|---|---|---|---|
| பேச்சு | 1ம் இடம் | S. திலீப்குமார் | பரி தோமா கல்லூரி, கல்கிஸ்சை |
| | 2ம் இடம் | S. சுரேஷன் | பம்பலப்பிட்டி இந்து கல்லூரி |
| | 3ம் இடம் | A. தர்ஷினி | நீர்/விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி |
| கட்டுரை | 1ம் இடம் | N. குருஷாந்த் | இரத்மலானை இந்து கல்லூரி |
| | 2ம் இடம் | V. ஸ்ரீகணன் | புனித பேதுரு கல்லூரி |
| | 3ம் இடம் | B. பிரதீபா | இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி |
| சிறுகதை | 1ம் இடம் | G. ஜெனீவன் | பம்பலபிட்டி இந்து கல்லூரி |
| | 2ம் இடம் | K. பூர்ணிமா | இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி |
| | 3ம் இடம் | N. பார்த்தீபன் | கணபதி வித்தியாலயம் |
| கவிதை | 1ம் இடம் | R. ஸ்ரீநாத் | பரி தோமா கல்லூரி, கல்கிஸ்சை |
| | 2ம் இடம் | R. துஷ்யந்தி | நீர்/விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி |
| | 3ம் இடம் | Y. சுபோதினி | சாந்த கிளெயார் மகளிர் கல்லூரி |
| பண்ணிசை | 1ம் இடம் | M. ஆரணி | இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி |
| | 2ம் இடம் | V. கஜணன் | பம்பலபிட்டி இந்து கல்லூரி |
| | 3ம் இடம் | S. சுபாஷ்கர் | பம்பலபிட்டி இந்து கல்லூரி |

## மத்திய பிரிவு

| | | | |
|---|---|---|---|
| பேச்சு | 1ம் இடம் | T. அதிஷ்ட பிர்தா | நீர்/விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி |
| | 2ம் இடம் | A. காயத்திரி | இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி |
| | 3ம் இடம் | R. சத்தியாநந்தன் | பம்பலபிட்டி இந்து கல்லூரி |
| கட்டுரை | 1ம் இடம் | S. மயூரி | நீர்/விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி |
| | 2ம் இடம் | S. நிரூபா | இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி |
| | 3ம் இடம் | N. ஜெயதாரணி | விவேகானந்தா கல்லூரி |
| சிறுகதை | 1ம் இடம் | S. சதாமதி | இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி |
| | 2ம் இடம் | L. பகீரதா | தெஹிவளை, தமிழ் மஹா வித்தியாலயம் |
| | 3ம் இடம் | J. ஜோர்ஜ் | பத்திரிசியார் கல்லூரி |
| கவிதை | 1ம் இடம் | K. கஜவதனி | சாந்த கிளெயார் கல்லூரி |
| | 2ம் இடம் | S. சத்தியஜித் | D. S. சேனாநாயக்கா கல்லூரி |
| | 3ம் இடம் | T. கஜேந்திரன் | இசிபத்தன கல்லூரி |
| பண்ணிசை | 1ம் இடம் | K. பவித்ரா | இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி |
| | 2ம் இடம் | K. பவப்பிரியா | தெஹிவளை, தமிழ் மஹா வித்தியாலயம் |
| | 3ம் இடம் | G. கிரிஷாந்த் | பம்பலபிட்டி இந்து கல்லூரி |

## மேற்பிரிவு

| | | | |
|---|---|---|---|
| பேச்சு | 1ம் இடம் | C. பிரசன்னா | புனித அந்தோனியார் கல்லூரி, வத்தளை |
| | 2ம் இடம் | R. காயத்திரி | இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி |
| | 3ம் இடம் | G. மீநிளங்கோ | பம்பலபிட்டி இந்து கல்லூரி |
| கட்டுரை | 1ம் இடம் | G. சுபோதினி | மெதடிஸ்த கல்லூரி |
| | 2ம் இடம் | P. மனோகரன் | பம்பலபிட்டி இந்து கல்லூரி |
| | 3ம் இடம் | R. நிருஷியா | இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி |
| சிறுகதை | 1ம் இடம் | T. ரகுமாலா | இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி |
| | 2ம் இடம் | S. தமயந்தி | சாந்த கிளெயார் மகளிர் கல்லூரி |
| | 3ம் இடம் | M. குமுதினி | சாந்த கிளெயார் மகளிர் கல்லூரி |
| கவிதை | 1ம் இடம் | M. ரிஷ்வான் | நீர்/விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி |
| | 2ம் இடம் | M. கிரிஷ்ணவேணி | இரத்மலான இந்து கல்லூரி |
| | 3ம் இடம் | S. மதுராந்தகி | நீர்/விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி |
| | | N. தமிழ்ச்செல்வி | சாந்த கிளெயார் மகளிர் கல்லூரி |

திறந்த பிரிவு

## சமய அறிவு வினாவிடைப்போட்டி

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | பம்பலபிட்டி இந்து கல்லூரி | - K. சங்கர் |
| | | - A. கபிலன் |
| | | - S. யதுனந்தன் |
| | | - T. தமிழ்வாணன் |
| | | - S.K.N.சர்மா |
| 2ம் இடம் | திருக்குடும்ப கன்னியர் மடம் | - N. ராதிகா |
| | | - R. கவிதா |
| | | - H. சுலக்ஷனா |
| | | - K. கார்த்திகா |
| 3ம் இடம் | நீர்/விஜயரத்தினம் இந்து மத்தியகல்லூரி | - G.கௌசல்யா |
| | | - S.சுசிலா |
| | | - S. ராஜவதனி |
| | | - N. அனித்தேஸ்வரி |
| | | - K.துஷாந்தி |

தொடரின் சிறந்த போட்டியாளர்

திருக்குடும்ப கன்னியர் மடம் - R.கவிதா

**அனுசரணை: - Atlas International (Pvt) Ltd.**

*With Best Compliments*

*From*

Neptune

# HOSPITALS

**186, PARK ROAD, COLOMBO-05.**

**PHONE: 590200/01, 587715**
**FAX: 698302**

*We are modernized and are ready to serve the public with immediate effect with the following facilities:*

- O.P.D. SERVICE (DAY & NIGHT)
- LABORATORY INVESTIGTIONS
- OPERATING THEATRE FACILITIES
- SPECIALISTS CONSULTATION

*With Best Compliments From:*

# JONISONS

*With Best Compliments From:*

# SHASTHA TRADERS

*No. 133, 5th Cross Street,*
*Colombo-11*


கலைமகள் விழா கொண்டாடும்

கொழும்பு றோயல் கல்லூரி

இந்து மாணவர்கட்கு

விழா சிறப்புற அமைய

எமது நல்லாசிகள்



கொழும்பு – தெகிவளை – நெடுமால்

ஸ்ரீ வெங்கடேஸ்வர மகாவிஷ்ணுமூர்த்தி


தேவஸ்தானம்


# SUBHA

SRJ

ANI JEWELLERS

For all your Requirements of 22 Ct Gold Jewellery





183, Sea Street,
Colombo-11, Sri Lanka.
Tel: 447255

## சுபராணி


Branch:

471/A, Galle Road,
Colombo-06.
Tel: 594605, 595109

*With Best Compliments*

*From*

# *NEW BERUWELA CHEMISTS,*



**20A, Stace Road, Colombo-14.**

*With Best Compliments From:*

# THILLAI VISION

**Professional Videographers & Photographers.**
**Album Makers**
**All types of Recording**

*309-1/2, Galle Road, Colombo-06.*
*Tel: 504097, 077-300317, 074-517404*

*With Best Compliments From:*

# AIR LINK COMMUNICATION

*Photo Copy/ Local & IDD Calls/ Fax/ Laminating/ Binding/ Type Setting/ Letter Typing*

*195/2, Galle Road,*
*Dehiwala.*
*Tel: 729724, 729723*

*With Best Compliments From:*

# Vany Academy

&

# Universal Computer Centre

*148, Aluth Mawatha Road*
*Colombo-15.*
*T.P. 074-618705*

*With Best Compliments From:*

# Sujikala Industries

&

# Offset Printer

*Manufacturers of:*

**Greeting Cards, Invitation Cards, Wesak Goods,**
**Calenders, Diaries, Books & Scrap Pictures**

*104/6, Shopping Complex,*
*Sea Street, Colombo-11.*
*Tel. 331734, 541037 Fax: 331734*

*Factory : Sujikala Industries & Offset Printers,*
*No. 11, Bodhirajarama Mawatha, Colombo-10. Tel. - 685347*

*With Best Compliments From:*

# CZECH AIRLINES

*General Sales Agent in Sri Lanka.*

**Travels and Tours Link (Pvt) Ltd.**

**No. 111, Chatham Street,**
**Colombo-1, Sri Lanka.**
**Telephone : 342941, 342942**
**Fax : 94-1-437100**
**Code : SITA CMBTOOK**

*With Best Compliments From:*

# *Santha*

**Tex (Pvt) Ltd.**

**PERFECT CHOICE FOR THE ENTIRE FAMILY**
**SPECIALIST IN WEDDING SAREES**

*212, Main Street, Colombo-11.*
*Tel. 437050, 324459 Fax : 438644*

*With Best Compliments From:*

R.Vijey

J.Nitharshan

B.Purushoththaman

G.Lavanyan

S.Venu

R.Deluction

S.Gogulavardan

N.Neshanthanan

S.Thirupparan

M.Branavan

A.Sindujan

S.Nimalaprakasan

V.Vimalathithan

S.Arunan

J.Hareshkumar

**We are always,**

**"Loyal to Royal"**

**O/L 2001**

*With Best Compliments*

*From*

**M.I.P. Fernando & Company Limited.**

*Specialist in Hose Pipe.*

**31, Abdul Jabbar Mawatha,**
**Colombo-12.**

# சென்று வா; நீ வென்று வா....!

**றோயல் கல்லூரியின் இந்து மாணவர் மன்றத்தினூடு எமது மாணவர்கள் பங்குபற்றிய சமயத்திறன்காண் போட்டிகளும் முடிவுகளும்.**

## "சற்குருசித்தமுத்து அடிகள் ஞாபகார்த்த அரங்கத்திறன்காண் போட்டிகள்"

*கருத்தரங்கம்*

| | | |
|---|---|---|
| B. காண்டீபன் | - | தங்கப்பதக்கம் |
| T. யோகேந்திரன் | - | வெள்ளிப்பதக்கம் |
| P. S. செந்தூரன் | | வெண்கலப்பதக்கம் |

*கவியரங்கம்*

| | |
|---|---|
| B. காண்டீபன் | தங்கப்பதக்கம் |
| P. S. செந்தூரன் | பாராட்டுப்பரிசு |

*விவாத அரங்கம்* 1ம் இடம்

T. யோகேந்திரன்
S. கஜேந்திரன்
B. காண்டீபன்
P. S. செந்தூரன்


*இவர்கள்போல் இன்வரும் மாணவர்களும் மேலும் பல வெற்றிகளைப்பெற்று றோயல் கல்லூரிக்குப் பெருமை சேர்க்க வேண்டுமென வாழ்த்துகின்றோம்.*

**"வாழ்க வளமுடன் வளர்க திறனுடன்"**

*செயற்குழு 2000/2001*

*With Best Compliments From:*

# AYCO DESIGNER 'N' BUILDER



622/5, Aluth Mawatha Road,
Colombo-15.
Tel: 077-329722

*With Best Compliments From:*

# J M Josephine Enterprises

***(Dry Fish Merchants & Commission Agents)***



***34, I.X.Pereira Street,***
***Colombo-11, Sri Lanka.***
***Call or Fax on 94-1-541360***

*With Best Compliments*

*From*

# SHANKO

**(Colombo Central Distributor for ANTON Products)**

*Dealers in Hardware, Electrical Goods & Sanitaryware Stockists of Duro, S-Lon & Anton P.V.C. Pipes & Fittings. Specialist in PVC Fittings fabrication and PVC Welding etc.*

**Phone : 435704, 338040**
**Fax : 335229**

**192/23, Srimath Bandaranayake Mawatha,**
**Colombo - 12.**
**Tel: 075 332513, 075 332 514**

**Anton Depot :**
**35, Abdul Hameed Street.**
**Colombo -12**

# Supremme Geramics

**PIONEERS IN PLUMBING FIXTURES IMPORTERS**

Dealers in General Hardware, Sanitaryware, Wall/Floor Tiles, PVC Pipes & Fittings (Specialist in PVC Fittings Fabrication & PVC Welding etc.)

119, Messenger Street,
Colombo -12.
Tel: 459041, 459042
Fax: 332686

# இந்து மாணவர் மன்றத்தால் பாடசாலைக்குள் நடாத்தப்பட்ட சமயத்திறன்காண் போட்டி முடிவுகள்

## பாலர் பிரிவு

### ஆண்டு - 1

| | பேச்சு | பண்ணிசை | கதைகூறல் |
|---|---|---|---|
| 1ம் இடம் | அபிராம் | R. நிரோஷன் | R. நிரோஷன் |
| 2ம் இடம் | வேதப்பிரியன் | R. செந்தூரன் | S. அரவிந் |
| 3ம் இடம் | ரஞ்சன் நிரோசன் | R. இந்திரஜித் | R. ராகுலன் |

### ஆண்டு - 2

| | பேச்சு | பண்ணிசை | கதைகூறல் |
|---|---|---|---|
| 1ம் இடம் | இந்திரன் | R.ரமணன்<br>M.மதிநயானன் | M. இந்திரன்<br>அனோஜ் அரவிந் |
| 2ம் இடம் | பிரவீன் | | M. மதிநயானன்<br>இந்திரஜித் |
| 3ம் இடம் | அனோஜ்<br>இந்திரஜித் | M. இந்திரன் | K. யஷாந் |

### ஆண்டு - 3

| | பேச்சு | பண்ணிசை | கதைகூறல் |
|---|---|---|---|
| 1ம் இடம் | R. தர்ஷன் | த. றிஷோபன் | R.தர்ஷன் |
| 2ம் இடம் | P. சுசாந்தன் | P. சுசாந்தன் | R.தர்ஷன் |
| 3ம் இடம் | J. நிஜந்தன் | M.துவாரகன் | K.கிஷோபன் |

## கீழ்ப்பிரிவு

### ஆண்டு - 4

| | பேச்சு | பண்ணிசை | கட்டுரை |
|---|---|---|---|
| 1ம் இடம் | துலக்ஷன | குலஷங்கர் | S. சிவகாந்தன் |
| 2ம் இடம் | அனோஜன் | விஷ்வ வர்ணன் | K. சு.சசிவர்ணன் |
| 3ம் இடம் | சுவர்றன் | வசீகரன் | S. ஒஷான் |

### ஆண்டு - 5

| | பேச்சு | பண்ணிசை |
|---|---|---|
| 1ம் இடம் | ஹிஸ்னி | பிரணவன் |
| 2ம் இடம் | மயூரன் | ரமாஷங்கர் |
| 3ம் இடம் | ரமேஸ்குமார் | இளங்குமரன் |

ஆண்டு - 6

| | பேச்சு | பண்ணிசை |
|---|---|---|
| 1ம் இடம் | பரீட் | அரவிந்தன் |
| 2ம் இடம் | அரவிந்தன் | சுவிரகன் |
| 3ம் இடம் | பரணீதரன் | நிரோஷன் |

## மத்தியபிரிவு

| | பேச்சு | பண்ணிசை |
|---|---|---|
| 1ம் இடம் | பிரசாந்தன் | சூரிய பிரதாப் |
| 2ம் இடம் | ஸ்ரீரமணன் | ரமுணாகரன் |
| 3ம் இடம் | சூரியபிரதாப் | ஸ்ரீரமணன் |

| | கவிதை | கட்டுரை | சிறுகதை |
|---|---|---|---|
| 1ம் இடம் | T. கஜபாகு | S. கஜானன் | B.கிரிதரன |
| 2ம் இடம் | S.சூரியபிரதாப் | R.அர்ஜுன | B.கணேஸ்வரன் |
| 3ம் இடம் | S.சுபாசங்கர | M.பார்த்திபன் | N.ரமுனாகர் |

## மேற்பிரிவு

| | பேச்சு | பண்ணிசை |
|---|---|---|
| 1ம் இடம் | நிஷாந்தனன் | அருணன் |
| 2ம் இடம் | ஜெயப்பிரகாஷ் | விதூஷணன் |
| 3ம் இடம் | பிரசன்னா | திலீபன் |

| | கவிதை | கட்டுரை |
|---|---|---|
| 1ம்இடம் | P. பிரணவன்<br>A. ஹரிஷன் | M. பிரணவன்<br>P. பிரணவன் |
| 3ம் இடம் | T. T. பிரகாஷ்ன | T. ஸ்ரீகாந்தா |

| | சிறுகதை |
|---|---|
| 1ம் இடம் | R. விபுலன் |
| 2ம் இடம் | J. உமேஷ் |
| 3ம் இடம் | Y. திருச்செந்தூரன் |

பாடசாலைக்குள் நடாத்தப்பட்ட போட்டிகளில்
மேற்பிரிவில் 1ம் இடம் பெற்ற கவிதை

# புதியதொரு உலகம் படைப்போம்

♦ பொன் போன்று பளபளத்த
பூப்போன்ற மாளிகைகள்,
கண் பறிக்கும் நிலாவெளியும்
காற்று வரும் காணிகளும்,
மின் சுற்றுப் போன்றதொரு
விண் மீன் கூட்டங்களும்,
எண்ணத்தான் முடியாத
எண்ணிறைந்த அழகுகளும்,

♦ தேன் சொரிந்த தீவாகித்
திக்கெல்லாந் தென்றலுந்தான்
மான் கூட்டம், மரைக்கூட்டம்
மஞ்சள் நிலாப் பௌர்ணமியாம்.
தீனிக்குக் குறைவில்லை
தின்பதற்குங் குறைவில்லை
வேனிற் காலத்திலும்,
வெள்ளம் வரும் பெருமழையும்,

♦ செல்வமெலாம் செழித்துச்
சீரெல்லாம் ஓங்கியதும்
மெல்ல மெல்ல ஓரழிவு
மேதினியில் சூழ்ந்ததையா
உலகம் அழிவதென்று
உட்கார்ந்தார் சில மனிதர்
உண்மை அழிவதென்றும்
உட்கார்ந்தார் சில மனிதர்

♦ அலகிட்டு மெழுகிட்டு
ஆடினர், அது அக்காலம்
சில மொட்டுத் திரளெல்லாம்
சீறின, இது இக்காலம்
வளங்களெல்லாம் அழிந்தனவே
வன்மை யினம் செழித்தனவே
நிலங்களெல்லாம் நீறாகி
நிலைகெட்டுப் புன்மதியாய்,

♦ விளங்கினவே, வீடெல்லாம்
வீரங்கள் சோரம் போய்க்
களந்தனிலே கரம் வைத்தார்
காரிருள் சூழ்ந்ததென்று,
என் மனது புண்ணாச்சு
எல்லாமே பொய்யாச்சு
கண்ணினிலே இரத்தக்
கறையொன்று படிந்ததம்மா

♦ ஓடுகின்ற வாழ்க்கை ஓடம்
ஓடிஓடிக் களைத்துப் போய்க்
காடுகளைத் தாண்டிக்
கற்பனைகள் கட்டி
மேடு ஒன்று கண்டதம்மா
மேய்ந்து நின்ற ஆடுகளும்
சாவீடு நோக்கித்
தடம் புரண்டு தானோடி

♦ கா, கழனி, காடுகளாய்க்
கண்ட பின் சோர்ந்து
மா வினத்தோடு சேர்ந்து
மகிழ்வு வெள்ளம் கண்டதம்மா
சோர்ந்தனர் மக்களெல்லாம்
துணிவொழிந்து தேய்ந்து
மாய்ந்தனா எப்போதும்
மகிழ்ச்சி நிலை கெட்டதம்மா

♦ இனியெங்கு செல்வதம்மா
விதி இங்கு மாறியபின்
ஓடோடிக் களைத்து
ஓய்ந்து நிற்கையிலே
அழிவொன்று வந்ததம்மா
அழகான என் கூட்டின்
கிளி பந்து போனதம்மா
கீழ் நிலத்தில் நான் வீழ்ந்தேன்.

♦ எல்லாம் முடிந்ததம்மா
ஏர் கொண்டு உழவனிந்தப்
பொல்லாத வையகத்தைக்
காப்பதற்குப் போறானே
வெல்லத்தான் முடியாது
அழிவை நாம் என்றாலும்
வேண்டுமட்டும் சேவை செய்யும்
தேவை எமக்குள்ளதம்மா.


♦ தேவை எமக்குள்ளதனால்
சேவைகள் நாம் செய்வோம்.
எமக்காக அல்ல. இன்று
எம்மெதிரே சிறியவராய்
நிற்கின்ற சந்ததிக்கு
நிதம் நாம் தொண்டு செய்து
பொற் கற்கள் போலிந்தப்
பூமியை நாம் காப்போமே.

♦ நடந்தது நடந்ததம்மா
நாளையினி நடப்பதையே
திடங்கொண்டு செய்வோமே
தீரமிக்க இளைஞர்கள் நாம்
மனமொன்று நமக்கிருக்கும்
மாநிலத்தை உய்விக்க
தினந்தேடி அலையாமல்
சொல்லுகின்றேன் முடிந்ததம்மா.

P. பிரணவன்

*With Best Compliments From:*

**DISPENSARY & SURGERY**



*STATION ROAD, VAVUNIYA*



*With Best Compliments From:*

R.Amresh

***Year-2H***

*With Best Compliments From:*

# SARASWATHI STORES



*12, WOLFENDHAL STREET, COLOMBO-13.*
*T.P. 432035*

*With Best Compliments From:*


# Dianas

*Importers Dealers in Textiles Readymade Garments & Fancy Goods*

*188/4C, 1st Floor,*
*Keyzer Street,*
*Aslams Trade Centre,*
*Colombo-11.*
*Tel: 454349, 341426*

*With Best Compliments From:*

**Agila JEWELLEREY**



*11/11, SEA STREET, GOLD PLAZA SUPER MARKET*
*BASEMENT FLOOR, COLOMBO-11.*
*TEL. 473953*
*Res: 930963*

*With Best Compliments From:*

*Well Wisher*

பாடசாலைக்குள் நடாத்தப்பட்ட போட்டிகளில் மத்திய பிரிவில்

1ம் இடம் பெற்ற கவிதை

# இயற்கை

கிழக்கு வானம் சிவந்ததாம்
கிளிகள் பாடி பறந்ததாம்
அக்கினி குஞ்சது வானில்
அடிவயிற்றில் பிறந்தது

அலைகடல் பொங்கிட
கமலம் மலர்ந்திட
காகம் அது கரைந்தது
காசினியும் விழித்துக் கொண்டது

நீலவானம் விரித்திட
நீண்ட பனைகள் அசைந்திட
நிலமகளும் குழந்தைகளும்
நிமிர்வுடன் எழுந்தனர்

பூக்களோடு புல்லினதும்
புலர்ந்து கொண்டன
பூவாசம் வீசிட
பூவையரும் புனைந்தனர் பூமாலை


காட்டருவி பெருகிட
காளைகள் உழுதிட
நெற்கதிரும் தென்னையும்
நீளமான அரவமாய்

இயற்கை அன்னையின்
இனிய இன்பங்களை
இரசிப்பதும் உரைப்பதும்
இறைவனின் கொடையே

இயற்கையின் பஞ்சு கூட்டங்கள் யாவும்
கடுகணாவை போன்ற கரிகுகை போல்
மழை போல விழ்கின்ற அந்த ஒழுங்குகளையும்
யாரடா பார்ப்பது இந்த பாரினிலே?

மலை நாட்டு பகுதிகளில்
பச்சைபசேலெனறு குளிர்ச்சி தரும் தேயிலைகள்
என் சிந்தைகளில் இருக்கும் மலை பாறைகளும்
யாரடா பார்ப்பது இந்த பாரினிலே?

T. கஜபாகு



**Junior and Intermediate Committee - 2000**

Seated :- Y. Laharinian, S. Kiriharan, B.Parththiban, N.Neshanthanan, M. Branavan, Dilukshan

Stading (1st Row)L-R :- M.Umeshan, Yadava Prasath, Thivaharan, Sivashankaran, Aravinthan, Niroshanan, Aravinthan, Nirupan, Kowshikan, S.Ravishankar, Ashok.

Standing (2nd Row)L-R :- S.Arunan, Sivathushanan, Gogulavardhan, Vimalathithan, Nitharshan, Rahujan, Sindujan.

Standing (3rd Row)L-R :- Haresh, Nimala pragasan, Kishaan, Thirupparan, Venugopan, Parshothaman, Laavaniyan, R. Solan

Absenteese :- Palamayuran, Sri Ramanan

*With Best Compliments From:*

K.Balasubramaniam,

*98, Wolfendhal Street,*
*Colombo-13.*
*Tel: 436024*

*With Best Compliments From:*

*Shums & Co Ltd.*

*33A, Queens Road,*
*Colombo-03.*
*Tel: 580027*

*With Best Compliments*

*From*

# Hotel Westeern (Pvt) Ltd

Reg. No: N(PVS) 25749

- ***Sea Side Hotel***
  *Located at 1/4 Km away from Colombo's best shopping complex Majestic City Centre.*

- ***Facilities Are:***
  *A/C Rooms, Telephone, I.D.D., TV, Mini Bar, Restaurant, Bar, Room Service, Pool Tables, A Port Transfers, Rent-A-Car and Transport.*

- ***Food***
  *Eastern, Western, Chinese, Indian and Sri Lankan Cuisine.*

**35, Frankfurt Place,**
**Bambalapitiya,**
**Colombo-04.**
**Sri Lanka.**


**Tel : +94 1 507161**
**+94 1 507162**
**+074 518481**
**+074 518485**

**Fax: +94 1 507163**

**E-mail : info@hotelwesteern.com**
**Web: www.hotelwesteern.com**

*With Best Compliments From:*

**PI PRITHUVI INTERNATIONAL**



***Importors of Dried Fish***

*No. 15 & 48, Old Butcher Street,*
*Colombo-11*
*Tel: 440808, 332635, 338608*

*With Best Compliments From:*

**Kavivarnanas**
**Trading Centre**

*Hardware Paints, Aluminium, Electrical Parts, Cycle Parts,*
*Auto Parts & Aluminium Fittings*

*73, Hampden Lane,*
*Wellawatte,*
*Colombo-06.*

# விடியலின் வித்தைகள்

**பாடசாலைக்குள் நடாத்தப்பட்ட போட்டிகளில் மத்தியபிரிவில்**
**1ம் இடம்பெற்ற கவிதை**

கணவனை இழந்த கைம்பெண் போல!....
காரிருளில் முடங்கிக் கிடக்கிறது எம் வையகம்!....
விடியலை தேடி விழிக்க முயற்சிக்கிறது,...
பரந்த எம் வர்ணபூமி!...

மலர்கள் செங்கம்பளம் விரிக்க,...
இளந்தென்றல் குளிர்ந்து வீச!....
வானம் பாடிகளின வாத்தியங்கள் இசைக்க,...
வையகம் விடியலைத்தட்டி எழுப்பியது!....

இருண்டு கிடந்த உலகம் - அந்தக்!....
கதிரவனின் பொற்கதிர்களைககண்டு,...
மனதிலே மண்டியிட்டு - அவனை!
வணங்கி வரவேற்கின்றன!

விடியலைத் தேடி விரைந்த மாந்தர் !... அந்த!
தங்கப் பந்தைக் கண்டு தலை வணங்குவர்!
அகிலமே அக்கதிரவனை அகமகிழ்ந்து!
அன்புருக வரவேற்றது!....

இரவின் மடியில் தூங்கிய அகிலம்!....
பரபரப்புடன் இயங்கியது!.....
விடியலின் சாயலில்,.....
விசும்பு உயிர பெற்றது!.....

தன் வித்தை களால் - விடியல்,...
அகிலத்தை ஆதவனின் பொற்கதிர்களெனும்,....
கயிற்றால் கட்டிப்போட்டது!.... அதன்
வித்தைகளில் இந்த காசினி பிரமித்தது!.....

விடியலே நியில்லையென்றால்!...,
எனக்குக் கண்களிலிருந்து பயனில்லை!....
ஆதவனை காணா அகிலம்!....
ஆன்மா இலலாத யாக்கையைப் போன்றது!..

விடியலே உன்முன் நான் சிரம் தாழ்த்தி
உன்முன் நான் சிறுதுரும்பு!.... உன் சேவைகளும் - என்
ஆயிரங்கோடி வந்தனங்கள்!..

S. சூரியபிரதாப்

# கருவறையே கல்லறையானால் .......

ஈரைந்து மாதங்கள் இமையாது
காத்து நின்று: பத்து மாதங்கள்
பத்தியமாய்த் தவமிருந்து சுமையினிலே
ஒரு தனிசுகமாய் உணர்வலைகள் பொங்கிடவே
உத்தமியாம் அவளொருத்தி உருகி
நின்றாள் உளம் நிறைந்து.

சத்தியமாய்ச் சொல்லுகின்றேன் - அவள்
சொந்தமென நினைத்தது தன் உதிரத்துக்கருவினையே,
சிப்பியிலே முத்தொன்றைச் சிறப்பாக உருவாக்கி;
தரணியிலே தந்துவிட தாயான அவள் பாவம்
தள்ளாடும் போதெல்லாம் தீயாகச் சுட்டிடவே!
கருவறையிலிருந்துகொண்டே கண்ணீரைச் சொரிந்து கொண்டேன்

எத்தனை வேதனைகள் தத்தையிவள் தாங்கி - நின்று
பூமியிலே தன் புத்திர ஜனனத்திற்காய்
புளகாங்கிதமாய் இசை மீட்டி
மரணதேவதையின் வாசலிலே தடுக்கி விழுந்து
தானே புதுப்பிறவியாகித் தன் புதையலைப்பெற்றெடுத்தாள்
அக்கணமே தன்பிறவியின் பயன் இதுவன்றோ - என்று
எல்லையில்லா இன்பத்தில் மூழ்கி விட்டாள்.

புது உலகின் ஸ்பரிசங்கள் புதுமையாகக்கண்டுகொண்டேன்
பூவாக மலர்ந்துவிட்டேன் - எனி என் கடன்கள் எத்தனையோ!
சேயாகத தவழ்ந்துகொண்டேன், செந்தமிழைப்பயின்று கொண்டேன்
மாறாத மழலையிலே மலையொன்று தலை மீது ....
சிதறாத தலையை மெதுவாக நிமிர்த்தினேனா?
பாலெல்லாம் பாம்பாக தேனெல்லாம் நஞ்சாக
அன்னிடைப் புழுவானேன்! ஆண்டவனே! கேட்கின்றேன்?
என் கருவறையே கல்லறையானால் கலங்காதிருப்பேனே!

S. சிவசங்கரன
ஆண்டு - 06.

*With Best Compliments From:*

# Laavarnans Pharmacy And Grocery

*(Pharmacy, Giftners, Costmetics, Medical Equipment, Frozen Food)*

**Office:**
*No: 495, Havelock Road,*
*Pamankada,*
*Colombo-06.*
*Sri Lanka.*

**Residence**
*No: 40, Hampden Lane,*
*Colombo-06.*
*Sri Lanka.*
*Tel: 074-516205*

*With Best Compliments From:*

# Transteel Merchants

*General Hardware Merchants & Importers*

*325, Old Moor Street,*
*Colombo-12.*
*Telephone : 448781, 440951*
*Fax : 434282*

*With Best Compliments From:*

# Lalani Shachitra

*Travels & Tours (Pvt) Ltd.*

*No. 88, 1st Floor, Peoples Park Building, Colombo-11.*
*Tel: 074-710058    Fax: 074-710058*

## Lalani Shachitra Services (Pvt) Ltd.

*Recruiting And Ticketing Agent*
*125, Negambo Road,*

*Jaela, Sri Lanka.*
*Tel:234035*
*Fax:074831229*

*With Best Compliments From:*

MAX

# MULTIMEDIA SYSTEMS

*UG 36, Peoples Park Complex,*
*Colombo-11.*
*Sri Lanka.*
*Tel: 075 354553-4    Fax: 445659*

**E.mail: info@max.lk**
**Web:** ***http//www.max.lk***

*Come To Us We Will Introduce You To The WORLD!*

**இறுதி மூச்சுவரை எழுச்சியாக உயர்ந்து நின்று**
**உறுதியான கல்வியுடன் கலையதுவும் தனித்துவமாய்**
**மறுகாமல் மன்றினில் மணம் காக்கும் தமிழதையும்**
**அறுகுபோல் தழை வைத்த றோயல் கல்லூரியே நீ வாழி.**

என்றும்

கலை

எதிலும்

தமிழ்

உண்மை உயர்வு

காத்து

கலைவிழா காணும்

றோயல் மாணவர்களை வாழ்த்தி நிற்கும்,


*அறிவகம் குழுநிலைக் கல்வியகம் (கணனி)*
*78, இரத்தினம் வீதி,*
*கொழும்பு-13.*

ARIEVAKAM STUDIES OF ACCADAME,
78, Ratnam Road,
Colombo-13.

பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற போட்டிகளில மத்திய பிரிவில் 1ம்
இடம் பெற்ற கட்டுரை

# எமது சமயம்

இந்தியாவின் வடமேற்கிலுள்ள இமயமலையின் அடிவாரத்திலிருந்து அராபிக்கடலை நோக்கிப் பாய்கிறது. சிந்துநதி சிந்து நதியின் கரை யோரத்தில் வாழ்ந்த மக்கள் நாகரிகத்தில் தனி சிறந்து விளங்கினர். இவர்கள் பரம்பொருள் ஒன்று உண்டென நம்பினர். ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஒரு சமயத்தைத் தழுவியிருந்தனர். இவர்களின் சமயம் சிவனை முழுமுதள் கடவுளாகக் கொண்ட சைவமாகும்.

பின் காலச்செல்ல செல்ல இந்தியாவின் வடபகுதியிலிருக்கும் கணவாய்கள் வழியாக இந்தியாவில் குடியேறிய ஆரியர் இந்திரன், அக்கினி, வருணன் என்னும் இயற்கைக் தெய்வங்களை வணங்கினர். பின் காலப்போக்கில் இவர்களும் பரம்பொருள் ஒன்றே என உணர்ந்தனர்.

இந்தியாவின் பல பாகங்களிலும் பரம்பொருளை சிவன், சக்தி, விஷ்ணு, கணபதி, குமாரன், சூரியன் என்று அழைத்தனர். இதனால் முறையே சைவம், சாக்தம், வைணவம், காணபத்தியம், கௌமாரம், சொளரம் என்னும் பிரிவுகள் ஏற்பட்டன. இப்பிரிவுகளை உள்ளடக்கியதே இந்து சமயமாகும்.

இந்து சமயத்திலே மிகவும் சிறப்புப் பெற்றதும் பழையதுமானது சைவமாகும். சைவ சமய்த்த வர்கள் தமது முழுமுதற்கடவுளாக சிவனைக் கொண்டுள்ளனர்.

இச்சமயத்தின் இருகண்கள் போல் விளங்குவன வடமொழியாகிய சமஸ்கிருதமும் தென்மொழியாகிய தமிழுமாகும். இச்சமய உண்மைகளைக் கூறும் பிராமண நூல்கள் பல உள்ளன.

வடமொழியில் இச்சமய உண்மைகளைக் கூறுவன வேதங்களும், உபநிடதங்களும், சிவாகமங்களுமாகும். தமிழில் அமைந்தவை பன்னிரு திருமுறைகளும் பதினான்கு சித்தாந்த சாத்திரங்களுமாகும். எமது சமயத்தில் கடவுளர் பலர் உள்ளனர். இவை எல்லாம் பரம்பொருளுக்கு நாம் இட்ட பெயர்களாகும்.

இறைவனைத் தாயாக எண்ணுவோர் அம்பிகை என்று வணங்குகின்றனர். குழந்தையாக எண்ணு வோர். குமரன் என்று வணங்குகின்றனர். இவ்வாறு நாம் இறைவனை எந்தெந்த வடிவில் வணங்குகிறோமோ இறைவன் அந்தந்த வடிவில் வந்து நமக்கு அருள் புரிகின்றான்.

பரம் பொருள் என்று கூறுகிறோமே அப்பரம்பொருள் என்றால் என்ன? நாம் இருக்கும் பூமி சுழல்கிறது. இதனால் இரவுபகல் என்பன ஏற்படுகின்றன. வான் வெளியிலுள்ள சூரிய மண்டலங்கள் பல இயங்குகின்றன. நாம் அன்றாடம் வேலைகள் பல செய்கிறோம். இவை யாவும் ஒரு நியதியில் நடைபெறுகின்றன. இவை எல்லாவற்றையும் நடைபெறச் செய்வதற்குக்

காரணம் யார் இதற்குக் காரணமானதையே நாம் பரமபொருள் என்கிறோம்.

நாம் பரம்பொருளை நம்புகிறோம். சமயங்களைக் கடைப்பிடிக்கிறோம். இவற்றை யெல்லாம் விஞ்ஞானம் ஒத்துக்கொள்கின்றது. நாம் ஆணவம் அடங்கி ஒழுக்கமாக வாழவழி வகுப்பது "சிவவழிபாடு" ஆகும்.

நம் சமயத்தின் சிறப்புக்கள் பற்றி எம் முன்னோரான மெஞ்ஞானிகள் பல கருத்துக்கள் கூறியுள்ளனர். அவர்கள் ஒன்றேகுலம் ஒருவனே தேவன் எனக் கொண்டுள்ளனர். நாம் சிவனை வழிபடுவதன் மூலம் நம்முள்ளே உள்ள ஆணவம் நீங்கி நல்வழிபடுகின்றோம். நம்முள்ளே இருக்கும் தீயகுணங்களான களவு, பொய்பேசல், பெறாமை கொள்வன என்பன நீங்கப் பெற்று வாய்மை, நேர்மை, தூய்மை என்பன உள்ளவர்களாக நல்வழிப்படுகிறோம்.

தூய்மையான உள்ளத்திலேயே இறைவன் குடிகொள்வான் . எனவே நாம் சிவவழிபாடு செய்து தூய்மையாக இருப்போமானால் நாம் இறைவன் அருளைப் பெருவோம். இதுவே சைவநெறி யாகும்.

*With Best Compliments From:*

# M/S Saifi Trading Company

**House Of Quality Paper & Boards**

*39, New Moor Street,*
*Colombo-12.*
*Tel: 440795 Fax: 586473*

*With Best Compliments From:*

# Lanka Asiatic Corporation (Pvt) Ltd.

**IMPORTERS, EXPORTERS & GENERAL MERCHANT**

*32, Old Moor Street,*
*Colombo-12.*
*Sri Lanka.*

*T.P. Off : 432473*
*Res : 334360*
*Mobile : 071-51453*
*Fax : 00941-472890*

*With Best Compliments From:*

# ARB

- *Video Filming & Still Photo for any Occasion*
- *Audio Dubbing, Editing Mixing & Titling*
- *Audio & Video CD Sales*
- *Video Films, TV, Deck Lending*
- *Studio*
- *File Developing & Printing Photo Framing & Duro Guards*
- *Van for Hire*

**ARB**

*AUDIO, VIDEO Vision*
*358, Galle Road, Wellawatta, Colombo 06.*
*Tel: 505537, 505538, 074-516365*

*With Best Compliments From:*

**WE**

# WESTERN ENGINEERS

**General Hardware Merchants and Importers**
**Dealers in Hardware, Electricals,**
**Engineering Tools & Bearing's.**
**Suppliers to Govt., Boards & Corporations**

*355, 1/6, Old Moor Street,*
*Colombo 12.*

*Tel: 348315*

*With Best Compliments*

*From*

# ONGUARD FIRE PROTECTION SERVICES

FIRE EXTINGUISHING SYSTEMS......... ISLANDWIDE

- Fire Extinguishers & Trolleys
- Carbon Dioxide & Kitchen Hood Flooding Systems.
- Fire Clothing & Equipment
- Fire Demonstration & Training
- Fire Hose Reel, Hydrant & Sprinkler Systems
- Fire Detection & Alarm systems
- Lightning Protection Systems
- Fire Doors & Panic Hardware
- Photoluminiscent EXIT & Safety Signs

*FIRE PROTECTION, ENGINEERS & CONSULTANTS*

No. 238,
Ven. Hikkaduwe Sri Sumangala Nahimi Mawatha,
(Maligakanda Road)
Colombo-10.

Tel : 075-348992
Hotline : 072-274500
Fax : 074-612587

# போற்றுவார் போற்றட்டும் புழுதிவாரித் தூற்றுவார் தூற்றட்டும்

பாடசாலைக்குள் நடாத்தப்பட்ட போட்டிகளில் மேற்பிரிவில்
1ம் இடம் பெற்ற சிறுகதை

அழகிய கிராமம், பசுமை நிறைந்த மரங்கள், பச்சைப்பசேலென்று இருக்கும் வயல்வெளிகள், ஒற்றுமை நிறைந்த மக்கள், அவர்களுக்குத் தலைவராக ஒரு பஞ்சாயத்துத் தலைவர், இவ்வாறு அக்கிராமமே மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கியிருக்கும். வருடத்துக்கு ஒருமுறை தேர்வலம், திருவிழா, ஆஹா எண்ணவே ஆனந்தமாக இருக்கிறதே. மக்களுக்கு எவ்வாறு இருக்கும். இந்தப் "பூஞ்சோலை" கிராமத்தில் திருவிழா என்றால் நகர மக்கள் உல்லாசப் பயணிகள், என்று கூட்டமே திரண்டுவிடும். வீதி முழுவதும் அலங்காரப் பந்தல்கள் தண்ணீர் மோர்ப் பந்தல்கள் , அழகுசாதனப் பொருட்கடைகள், மண்பானைக் கடைகள் என்று சோலாகலமாக இருக்கும். இப்படிப்பட்ட பூஞ்சோலையில் பிரச்சினையே இருக்காது. அவ்வாறு ஏதாவது பிரச்சினையென்றால் பஞ்சாயத்தலைவர் சுலபமாகத் தீர்த்துவிடுவார்.

பஞ்சாய தலைவருக்கு வயது அறுபத்து எட்டு. அவர் திடீரென மாரடைப்பால் காலமானார். பூஞ்சோலைக்கிராம மக்கள் அனைவரும் பஞ்சாயத்தலைவர் மீது அன்பைப்பொழிந்தனர். அதேபோல அவரும் ஊர்மக்களின் நலனுக்காக பாடுபடும் அரிய மனிதன். அவருடைய மறைவைக் கேட்ட மக்கள் கதறிக்கதறி அழுதனர். ஊர் முழுதும் வெள்ளைக்கொடி பறக்கவிடப்பட்டது. அவருக்கு அஞ்சலி செலுத்துவதற்காக மக்கள் அலை போலத் திரண்டு வந்து கொண்டேயிருந்தனர். பஞ்சாயத்துத் தலைவரின் ஈமைக்கிரியைகளை முடித்த பின்னர் அனைவரும் சோர்வோடு தத்தம் வீடுகளுக்குச் சென்றனர். இரு கிழமைகள் கழித்து பஞ்சாயத்துத் தலைவரின் வீட்டு வாசலில் முழுச்சனமும் திரண்டிருந்தது. தலைவர் குடும்பத்துக்கோ ஒன்றும் புரியவில்லை. பின்னர் தான் புரிந்தது அது என்னவென்று. மக்கள் அடுத்த பஞ்சாயத்தலைவர் யார் என்பதைக் கேட்கவே அங்கு வந்திருந்தனர். பஞ்சாயத்துத்தலைவர் இறந்தால் அவருடைய மனைவி ஊர்வழக்கப்படி அப்பதவியை ஏற்கவேண்டும். ஆனால் அவருடைய மனைவி மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இறந்துபோனாள் தலைவருக்கு மூன்று பிள்ளைகள். மூத்தவன் பெயர்ரவி, அடுத்தவன், கமலன், எல்லோரிலும் இளையவன் முகுந்தன், ரவி நன்று படித்தவன். பண்பிலும் சிறந்து விளங்கினான். ஊர்மெச்சும்படி நடந்து காட்டுபவன். தந்தையைக்கூட மிஞ்சும் அளவுக்கு இருந்தான் ரவி. எனவே அவன் தான் பஞ்சாயத்துத் தலைவர் தவிக்குப் பொருத்தமானவன் என மக்கள் தீர்மானித்தனர். ஊர்மக்களின் வேண்டுகோளுக்கிணங்க அவன் தன்னுமடைய பதவியை ஏற்றுக் கொண்டான். காலம் உருண்டோடியது.

ரவியுடைய தலைமைத்துவத்தின் கீழ் பூஞ்சோலை கிராமம் அமைதியுடன் விளங்கியது. அது மறுபடியும் மகிழ்ச்சிக் கடலில் நிறைத்தது... இப்பொழுது ரவிக்கு வயது ஆக இருபதெட்டு. ஆனால் அவன் தனது திருமணத்தைப் பற்றி யாரிடமும் ஒன்றும் கூறவில்லை. அவனுக்கு சகோதரர்கள் கமலனும், முகுந்தனும் இருக்கைகள் போல விளங்கினார். நாட்கள் வாரங்களாகி, வாரங்கள், மாதங்களாகி, மாதங்கள் வருடங்களாயின. ரவிக்கு வயது முப்பத்தொன்று ஆனது அவனது மாமியார் திருமணவயதுக்கு ரவி வந்துவிட்டான். அவனுக்கு பெண் பார்க்க வேண்டுமென்று நினைத்தான் ஆனால் ரவியோ தனக்குத் திருமணமே வேண்டாமென்று கூறி விட்டான்.

புதிதாக பூஞ்சோலைக்கு ஒரு பெண் உதவியின்றி தன்னந்தனியாக வந்தாள். மக்கள் அவளுக்குக் குடிசை அமைத்து தங்குவதற்கு இடங்கொடுத்தனர். நாலிடம் விசாரித்துப் பார்த்ததில் அப்பெண் விபச்சாரி என்பது தெரியவந்தது. பூஞ்சோலை கிராமத்திலே

நடக்காத ஒரு சம்பவம் நடந்து விட்டதாக மக்கள் எண்ணினர். அவளை இழுத்துக்கொண்டு போய் தலைவரான ரவியின் முன் நிறுத்தினர். இவளைக் கொள்ளவேண்டுமென்றால் ஒருத்தி இவளை ஊரைவிட்டு அனுப்பவேண்டுமென்றால் இன்னொருத்தி. ஆனால் தலைவர் கூறியதைக்கேட்டு அதிர்ச்சியும், தலைவர் மீது ஆத்திரமும் கொண்டனர். அப்படி அவர் என்னதான் கூறினார், "அப்பெண் உதவி யின்றி வந்திருக்கின்றாள். அவர் வேறு எங்கு போவாள். எனவே அவள் இங்கேயே தங்கட்டும். " இது தான் அவர் கூறியது.

அப்பெண் நகர்ப்புறத்தைச் சேர்ந்தவள். மிகவும் வறிய குடும்பத்தில் பிறந்த அவளை தாயும் தந்தையும் அவளை ஒரு சுமையாகக் கருதி வீதியில் விட்டுச் சென்றனர். அவள் அங்கே பிச்சை எடுத்து காலத்தை ஓட்டினாள். பருவ வயதை அடைந்த அப்பெண்ணுக்கு துணைக்கு யாருமில்லை. ஒருநாள் இருவர் வந்து அவளை ஒதுக்குப்புறமாகக் கடத்திச் சென் றுகெடுத்தனர். அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. தனது கற்பு பறிபோனதை எண்ணி வருததப்படவில்லை. தாய் தந்தையர் மீது வெறுப்பு அடைந்தாள். மதிப்பில்லாத தனது கற்பை வைத்து தொழிலலில் இறங்குவேன் என நினைத்தாள். தனது உடம்பைப் பிறருக்கு விற்று தனது காலத்தை ஓட்டினாள். இப்பொழுது அவள் பயப்படத்தேவையில்லை. ஏனெனில் அவளது கற்பு அவளோடு இல்லையே! இதன் பின் அவள் பூஞ்சோலை கிராமத்துக்கு வந்தாள்.

சிறிது நாட்களாக இரவில் தலைவர் ரவி எங்கோ செல்வதை எல்லோரும் கண்டனர். ஒருநாள் சகோதரர் இருவரும் அவனுக்குப் பின்னால் போய் பார்த்ததொழுது அவர் தாசி குலத்தைச் சேர்ந்த அப்பெண்ணுடன் நன்கு பழகிக்கொண்டிருந்ததைக் கண்டு ஆத்திரமடைந்தனர். விஷயம் காட்டுத்தீ போல் வேகமாகப் பரவியது. மக்கள் இரவியைக் காறித்துப்பினர். தந்தை இருந்திருந்தால் இவ்வாறேல்லாம் நடந்திருக்குமா என்றெல்லாம் கூறினர். ஆளுக்காள் ஒவ்வொரு விதமாகக் கதைத்தனர். அவன்மீது வைத்திருந்த நம்பிக்கை எல்லாவற்றையும் கழித்தனர். பஞ்சாயத்துத் தலைவர் பதவிக்கு காமம் கொண்டவன் பொருத்தமில்லையென பேசினர். ஆனால் ரவியோ தொடர்ந்து அப்பெண்ணுடைய வீட்டுக்குப் போய்க்கொண்டிரந்தான். சிறிது நாட்கள் கழித்து அப்பெண்ணுடன் மாலையும் கழுத்துமாக வந்து நின்றான். சிறந்த அப்பனுக்கு இப்படியோர் பிள்ளையா என்று கோபம் கொண்டனர்.

இப்பொழுது ரவி பேசத் தொடங்கினான். "நான் வாழ்க்கையில் ஒரு பெண்ணையும் நினைக்கவில்லை முதன்முதலாக இவளைப் பார்த்த போது எனக்கு இவள் மீது காதல் பிறந்தது. அத்தோடு உங்களைப் போல் இவள்மீது ஆத்திரம் ஏற்படவில்லை. அனுதாபம் தான் ஏற்பட்டது. இவளது நிலையில் இருந்தால் நீங்களும் இதைத் தான் செய்திருப்பீர்கள். இப்பெண் தன்னை விற்றாலும் பிறரிடம் கையேந்தாமல் வாழ்ந்தாள். தன்னம்பிக்கையோடு வாழ்ந்தாள். இப்படிப்பட்ட பெண் மனைவியாகக் கிடைத்ததற்கு நான் கொடுத்து வைத்திருக்கவேண்டும். இந்த விஷயத்தை உங்களிடம் கூறலாமென்று இருந்தேன். நீங்கள் முந்தி விட்டீர்கள். நீங்கள் நல்லவர்கள் என்று நினைத்தேன். எங்களுக்கு மனதேயில்லை என இப்பொழுது புரிந்துகொண்டேன். அவள் ஒரு துணைக்காகத் தான் ஏங்கினாள். இப்பொழுது அவளுக்கு நான் கிடைத்து விட்டேன். அவள் திருந்தி விட்டாள்" என்று கூறி முடித்தான். பின்னர் அவன் மனைவியுடன் அக்கிராமத்தை விட்டு தனியாகச் சென்றான்.

"போற்றுவார் போற்றட்டும் புழுதிவாரித் தூற்றுவார் தூற்றட்டும்"


R. விபுலன்
ஆண்டு - 9 "R"

*With Best Compliments*

*From*

**Mr. M.R.M. Fahumudeen**

Chemistry Teacher



**SANGAM**
*Wellawatte*

**BRILLIENT**
*Kotahena*

**ZEC**
*Kandy*

*With Best Compliments From:*
om shanti

# MINCKEY

*With Best Compliments From:*

# ALBA Video Centre

*Head Office & Residence:*
*94, Meeraniya Street,*
*Colombo-12. Tel: 440510*


ALWAYS REMEMBER
THE ONE AND ONLY NAME FOR QUALITY
VIDEO FILMING AND PHOTOGRAPHICS


*With Best Compliments From:*

*PLAZA COMPLEX*

# SUSILA GOLD HOUSE

**22 CT FINE JEWELLERY**





***35/6, (INSIDE) GALLE ROAD,***
***WELLAWATTE, COLOMBO-06.***
***TEL: 594790***

*With Best Compliments From:*

# V.Kishaan

***O/L 2001***

*With Best Compliments From:*

# NISHAAN LANKA

## *Consortium (Pvt) Ltd*

*34, St. Sebastion Road, Wattala, Sri Lanka.*
*Tel: 074-810524 Fax: 94-74-810524*
*E-mail: brahma@slt.lk*
*Exporters of Foodstuffs, Spices & Newspapers*

*With Best Compliments From:*

BAMBALAPITIYA FLATS

# MILK BAR

**Dealers In:**
***Softdrinks, Milk Products and Short eats.***

***280, GALLE ROAD,***
***COLOMBO-04.***

*With Best Compliments From:*

MTC

# MASS TRADING COMPANY

***Dealers in: Copper, Zine, Brass Alaminium & Hardware Etc.***

***8/A, Abdul Jabbar Mawatha,***
***Colombo-12.***
***(Quarry Road)***
***Tel: 430405***

*With Best Compliments From:*

*Om Shanthi*



## Mr.Premmnath *B.Sc*

***Sangam***
***Wellawatte***

***Arul Study Circle***
***Kotakena.***

*With Best Compliments From:*

# A Royalist

*With Best Compliments From:*

# K.V.KUGGATHARAN

***B.Sc (cey), Dip. In Education, M.A. (Ed) (Prim)***
***Teacher : S.Thomas College, Mount Lavinia***
***Insitute for Biological Education***

*79/9, W.A.Silva Mawatha,*
*Colombo-06.*
*Tel: 01-593169*

# நான் விரும்பும் பெரியார்

பாடசாலைக்குள் நடாத்தப்பட்ட போட்டிகளில் கீழ்ப்பிரிவில்
1ம் இடம் பெற்ற கட்டுரை.

நான் விரும்பும் பெரியார் சுவாமி விபுலாநந்தர் ஆவார். சுவாமி விபுலாநந்தர் மட்டக்களப்பு நகருக்குத்தெற்கே, கல்முனை என்னும் பட்டினத்திற்கு அணித்தேயுள்ள காரைதீவில் 1892ம் ஆண்டு சாமித்தம்பிக்கும் கண்ணம்மைக்கும் அருமகனாகப் பிறந்தார். இளவயது முதற்கொண்டே விபுலானந்தர் கல்வியில் சிறந்து விளங்கினார். இவரது பத்தாம் வயதில் இவருக்கு கணிதம் புகட்டிய ஆசிரியர்கள் இவரது கணித ஆற்றலைக் கண்டு வியந்தனர். சுவாமி விபுலாநந்தர் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் பெரும் புலமை ஈட்டினார். அத்துடன் ஏனைய பலமொழிகளில் பெரும் புலமை பெற்றிருந்தார். சுவாமி விபுலாந்தர் 1922ம் ஆண்டு இந்தியாவில் உள்ள இராமகிருஷ்ண மடத்துறவியானார்.

சுவாமி விபுலாநந்தர் சிறந்த அதிபர், சிறந்த ஆசிரியர், சிறந்த கலைஞர், சிறந்த கவிஞர், சிறந்த ஆராய்ச்சியாளர் சிறந்த விஞ்ஞானப் பட்டதாரி சிறந்த தமிழ்ச்சங்கப்பண்டிதர், தமிழ் ஆங்கிலப்பத்திரிகைகளில் எழுதுபவர், சிறந்தத் தமிழ்ப்பேராசிரியர். இவரே உலகின் முதல்த்தமிழ்ப்பேராசிரியராகவும் கடமை புரிந்தார். இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் கொழும்புப்பல்கலைக்கழகத்திலும் கடமையாற்றினார்.

இவர் சிவாநந்த வித்தியாலயத்தினைக்கட்டி சில ஆண்டுகளாக அங்கு கடமையாற்றினார். இவர் புனித மைக்கேல் கல்லூரியிலும், புனித சம்பந்தரிசியார் கல்லூரியிலும் ஆசிரியராகக் கடமையாற்றினார்.

சூழ்வுணவுத்தான் கிடைத்தாலும் தமிழ்த்தாயின் அருள் எனக்கருதி அதனை ஏற்றுக்கொண்டு விரிந்த முறையில் தமிழ்த் தொண்டாற்றினார். இவர் தமிழில்லாத கலைகளை தமிழ்ப்படுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். விஞ்ஞானக்கல்வி தமிழுக்கு அந்த நியமானதல்ல என்று கூறி அதனை மிகுந்த உற்சாகத்தோடு மொழிபெயர்த்தார்.

இவர் எழுதி நூல்களுள் இசைத்தமிழ் நூலான யாழ் நூலும் நாடகத்தமிழ் நூலும் மதங்கசூளாமணியும் சிறந்து விளங்குகின்றன.


இவர் 1947 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19 ஆந் திகதி இறைவனடி சேர்ந்தார். இவரது நினைவுச்சின்னங்களாக சிவானந்த வித்தியாலய வளவில அமைந்துள்ள சமாதியும், விபுலாந்தர் இசைக்கல்லூரியும் விளங்குகின்றன. இவரது இறப்புத்திரனத்தினம் தமிழ் மொழித்தினமாக விளங்குகின்றது.

சிவலிங்கம் சிவகாந்தன்
6Q

*With Best Compliments*

*From*

# BE. ES. EN. TRADERS



**IMPORTERS OF PRINTING PAPERS, PRINTING MACHINES, PRINTING INKS & SNOW WHITTE BRAND PHOTO COPY PAPERS.**



AGENT FOR RECKITT & CLOMAN OF CEYLON LTD.

**Tel: 330297, 335008, 348418-9**
**Fax: 449809**
**Mobile: 077-307283**

**276, Wolfendhal Street,**
**Colombo-13.**
**Res. Tel: 581560**

# ஆரியர் வருகையும் இந்துசமயமும்

இந்து சமயமென்பது சைவம், சாக்தம், வைணவம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் என்னும் 6 பிரிவுகளைக் கொண்ட சமயம். அது வைதீகம் எனவும் பெயர் பெறும். மிக மிக முற்காலத்தில் இந்தியநாடு முழுமையிலும் தமிழ் இனத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்தார்கள். கி. மு. 2000 ஆண்டளவில் ஒரு புதிய சாதியினர் இந்தியாவை அடைந்தார்கள். இவர்களைப்பற்றி அறிந்து கொள்வது இந்து சமயத்தைப் பற்றி விளங்கிக்கொள்வதற்கு இன்றியமையாததாக இருக்கின்றது.

கஸ்பியன் கடலுக்கும் கருங்கடலுக்கும் இடையில் வெண்ணிறமுடைய ஒரு சாதியர் வாழ்ந்து வந்தனர். இவர்கள் ஆடு, மாடுகளை நம்பி அவை கொடுக்கும் பயன்களைக்கொண்டு வாழ்பவர்காக இருந்தனர். கி மு. 2500 இல் இயற்கை மாறுபாட்டால் இப்பிரதேசத்தில் பெரு வறட்சி உண்டாயிற்று. ஆகவே அங்குள்ளோர் பல கூட்டங்களாகப் பிரிந்து ஐரோப்பிய நாடுகளுக்கும் பாரசீகத்திற்கும் சென்றார்கள். பாரசீத்திலிருந்து சிலர் கைபர்க் கணவாயூடாக இந்தியாவின் வடமேற்குப் பகுதியை அடைந்தனர். இவர்கள் ஆசிரியர் எனப்பட்டார்கள். இவர்கள் வரும்போது இந்தியா நாடு மக்கள் நடமாடாத இடமாக இருக்கவில்லை. அங்கு உயர்ந்த நாகரிகம் படைத்த மக்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இவர்களின் நாகரிக உயர்வைப்பற்றி ஹரப்பா, மொஹெஞ்சதாரோவிற் கிடைத்த தொல் பொருட்களும் ஆரியர்களின் பழைய பாடல்க ளாகிய வேதங்களும் வெளியிடுகின்றன.

(ஹரப்பா, மொஹெஞ்சதாரோ நாகரிக காலம் கி. மு. 3500 – கி. மு. 2000 ஆகும்.)

இருக்கு வேதத்தின் மொழிக்கும் பழைய பாரசீக செண்டு மொழிக்கும் உள்ள ஒற்றுமைகளைக் கொண்டு ஆரியர் இந்தியாவிற் புகுமுன் சில நூற்றாண்டுகள் பாரசீக ஆரியர்களுடன் ஒன்றாக வாழ்ந்தார்களென்று உய்த்தறியப்படுகின்றது. ஏனெனில் நான்கு வர்ணங்கள், உபநயனம், 33 தேவர்கள் யாகங்களில் உபயோகிக்கப்படும் மந்திரம், சோமம், ஹோதா முதலியன இந்திய ஆரியருக்கும் பாரசீகருக்கும் பொதுவாகக் காணப்படுகின்றது.

ஆரியரின் சமயம், பண்பாடு, மொழி முதலியன அவர்கள் வரும்போது அங்கு வாழ்ந்து கொண்டிருந்த மக்களின் சமயம், பண்பாடு மொழிகளிலும் வேறுபட்டிருந்தன. தமிழர் சிவவழிபாட்டினர். ஆரியர் இயற்கைப் பொருட்களையும் வியப்பளிக்கும் இயற்கை நிகழ்ச்சிகளையும் தேவர்களாகக் கொண்டு வழிபடுவோராக இருந்தனர். அவர்கள் சிவனை வழிபடவில்லை. தமிழர் கோயில்கள் அமைத்து திருவுருவங்கள் வைத்துப் பூசைகளையும் விழாக்களையும் நடத்திக் கடவுளை வழிபட்டனர். ஆரியர் யாகசாலைகளில் தீவளர்த்து மந்திரங்களைச் சொல்லிற் தேவர்களை அழைத்துப் பலியாக உணவைத் தீயிலிட்டு அவைகளை மகிழ்வித்தனர். ஆரியர்களின் வழிபாட்டு முறைகளையும் தெய்வங்களையும் உள்நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆரியருக்கு வேதமும், தமிழருக்கு ஆகமமும் பிராமணமாக இருந்தன.

வெளியினின்றும் வந்த மக்கள் சிறுதொகையினராகவும் உள்நாட்டு மக்கள் பெருந்தொகையினராகவும் இருந்தனர். இருவேறு மக்களும் உறவாடிக் கலந்தனர். வடக்கே மொழி ஆரியமாகிக்கொண்டு வந்தது. சமயமும் பண்பாடும் தமிழ் மயமாகிக்கொண்டு வந்தன. பழைய மக்களின் பழங்கதைகள் தெய்வங்கள் கிரியை முறைகள் என்பன ஆரியர் சமயத்திற் புகுந்தன. தமிழர் அறிந்திருந்த தத்துவஞானங்களையும் அவர்கள் சிறிதுசிறிதாக அறிந்தார்கள். அவர்களின் சமயம் யாகம் புரிவதிலிருந்து தத்துவஞானக் கொள்கையுடையதாக மாறிக்கொண்டும் சைவசித்தாந்த ஞானத்தை அணுகிக்கொண்டும் வந்தது.

இவ்வாறு இந்தியாவிற் குடியேறிய ஆரியர்கள் வட இந்தியாவை பெருமளவு ஆக்கிரமித்துக் கொள்ள வடஇந்தியாவிலிருந்த தமிழினத்தவர்கள் தென்னிந்தியாவிலும் சிலர் இலங்கையிலும் குடியேறினார்.

இந்துசமயம் இலங்கையில் பரவுவதற்கு இந்நிகழ்ச்சி முக்கிய காரணமொன்றாக அமைந்தது. இலங்கைத் தமிழர் பெரும்பாலும் இந்துசமயத்தின் பிரிவான சைவசமயத்தை பின்பற்றினாலும் இந்துசமயத்தின் ஏனைய பிரிவுகள் இங்கு பரவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

செ. கீர்த்தன்

உயர்தரம்-2001

கணிதப்பிரிவு

*With Best Compliments From:*

# Vidhie Academy

*128, New Chetty Street,*
*Colombo -13.*
*Tel: 343020*

*With Best Compliments From:*

# C.SIVASAMY & COMPANY

**CUSTOMS HOUSE CLEARING AGENTS**

(Regd. No. D/CHA/160)

A/G/3, SANCHIARACHCHI GARDEN,
COLOMBO-12.
Phne: 449371/324615
Fax: 94-1-335673

# வாழ்வியல் சிந்தைகளில் மானிடம்

'மானிடம்' என்ற பதம் மனிதனின் 'மானுஷத்' தன்மையைக் குறிப்பதுவாகும். 'மனிதனை, அவன் இயல்பினை , அவன் ஆக்கத்தினை சமயம், வரலாறு, இலக்கியம், கலை ஆகியவற்றின் மையக் கருத்தாகக் கொள்ளும் மெய்யியலும், கண்ணோட்டமும் மானுடம் எனப்பெறும்', எனத்தனிநாயக அடிகளார் தமிழில் மானுடம் பற்றிய தமது சொற்பொழிவிற் குறிப்பிட்டுள்ளமை எடுத்துக்காட்ட தகுந்தது. இதனை ஆங்கிலத்தில் Humanism என்பர். பண்டைய இலக்கியங்கள் முதல் இன்றைய இலக்கியங்கள் வரை இம்மானுடம் குறிப்பான இலக்கியப் பொருளாக இலைமறைகாயாகக் காணப்படுவது வண்மையெனினும் அதனை திட்டவட்ட மானவோர் இலக்கியப் பொருளாகக் காணும் இலக்கிய நோக்கினை காலஞ்சென்ற ப. ஜீவானந்தத்தின் எழுத்துக்களிலும் புதுக் கவிதைத் துறையாளர்களின் பிரகடனங் களிலும் ஆக்ககங்களிலும் நாம் கண்டுணர்ந்து.

தமிழ் இலக்கியம் மானுடத்தின் எழுச்சித் தரவாக அமையவேண்டுமென்ற கருத்தியற் கோட்பாடு தெட்டத்தெளிவாக ஐயந்திரிபற்ற இலக்கியக் கோஷமாக முன்வைக்கப்பட்டது, அண்மைக் காலத்திலேயெனினும் 'தமிழ் நாட்டு மனித வளர்ச்சிகளைப் பற்றிப் பாடும் இலக்கியம்' என்ற வகையில் தமிழ் இலக்கியம் தனக்கே உரிய வகையில் மானுடக் குரலை எழுப்பிவந்துள்ளது என்பது உண்மையே!

சங்க இலக்கியத்தின் அடிப்படை நாதமாகிய மானுடநெறிப்பாட்டை எடுத்து நோக்குவோம்.

'மானிடம்' என்றொரு வாளும் – அதை

வசத்தில் அடைத்திட்ட வன்இரு தோளும்

வானும் வசப்பட வைக்கும் – இதில்

வைத்திடும் நம்பிக்கை, வாழ்வைப்பெருக்கும்.

மானிடருக் கினி தாக – இங்கு

வாய்த்த பகுத்தறி வாழ்விழி யாலே

வான்திசை எங்கணும் நீ பார்! வாழ்வின்

வல்லமை "மானுடத்தன்மை" என்ற புரட்சிக்கவி பாரதிதாசனின் "மானுட சக்தி" யின் இன் சொட்டுக்கள் மானுடநெறிப்பாட்டை எடுத்தியம்புகிறது,. இப்பரட்சிக்கவியின் மானுட சக்தியானது சங்கஇலக்கிய மானுடநெறிப்பாட்டின் அங்க மாகக் கருப்படக்கூடியது சங்க இலக்கியமானது அதிகார்ர வரன்முறைப்பட்ட சமூக ஏற்றத் தாழ்வுகளை ஏற்றுக்கொண்ட ஒரு சமூக அமைப்பையே சித்தரித்துக் காட்டுகிறது. ஆனாலும் அதன் அடிநாதமாக அமையும் இலக்கிய கோட்பாட்டில், அதாவது அகத்தினை இலக்கிய மரபில் மனித வளர்ச்சிகளின் பின்னணி பற்றிக் குறிப்பிடப் பெறும் பொழுது தெய்வங்கூட வளர்ச்சியின் பின்னணியில் இடம்பெறும் ஒன்றாகவே குறிப்பிடப்பட்டுள்ள தன்மையை நாம் இலக்கிய நூல்களில் காணலாம்.

அகத்திணைப் பாடல்களுக்கான முதல், கரு, வரியில் மனிதநடவடிக்கையே முக்கியம் பெறுவதையும், ஆனால் அது இயற்கையால் கட்டுப்படுத்தப்பட்டவொரு நடவடிக்கயைாக இருத்தலையும் நாம் உற்றுநோக்கலாம். ஆனாலும் துலக்குழுநிலைச் சமுதாயத்தில் இது தவிர்க்கமுடியாதென்பது பலரின் அபிப்பிராய மாகும். ஆமாம்! இயற்கையை மனிதனால் ஆட்சிசெய்ய முடியாத விடத்து, அவன் இயற்கையால் ஆளப்படுவது இயல்பாகும்.

நாம் சமய, அற இலக்கியங்களை நோக்கும் போது அவை சில சமூக பண்பாட்டு வகை மாதிரிகளை நிலைநிறுத்தவே விரும்பியுள்ளன என்பது தெட்டத்தெளிவாகின்றது. உலகப் பொதுமறை நூலான திருக்குறள் தனி மனித நிலைநின்ற ஒரு சமூக நோக்கையும் நிலைநிறுத்த முனைகிறது எனலாம். பக்தி இலக்கிய வெளிப்பாட்டில் மானுட நிலையில் மாத்திரமே வைத்து விளங்கிக் கொள்ளக் கூடியதான தனிநிலைப்படுத்தப்பட்ட மானுட அந்தரங்க உறவு நிலை தொனிப்பதை நாம் கவனிக்கத்தவறுதல் கூடாது. திரஞானசம்பந்தர் தேவாரங்களிற் காணப்படும் தன்னிலைப்படுத்தப்பட்ட உவகையுணர்வும், சுந்தர மூர்த்திநாயனாரின் தேவாரங்களில் மெய்சிறந்து விளங்கும் தோழமை யுணர்வும் மானுடப்பண்பினை உணர்த்துகின்றன. தெய்வத்தை நோக்கி 'வாளாங்கிருப்பீர் திருவாரூரில் வாழ்ந்து போதிரே' என்று கூறத்தக்க அளவிற்கு தெய்வம் பற்றிய உணர்வும்கூட கேண்மையுணர்வுடையதாக இருக்கின்றது.

இலக்கியத்தில் தெய்வத்துடன் தொடர்புள்ள நூல்களுள் ஒன்றான கம்பராமாயணம், அதன் பாத்திரச்சித்தரிப்பிலும் உணர்வு வெளிப் பாட்டிலும் இலக்கியப்பரப்பு முழுவதிலும் மிகச் சிறந்து விளங்குவதற்கு வைணத்தின் அடிப்படையான அவதாரக் கோட்பாட்டினை ஏற்றுக்கொள்வதால் வரும் ஆதார சுருதியான மானுட நிலையே காரணமாக இருக்கலாம் எனப்படுகிறது. கம்பனின் மானுட நேசத்தை புகழக் கூடியளவிற்கு அப்பெருங் காவியத்தில் மானுட நேசப்பொருள் விறகில் தீயாக நிற்கின்றது.

"தேறினன் – அமரர்கு எவ்லாம் தெவர் ஆம் தேவர் அன்றே மாறி, இப்பிறப்பில் வந்தார் மானிடர் ஆகி மன்னோ" ஆறு கொள் சடிலத்தானும், அயனும் என்று இவர்கள் ஆதி வேறு உள குழுவையெல்லாம் மானுடம் வென்றது அன்றே". என அவதாரக் கோட்பாடு மானுடக் கோட்பாட்டுக்கு கம்பராமாயணத்தின் இப்பாடல் வழிவகுத்ததை காணலாம்.

இலக்கிய சூழலில் மதம், சமூக சீர்திருத்தக் கருத்துக்களை உள்ளடக்கிட நின்றமைக்கு சித்தர் பாடல்கள் உன்னதமான எடுத்துக் காட்டுகளாகத் திகழ்கின்றன.

"மனிதனுக்கு மேலொரு தெய்வமும் இல்லை – இந்த

மானுடம் போலொரு மெய்மையும் இல்லை

மனிதன் இயற்கையின் எதிரொலிச் சின்னம் உழைப்பு

மனம் இல்லையேல் அவன் விலங்காண்டி இன்னும்"

என்ற பாடலில் மனிதரிடையே நிலவ வெண்டிய சமத்துவமும், மனிதன் என்ற உயிர்பிறவி பற்றிய மதிப்பும், மாண்புணர்வும் காணப்படுவதை நாம் காணலாம். இலக்கிய சூழலில் இதனை மானுடப்பண்பின் வெளிப்பாடாகவே கொள்ள வேண்டும்.

மேலும் நாம் முப்பத்தொன்பது வருடங்கள் மாத்திரமே பாரினில் வாழ்ந்த பாரதியாரின் பாடல்களில் மானுடப்பண்பினை நன்கு காண முடிகின்றது. ஆனால் அந்த மானுட தாகம் உலகளாவிய மனிதன் பற்றியதாக இருக்க வில்லை என்பது உண்மையே! ஆனால் அவரால்

அவரது இலக்கிய உந்தலினால் வெளிவந்த இலக்கியம் சார்ந்த அரசியல், அரசியல் சார்ந்த இலக்கியம் எனுமிரண்டையும் இணைத்த இயக்கத்தின் முன்னணி வீரர்களுள் ஒருவராக விளங்கிய திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரின் எழுத்துக்களில் மானுடம் முக்கிய இடம்பெறுவதைக் காணலாம்.

மார்க்சீயச் சிந்தனை மரபில், மானுடம் என்பது மனிதனுக்குரிய கௌரவத்தை, தன்வாழ்க்கைச் சூழலைத் தானே மாற்றியமைக்கும் திறனுடைய அவனது ஆற்றலை, அந்த ஆற்றலை அவனுக்கு வழங்கவும், வளர்க்கவும் வேண்டிய அறநன்னெறிப் பெறுமானங்களைப் பற்றியறிதலும் அவற்றின் தொழிற்பாட்டை விதந்து கூறுதலுமாகும். எனவே மாணவர்களாகிய நாளைய தூண்கள் எமக்கு அளிக்கப்படும் கல்வி மிதமிஞ்சிய தொழினுட்ப அறிவுக்கு மாத்திரமல்லாது, மானிடப் பண்புகளை எடுத்து இயம்பும் கல்வி நெறிகளாகவும் அமைய வேண்டும்.

தெ. சுவாகிதன்
விஞ்ஞான பிரிவு
உயர்தரம் - 2002

*With Best Compliments From:*

CHS

COLONIAL HARDWARE STORES

***Importers, Distributors & General Hardware Merchants***

*427, Old Moor Street, Colombo-12.*
*Tel: 431950, 435414, 347981, 347983, 347989,*
*424562, 321144, 075-330778, 075-330768*
*Fax:334090 E-mail : Colonial@.slt.lk*

**Branches:**

***138, Sri Sumanatissa Mawatha, Colombo-12.***
***Tel: 334197, 074-710201, 074-610545, 074-610302***
***Fax: 074-610260***

***461, Old Moor Steet, Colombo-12.***
***Tel: 338010, 338011***

ANOMA HARDWARE STORES

*369, Old Moor Street, Colombo-12.*
*Tel: 470430, 471002*
*Fax: 471003*

**PIONEERS IN QUALITY HARDWARE**

*With Best Compliments From:*

**SAYONARA MANAGEMENT CONSULTANTS**

*47-3rd Floor, Super Market Complex,*
*Borella, Colombo-08.*
*Tel: 688248, 679666, 679655, 671352, 683534*
*Hotline: 077-311125*

*With Best Compliments From:*

# PRATHA TRADING COMPANY

***Suppliers to Confectioners & Bakers,***
***Importers of all kinds of food colours***
***Essence chemicals etc.***

***No. 64, Dam Street,***
***Colombo-12.***
***Sri Lanka.***

***T.P.: 445626, 074-61518***

*With Best Compliments From:*

## K.Nagarajan

A/L 2001 (Bio)

# வரலாறு கூறும் பெண்ணின் மகத்துவம்

(சமயம், இலக்கியம் போன்ற துறையினூடு ஒரு கண்ணோட்டம்)

சங்க காலந் தொடக்கம் 20ம் நூற்றாண்டு வரை மண்ணில் மானத்தையும், வீரத்தையும், ஒழுக்கம் பொருந்திய காதல் வாழ்க்கையும் கொண்டு காவியம் படைத்திட்ட எம் தமிழ்ப் பெண்களின் மகத்துவம்.

மனித குலத்தின் சிறப்பிடம் பெண். அவள் அன்று தொடக்கம் இன்று வரை செய்து வரும் தொண்டுகள் அளப்பரியன. பண்டை நாளில் நம் தமிழ் சமுதாயத்தில் கல்வியில் பெண்களும் உயர்நிலை அடைந்திருந்தனர். ஔவையார் ஒருவரே அதற்கு போதிய சான்றாவர். சிறுவரையும் பெரியோரையும் நன்நெறிப்படுத்தியது அவரது பாடல்கள். பெண்களை ஒழுக்க நெறியில் இருந்து வழுவாத காத்தது. அரசனை நீதியில் வழுவாது காவல் புரிந்தது. இப்பெண்ணின் மகத்துவத்தை உணர்ந்தமையினால் அன்றோ நீடிய ஆயுள் அருளும் வலிமை மிக்க நெல்லிக்கனியை அதிகமான் ஔவையாருக்கு அருளினார். எம் தமிழ்ப் பெண்கள் வாழ்க்கையில் பொறுமை, பண்பு, அன்பு என்னும் நற்குணங்களால் தானும், தன்னை சுற்றி இருந்தவர்களின் வாழ்க்கையை செழுமைப்படுத்தி தமிழ் என்னும் தற்குலத்தை வளர்த்திருக்கின்றார்கள்.

இவற்றை க் கண்ணுற்ற அண்ணல் காந்திமகான் "ஓர் ஆடவன் கற்றால் அவன் மட்டுமே கற்கின்றான் ஆனால் ஒரு பெண் கற்றால் கற்றாலோ ஒரு குடும்பமே கற்கின்றத" என்று பெண்ணின் மகத்துவத்தை உலகத்தோருக்கு எடுத்துரைத்திருக்கின்றார்.

அப்படி இருந்த போதிலும் பெண்கள் தம் வாழ்க்கையில் கண்ட வேதனைகளும் சோதனைகளும் எத்தனையோ? ஆயினும் கலங்கிடாத அவர்களின் உண்மை, பொறுமை என்னும் நற்குணத்தைக் கொண்ட பல அரிய பெரிய காரியங்களைச் சாதித்திருக்கின்றார்கள். அன்னியனால் சிறை பிடிக்கப்பட்டு ஊராரின் பழிச்சொல்லுக்கு இலக்காகி, கணவனை பிரிந்த சீதை எதிர்நோக்கிய சோதனை, கானகத்தில் கைவிடப்பட்ட தமயந்தியின் வேதனை, தன்னை விட்டு வேறு பெண்ணை நாடிய போதும் கற்பில் உறுதியுடன் கணவருக்காக மதுரையை எரித்த கண்ணகியின் சோகக்கதை என்பன போன்ற மாதர் குல மாணிக்கங்கலாத் திகழ்ந்த எத்தனையே பெண்களின் மகத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றன.

"அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் இகழ்வாரைத் தொறுத்தல் தலை" என்ற பொய்யா மொழிப் புலவரின் குறளுக்கு ஏற்ப தம்மை இகழ்வாரை, வெறுத்தோரை, குணம்கெட்ட திரிந்தோரை. கொடுமை பல இழைத்தோரை பொறுமையுடன் சகித்து, அன்புடன் அரவணைத்து எம் வருங்கால.சமுதாயத்தை உருவாக்கிறது எம் பெண் இனம்.

இடைகாலத்தில் ஏனோ பெண்களின் நிலை மறுதலைடைந்து "பெண்புத்தி – பின்புத்தி", "அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பதற்கு" என்று கூறி அவர்களின் மகிமையை உணராது அவர்களை ஒதுக்கியது சமூகம். ஆனால் அவற்றிலும் அவள் குடும்ப விளக்கானால்! குடும்பத்தை இயக்க வைத்தால்! குடும்ப முன்னேற்றமே தனது குறிக்கோளாக கொண்டால்! குடும்ப முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம், அப்படியாயின்

முன்னேற்றமான குடும்பத்தின் அச்சானி அமுதூட்டும் அன்னையே!

"கொண்டவர் கெது பிடிக்கும்
குழந்தைகள் எதை விரும்பும்
தண்டுன்றி நடக்கும் மாமன்
மாமிக்கு தக்கதென்ன?
உன்பதில் எவரும்புத் கெது
உதவாது என்று எல்லாம் கண்டனர்
கறிக்கள் தோறும்
உண்பவள் தம்மைக் கண்டாள்"

என்ற மிக அழகாக அமுதுட்டும் அன்னையின் மகத்துவத்தைப் பற்றி பாரதிதாசன் தம் பாடலில் கூறுகின்றார்.

மேலும் பெண்ணின் மகத்துவத்தை உணராது அடக்கி ஒதுக்கப்பட்ட பெண்களின் நிலைகண்டு பாரதியார் போன்ற புரட்சி கவிஞர்கள் வீறு கொண்டனர்.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்ட மறிவினில் ஆணுக் கிங்கே பெண்
இளைப்பில்லைக்கான் என்று கும்மியடி"

என்ற பாரதியாரின் விரமொக்கெற்ப, தம்காலத்தில் மீண்டும் பெண்கள் சகல துறைகளிலும் முன்னேற்றம் அடைந்து வருகின்றனர்.

அர்த்த நாதீஸ்வரர் என்ற இறைவனின் அவதாரத்திலிருந்து "சிவனின்றேல் சக்தியில்லை சக்தியின்றேல் சிவன் இல்லை" என்ற தத்துவத்தை உணர்ந்ததிலிருந்து எம்மை ஆளும் ஆண்டவனே தன் உடல் மறுபாதியாக அம்மையைக் கொண்டவராம் உலக சீவராசிகளிற்கு அருள்புரிகின்றார். இவ்வாறே இன்றைய உலகிலும் ஓர் சிர்பெற்ற குடும்பத்தில் ஆணும் பெண்ணும் கணவன் மனைவியாக, தாய் தந்தயராய் காதலன் காதலியாய் அர்த்தநாதீஸ்வரராகச் செயற்படுகின்றனர்.

உலகை ஆளும் முப்பெருந்தெய்வங்கள் ஆன பிரம்மா விஷ்ணு, சிவன் ஆகியோரின துணைவிகள் முப்பெர தேவிகளான சரஸ்வதி, லக்சுமி, துர்க்கா ஆகிய ஒர மனிதனுக்கு தேவையான கல்வி, செல்வம், வீரம் ஆகியனவற்றைத் தந்து முழு மனிதன் ஆக்க அருள் புரிகின்றன.

கணவனைத் தன் அன்பிற்குள் கட்டுப்படுத்தி, குழந்தைகளை நல்வழிப்படுத்தி. நெறி பிறழாத வாழ்வு வாழ்ந்து பெருமை தேடிய பெண்கள் கல்வியறிவை வெறும் ஏட்டுச் சுரக்காயாகப் பயன்படுத்து பயன்புடுத்தாது, பெற்ற அறிவை வாழ்வில் பயன்படுத்தி "மங்கையராய் பிறந்திடவே நல்ல மாதவம் செய்திட வேண்டும்" என்று கவிஞர் போற்ற வாழ்ந்த எம் பெண்ணினத்தின் மகத்துவத்தை இன்றை இனம் பெண்கள் சிரமேற்கொண்டு வாழவேண்டும்.

"சக்தி இன்றேல் சிவம் இல்லை சிவமின்றேல் சக்தி இல்லை"

ம. பிரதீப்
வர்த்தக பிரிவு
A/L 2002

## சில புராண நூல்களும் அவற்றை இயற்றியவர்களும்

| புராண நூல்கள் | நூலாசியரியர் |
|---|---|
| பெரிய புராணம் | சேக்கிளார் |
| கந்த புராணம் | கச்சியப்ப சிவாச்சாரியர் |
| சேய்த்தொண்டர் புராணம் | தேனூர்வரகவி – சொக்கலிங்கனார் |
| திருவிளையாடற் புராணம் | பரஞ்சோதி முனிவர் |
| அருணாசல புராணம் | சைவஎல்லப்ப நாவலர் |
| திருவானைக்கா புராணம் | கச்சியப்ப முனிவர் |
| புள்ளிருக்கு வேளூர்ப்புராணம் | முத்துவடுக நாத தேசிகர் |
| பழநித்தல புராணம் | பாலசுப்பிரமணிய கவிராயர் |
| திருவிரிஞ்சைப்புராணம் | சைவ எல்லப்ப நாவலர் |
| மயூரகிரிப் புராணம் | சுப்பிரமணிய பிள்ளை |
| திருத்தணிகை புராணம் | கந்தப்ப தேசிகர் |
| திருப்பரங்குன்றத்தல புராணம் | நிரம்ப அழகிய தேசிகர் |

## கீதையில் பகவானுக்கு அமைந்த நாமங்கள்

| | |
|---|---|
| கிருஷ்ணன் | அழுக்கை போக்குபவன் துயரம் துடைப்பவன் |
| கேசவன் | மும்மூர்த்திகளை வசமாய் வைத்திருப்பவன் |
| அச்சுதன் | நிலை வழுவாதவன் |
| கோவிந்தன் | ஜீவர்களை அறியும் சக்தி உள்ளவன் |
| மதுஸுதனன் | மது எனும் அரக்கனை அழித்தவன் |
| வாசுதேவன் | உயிர்களிடத்திலும் இருப்பவன் |
| புருஷோத்தமன் | பரப்புருஷன் |
| பகவான் | ஷட்குண சம்பன்னன் |
| விஷ்ணு | எங்கும் வியாபித்திருப்பவன் |
| யாதவன் | யது குலத்தில் உதித்தவன் |
| யோகேஸ்வரன் | யோகத்திற்கு தலைவன் |
| ஜகத் நிவாசன் | உலகுக்கு இருப்பிடம் |

## அட்ட வீரட்டானங்கள்

புராண அடிப்படையில் சிவபெருமான் எட்ட இடங்களில் வீரச் செயல்கள் புரிந்துள்ளார் இந்த எட்டு இடங்களையும் "வீரட்டானங்கள்" என்று குறிப்பிடுவார் சான்றோர்.

1) பிரமனின் தலை கொய்த இடமான திருக்கண்டியூர்

2) அந்தகாசுரனைக் கொன்ற இடமான திருக்கோவலூர்

3) திரிபுரமெரிக்க துணை நின்றதும், எல்லாத் தலங்களிலும் அதிக மாட்சிமையுடையதுமான திருவதிகை

4) தக்கன் தலை கொய்த இடமா திருப்பறியலூர்

5) சலந்தாசுரனைக் கொன்ற இடமான திருவிற்குடி

6) கயாசுரனைகொன்று யானைத்தோல் போர்த்திய இடம் வழுவூர்

7) நிட்டையை கலைத்த மன்மதனை எரித்த இடமான திருக்குறுகை

8) மார்க்கண்டேயருக்காக காலனை உதைத்த இடமான திருக்கடவூர் ஆகிய இந்த எட்டு திருத்தலங்களும் சிவனுக்கு அமைந்த அட்ட வீரட்டானங்கள் ஆகும்.

## "மனம் தானே காரணம"

எல்லா உயிர்களுள்ளும் பிரம்மம் பிரகாசிக்கின்றது. நாம் எல்லாருமே நான் என்கின்றபோது மார்பை தொட்டுக்காட்டுகிறோம். அங்கே தான் பிரம்ம சொருபம் ஆத்ம சொருருபமாக பிரகாசிக்கிறது. பிரம்மத்தை இருதயம் என்பதுமுண்டு. அகம் என்னும் நான் சூட்சுமமானது. அதுவே ஆத்ம சொருபம். அதனையே துரியாதீதம் என்றும் இருதயாகாசம் என்றும் மனாகாசம் அல்லது ஞானவெளி என்றும் பலவாறு சொல்வார்கள்.

அகத்தின் கண்ணே பூசிக்கத் தெரியாமையால் தான் நாம் விக்கிரகங்களில் ஆவாகித்துப் பூசிக்கிறோம். நம்மை நாம் அறிந்து கொண்டால் எல்லாம் அறிந்தவர்களாவோம். சுய ஆத்ம பாவனையை மறவாதிருப்பதே கடவுட்பூசை என்று சொல்ல வேண்டும். அதுவே தவமும் ஆகும். தியானத்தின் போது எத்தனையோ ரூபங்கள் தோன்றலாம் . ஆனால் அவற்றின பின்னே மனதினை செல்ல விடாமல் ஆத்மவடிவாகிய தன்னிலேயே நிறுத்தி, நடக்கும் யாவிலும் ஒரு சாட்சி அளவாய நிற்றல் வேண்டும். இப்படி இருதயத்திலும் உள்ள அகவடிவின் கண்ணே மனதை இருத்துவதே யோகம், தியானம், ஞானம், பக்தி, மந்திரம், செபம் யாவும ஆகும். மனம் அடங்கினால் யாவும் அடங்கும். யாவும் வசப்படும்.

– ரமணமகரிஷி –

## மாணவமணிகளே! கவனியுங்கள்!

புத்தகம் படிக்கும் போது "விளையாட்டு ஞாபகம் வருகின்றது" என்கிறீர்கள். வகுப்பில் பாடத்தை கவனிக்கும் போது "சினிமா ஞாபகம் வருகிறது" என்கின்றீர்கள். ஒன்று கேட்கிறேன்! விளையாட்டு மைதானத்தில் உங்களுக்கு பாடத்தின் நினைவு வந்த துண்டா? சினிமா பார்க்கும் போது பாடத்தைப் பற்றிய நினைவு வந்ததுண்டா? இல்லையே! ஏன் ..........? அவற்றில் நீங்கள் ஒன்றி இருக்கிறீர்கள். அதனாலே வேறு ஞாபகம் வருவதில்லை. படிக்கும் போது அப்படி மனம் ஒன்றி ஈடுபடவில்லை அதனால் மனம் அலை பாய்கிறது அவ்வளவு தான்.

தினமும் சிறிது நேரம் காலையிலும் மாலையிலும் அமர்ந்து தியானம் செய்யுங்கள் அது உங்கள் மனதினை மெல்ல மெல்ல ஊன்றிக் கொள்வதற்கு பழகிக்கொடுக்கும்.

– சுவாமி சிம்மையானந்தா –

ௐ

# என்றும் தாழாத சைவம்

சிந்துநதியின் பாகாய் உங்கள் தாயாய்
நின்றுநிலைத்திடும் சமயம் அது என்றுமுயர்ந்திடும் சமயம்
காரிருளானாலும் விஞ்ஞானம் வளர்ந்தாலும்
பொய்யுண்டாகாத சமயம் அது உங்கள் சைவசமயம்

கவலையை உண்டாக்கும் செல்வம்
நல்மகிழ்ச்சியும் உண்டாக்கும் செல்வம்
பேராசை உண்டாக்கினாலும் என்றும்
அன்பை உண்டாக்காத செல்வம்

அன்பையும் சிவனையும் ஒட்டி
அன்று பாடினர் கவிஞர்கள் வாழ்த்தி
அன்பு இல்லாவிடில் மனதில்
என்றும் சிவமும் இருக்காது அகத்தில்

சம்பந்தர் அப்பர்பாடி அன்றுயர்ந்தசமயம்
வாலியும் கம்பரும்பாடி அடுத்துயர்ந்த சமயம்
நாவலர், சதாவதானி போற்றி இன்றுயர்ந்தசமயம்
நாளை யார்பாடி வாழ்வுயரும் அந்த சைவம்?

நவரத்தினராஜா ரமுனாகர்
ஆண்டு :- 8 "R"

# ஆசிரியர்கள்

ஆசிரியர்கள்
மாணவ நிலங்களில்
மாணிக்க விதை நடும்
மரியாதைக்குரியவர்கள்

தவழும் பிள்ளையைத் தூக்கி விடுபவர்கள்
வாய்க்குள் விரல் விடும் வயதில்.......
பேனை பிடிக்கும் லாவகத்தைப்
பிஞ்சு விரல்களுக்குப் போதிப்பவர்கள்

நடக்கக் கற்பிக்கும் நல்லவர்கள !
பேசக் கற்பிக்கும் பெரியவர்கள்!
விழுந்து கிடக்கும் ஒவ்வொரு பொழுதும்
விரல்கள் பிடித்து எழுப்பிப்பவர்கள்!

அவர் தம் கரங்கள் அதிசயமானவை;
அவை தோற்கிற போது
தட்டிக் கொடுப்பவை!
வெல்கிற போது கட்டித் தழுவுபவை.

ஆசிகள் அளிப்பதில் அவர்
அதி முக்கியமானவர் என்பதால தான்
அவரை நாம் "ஆசிரியர்" என்றே
அழைக்கத் தொடங்கினோமோ!!

மாணவர்கள் .....
ஆசிரியர் சொத்து!
ஆசிரியர்களோ .....
அனைவரதும் சொத்து

ஆசிரியர் இல்லையென்றால் .....

பேறு நிறைந்த பிள்ளைகளேது?!

அறிவு நிறைந்த அகிலமேது?!

மனங்குளிரும் மக்களேது?!

ஆசிரியர் இல்லையென்றால் .....

இருள் தவிர்ந்த ஏதும் ஏது?!

செழுமைமிக்க உங்கள் சேவைக்கு இந்த

அகிலத்திலேது வேறு நிகர்?!!

உண்மை இது தான் மாணவர் வெற்றி

பாடசாலையின் வெற்றி!!

பாடசாலையின் வெற்றி!!

ஊரின் வெற்றி

ஊர்களின் வெற்றி

தேசத்தினதே வெற்றி !!!

அந்த ஊற்றுக் கண்

ஆசிரியர்களே

M. R. M றிபாஸ்

ஆண்டு 8 R

றோயல் கல்லூரி.

*With Best Compliments From:*

**D-MOBILE**
(PRIVATE) LIMITED

**Authorised Dealer for
Dialog GSM**

*506 & 508, Havelock Road, Colombo-06.
Tel: 94-1-551444 Fax: 94 1 551044
Hotline - 077-381381 Mobile -077-359666
E-mail: 359666@dialog.lk*

*With Best Compliments From:*

MODERN PLASTICS CENTRE

*Distributor for*

F. M. J. PLASTICS, YOGHURT CUPS
AND ALL PLASTICS ITEMS

*No. 60, DAM STREET,
COLOMBO-12.
SRI LANKA.*

*PHONE : 320296, 433016*

# சிவன் எங்கே ?

சிவன் எங்கே!

சிவபெருமானே .....
சிவபெருமானே .....
நீ எங்கே போனாய் .....
உன்னைத் தேடித் தேடிக்
களைத்து விட்டேன்
சிவபெருமானே ..... - நான்
என்ன குற்றம் செய்தேன்
ஒரு கொஞ்ச பிழை கூட
செய்யாத என்னிடம் - உன்
உருவத்தை மறைக்கிறாய் - அதுவும்
என் நெஞ்சத்தை வருத்துகிறாய்
என் ஆனந்தத்தை வாங்குகிறாய்
என் உயிரை வாங்குகிறாய்
உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன்
உன் உருவத்தைக் காட்டு

க. சித்தார்த்தன்
3 - H

# ஒரு வேத்திய இந்துவின் சுயசரிதை

இந்துவே!
உன் பவித்திரமானகைகளால்
உலக ஆசைகளெனும்
கட்டுக்களை அறுத்தெறிந்து
என்னை விடுவித்தாய்!
என்னுள்ளேயுள்ள
குறைபாடெல்லாம் நீக்கி
மறைபொருள் அறிவித்தாய்!
இதுவரை காலமும்
பேதைபோல் நான்வந்த
பாதை தவறென்று அன்று
சுட்டிக் காட்டினாய்!தருமமே நேர்ப்பாதை
எனவுரைத்து, இன்று
அன்பெனும் முத்தை
என் உள்ளத்தில்
கட்டிப்பூட்டினாய்!

இந்துவே! நீயளித்த
போதனைகளை படித்தபின்பே
நான் சவால்களைக் கூட
சாதனைகளாக்கினேன்!
ஆழ்கடலின் மேலே,
அலைக்கரங்களால் அடிபட்டு
அல்லலுறும் தோணியாய்
நானிருந்த வேளை,
கலங்கரை விளக்கமாய்
கைகொடுத்தாய்! நீ
காலைச் சூரியனாய்
ஒளிகொடுத்தாய்!

இந்துவே!
இருண்ட வானமாயிருந்த
என்னுள்ளத்தில் நீ
ஞானசூரியனை உதிக்கச்
செய்தாய்! அஞ்ஞான
இருள் நீக்கி, மெஞ்ஞான
ஒளியூட்டி, உயர்வான
வழிகாட்டி நின்றாய்!
என்னுள்ளம் அதனையே
அன்பாலே வென்றாய்!

இந்துவே! உனது
உபதேசங்கள் எனக்கு
புத்துயிர் கொடுத்தன!
பரவோதும் பூங்குயிலின்
புதியராக கீதம் போலும்,
பண்ணிசையின் இனிமையில்,
புதுமை போலும், என்றும்
உன் போதனைகள் இனிக்கும்!
இந்துவே! உன் வயதைக்
கணிப்பிட முனைந்த நான்,
ஆதித்தனின் பவித்திரமான
ஒளிக்கதிர்களைக் கணக்கிட
வேண்டிவந்த நிலையை,
கனவிலும் மறக்கமாட்டேன்!
நாடி வந்தார்க்கு இல்லையென்று
வாரித்தந்த பாரி போன்ற
இந்துமதமே! நீ மெஞ்ஞானம்
வேண்டிவருவார்க்கெல்லாம்,
நல்வழி காட்டுவதற்காகவே
கர்ணனாய் இருக்கிறாய்!

சிந்துவெளியில் துளிர்ந்த
இந்துவே! என் உயர்விற்கும்
உழைப்பிற்கும் உரமிட்டது
நீதான்! அதனால் என்
அன்புக்கும் பண்புக்கும்
கனவிற்கும் பணிவிற்கும்
என்றும் உரியவன் நீதான்!
என் வாழ்நாள் முழுதுமென்னை,
இந்துவாய் வாழ வைத்த
இந்துவே!
இன்னும் எத்தனையோ
இளைஞர் ஆசைக்கயிற்றால்,
கட்டுண்டு நிற்கின்றனர்!
நீ அவர்களையும் காப்பாற்று!
இல்லை! இல்லை!
நீ அவர்களைக் கட்டாயம்
காப்பாற்றத்தான் வேண்டும்!

வி. விமலாதித்தன்
10 "Q"

*With Best Compliments*

*From*

# GOLDEN GATE AGENCIES

**CLEARING & FORWARDING AGENCIES**

52/1, HOSPITAL STREET,
COLOMBO-01.

பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில், கீழ்ப்பிரிவில் முதலாம் இடத்தை
பெற்ற கவிதை

# பயமெனும் பேய்தனை அடிப்போம்

"உங்கள் வாழ்வு பாதையிலே பயம் உண்டு".
"அந்த பயமே பேய்கள் என்று"
"பேயென்றால் பயந்தோடும் நீங்கள்"
"இப் பாரிலே" வாழ தெரியாதவர்கள்.

"வாழ்கை எனும் படியினிலே பேய்கள் உண்டு".
என்போர் இன்றோர்"
"அது எல்லாம் நிம்மதி அற்றப் பொய்".
என்போர் அன்றோர்.

"நெஞ்சத்தை நிமிர்த்தி விடுவீர்கள்"
"பேய்கள் அழித்து விடிவீர்கள்!".
"அழித்தால் வாழ்ந்து விடுவீர்கள்"
"அழிக்காவிட்டால் இறந்து விடுவீர்கள்"

"பேய்கள் பேய்கள் என்று என் வரிகள் கூறுகிறது"
"அப் பேய்களே பயமென்று நான் கூறுகின்றேன்".
"வாழ தெரிந்தவர்களுக்கு பலம் இருக்கும்"
"வாழ தெரியாதவர்களுக்கு பயம் இருக்கும்".

"பொய்யினால் ஆன வாழ்க்கை இவை"
"பொய்யினால் ஏற்பட்ட பொய்கள் இவை"
"பேய் என்றால் ஏங்கும் நெஞ்சங்கள் உண்டு"
"அப் பேயினால் ஆன மாயா ஜாலங்களும் உண்டு"

"வன மோகினி என்போர் பயந்தோர்"
"அவை யாவும் பொய் என்போர் அறிந்தோர்"
"பேய்களே உலகத்தை ஆளுகின்றது என்பது பயந்தோர் வாக்கு"
"இவை யாவும் பொய் என்பது அறிந்தோர் வாக்கு"

"பயம் என்னும் பேய்களை அடிக்க எழும்புங்கள்"
"விறுவிறு பாக வேலை செய்யுங்கள்"
"அன்பு ஒற்றுமை என்பவற்றை பேணுங்கள்"
"பேய் என்ற சொல் பொய் என நிலைநாட்டுங்கள்"

"கடவுளே உலகத்தை பிறப்பித்தார்"
"இவரே உல்கத்தை வாழ்வித்தார்"
"இவரே மனிதர்களை உருவாக்கினார்"
"இவரே பயம் என்னும் பேய்களை அடித்துவிடுவார்"......

ரா.ஸ்ரீநாத்
பரி.தோமாவின் கல்லூரி
கல்கி

# தாயும் ஆனவன்

♦ உள்ளம் என்னும் நதியினிலே
ஊற்றெடுத்த தமிழ் விதையினிலே
அள்ளிப் பேனா முனையினிலே
அற்றுகின்றேன் கவியினையே!

♦ பதி ஆகிய பரம சிவன்
பசு ஆகப் புவி வந்த ஆன்மாவின்
சதியாகிய பாச பந்தங்களின்
மாசு நீங்க வைத்திடும் தாயுமானவனே!

♦ கதியாலே குவலயம் சுற்றி வரின்
கனி தன்னை அளிப்பேன் என மொழிந்து
மதியாலே சிவனொடு உமையைப் பவனி வரக் ~ கரிமுகர்க்கு
கனி தன்னை அம்மையாகி ஈந்தவனே!

♦ பதியாகிப் பத்தின் தன்னொடு ஏகி
ஏரியில் சம்பந்தர்க்கு ஞானப்பால் ஊட்டியவனே!
புத்தியாலே கௌஷிகர் ரிஷியாகிட
திரியாக மாறிட வைத்தவனே!

♦ கதியோடு யாத்திரை தான் சென்ற
அப்பர் எனும் நாயனார்க்கு
பொதிசோறு தனைத் தாங்கி நின்று - தாயன்பு
தப்பிடாது காத்த தாயவனே!

♦ இரணியன் மகனாய்ப் பிறந்திட்ட
பிரகலாதன் துன்பம் துடைத்திடவே
நாசிம்மன் என அவதரித்த
கரையிலாக் கருணைத் தாயவனே!

♦ பால் வேண்டி அழுத பாலகனின்
பசி தன்னை நீக்கி அருள்ந்திடவே
நால் வேதம் உரைக்கும் நாயகன் - மனம்
கசிந்து பாலீந்த பாற்கடற் தாயே!

♦ புவனம் தன்னில் வேதமொடு
புராணங்கள் உரைக்கின்ற அருள்நிதியே!
பவனம் என எங்கும் நிறை
புதுமை அவனெம் அன்னையனே!

♦ ஊழ்வினை தன்னால் நாம் படும்
அல்லல்கள் தன்னை நீக்கியிங்கே
வாழ்வாங்கு வாழ வைத்திடவே
அன்னையாய் எங்கும் நிறைந்தவனே!

♦ மேதின் தன்னில் எமை இன்று
மனிதனாக்கிய மாண்புடையோன் - பாவ
தீதினிலிருந்து எம்மை இனி
புனிதனாக்கும் மாதாவவன்!

♦ அவனியில் நிறைந்த அற்புதனே
அனைவர்க்கும் அன்பினைச் சொரிந்திட்ட
சிவனின் நமக்கும் அன்னையென
நினைந்திடின் பிறவி நீங்கிடுமே!

♦ பாலின்றித் தவித்த பன்றிக் குட்டிகட்கு
பால் தன்னை ஈந்து உயிர் காத்திட
பாற்கடல் தாங்கிய பரமன் அன்று - அன்னையெனும்
பன்றியென உதித்த பண்புடையாளன்!

♦ பாய்ந்திடும் பாச ஆழியவன்
பாவ வினைகள் அறவே
ஓய்ந்திடும் போது ஓடிவந்து ~ அன்னையென
ஜீவனைக் காத்திடும் 'அன்பு' கங்கை!

♦ அருள் தனை வழங்கி எமை
மாயை எனும் மங்கிய
மருள் தனில் இருந்து காத்திடவே வந்த
தாயை உயிரென வழிபடுவோம்!

♦ பாசுபதம் வேண்டிட்ட பார்த்திபனிற்கு
பாசமொடு அதனை ஈந்திடவே
பரமன் வேடனென உமையொரு ஏகி
பாணத்தை ஈந்த நற்தாயவனே!

♦ தாய் என ஆகிய சிவ ஜோதியை
பற்று நீங்கி வணங்கி நாமே
சேய் என அவனைப் பற்றிடுவோம்!
மற்றையவை எமக்கினி அவனல்லவா?!

~ கஜவதனி
சாந்த கிளெயார் கல்லூரி

# சித்தர்கள்

**"சித்தர்கள் உடல் வருத்தி
வாடி உயர்நெறி சேருவர்"**

" தற்காலத்திலும் அதாவது இருபதாம் நூற்றாண்டைக் கடந்து இருபத்தோராம் நூற்றாண்டில் காலடி எடுத்துவைத்து ஒன்பதே மாதங்கள் ஆகும் இவ்வேளையிலும் பெரும்பாலான மேலை நாட்டவர்கள் பாரதமணித் திருநாட்டை நாடி வருகின்றார்கள் எனில் அதற்குக் காரணம் அங்குள்ள இயற்கை எழில் நிறைந்த பொழில்களைக் கண்டுகளிக்கும் பொருட்டு மாத்திரமல்ல இந்தியாவில் சிறப்புற புகழ்பெற்று விளங்கும் யோகாசனத்தைப் பயில்வதற்கும் ஆகும். அண்மையில் அதாவது புதிய 'டைட்டானிக்' திரைப்படம் புகழ் பெற்ற காலத்தில் அப்படத்தின் கதா நாயகி கேத் வின்ஸ்லெட் யோகாசனம் பயில்வதற்காக இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தமை அனைவரும் அறிந்ததே இவ் யோகாசனமும், சித்த மருத்துவமும், இந்தியத் தேசியக் கலையான வர்மமும் சித்தர்களால் அருளப் பட்டவை ஆகும் "

பக்தர்கள் கடவுளைக் காண முயற்சி செய்கின்றார்கள். சித்தர்கள் கடவுளைக் கண்டு ஒளிர்ந்தவர்கள் என்று தேவாரப்பாடல் கூறுகின்றது.

சித்தர்கள் தங்கள் ஆத்ம சாதனைகளின் மூலம் அரும்பெரும் சித்திகள் பெற்று முக்தி எனும் அழிவற்ற அமரநிலை எய்தப் பெற்றவர்கள். இவர்களையே அநுபூதிமான்கள் என்றும் கூறுவர்.

சித்தர்கள் என்ற சொல்லுக்கு சித்தி பெற்றவர்கள் என்பது பொருள். அதாவது வீடுபேற்றை அடைந்தவர்கள் என்றே கூறலாம். இந்த உடல் இருக்கும்போதே முக்தி அடைந்தவர்களை சீவன் முக்தர்கள் என்று அழைப்பர். சித்தன் வாழ்வு என்பது முருகப் பெருமானது கோயில். தமிழகத்தில் திருவாவினன் குடிக்கு முற்காலத்தில் சித்தன் வாழ்வு என்று பெயர் இருந்தது. திருமுருகாற்றுப்படை உரையில் திருவாவினன் குடியைப் பற்றிக் கூறுமிடத்து நச்சினார்க்கினியர்

"சித்தன் வாழ்வென்று சொல்லுகின்ற ஊர் முற்காலத்து ஆவினன்குடியென்று பெயர் பெற்றதென்றுமாம். அது சித்தன் வாழ்வு இல்லந்தோறும் மூன்றெரியுடைத்து என்று ஔவையார் கூறியதனால் உணர்க"

என்று கூறுகிறார் எல்லாம் வல்ல சித்தனாகச் சிவபெருமான் திருவிளையாடல் புரிகின்றார் என்று புராணங்கள் கூறுகின்றன.

சிவபெருமான் எல்லாம் வல்ல சித்தராகி கல்யானைக்குக் கரும்பருந்திய செய்தியை நாமெல்லாம் திருவிளையாடற் புராணத்திலே படிக்கின்றோம். அட்டமா சித்திகளைப் பெற்றவர்கள்தான் சித்தர்கள் என்பர். அட்டமா சித்தி என்பது எட்டுவகையான பெரும் சாதனைகளைக் கூறுவதாகும்.

அணிமா :- அணுவைப்போல் சிறிதாதல்

மகிமா :- விஸ்வரூபமாய் தோன்றல் அல்லது மேருவைப் போல் பெரிதாதல்.

இலகுமா :- காற்றைப்போல் இலேசாதல்

கரிமா :- அதிகப் பளுவாக இருத்தல்

பிராப்தி :- எல்லாவற்றையும் ஆளுதல்

வசித்துவம் :- எல்லாரையும் வசப்படுத்தல்

பிரகாமியம் :- கூடுவிட்டுக் கூடுபாய்தல்

ஈசத்துவம் :- விரும்பியதை அனுபவித்தல், செய்து முடித்தல்

வாசி என்கின்ற மூச்சினை அடக்கி ஆண்டு, யோக சக்தியினால் உடலில் உள்ள ஆறு ஆதாரங்களாகிய,

- மூலாதாரம்
- சுவாதிட்டானம்
- அநாகதம்
- மணிபூரகம்
- விசுத்தி
- ஆக்கினை

என்பவற்றில் மனத்தை முறையாக ஏற்றி குண்டலினியை எழுப்பிப் பலப்பல அனுபவமும் வெற்றியும் கண்டு அப்பால் உள்ள எல்லாம் ஆன பொருளில் நினைத்துச் சித்தி பெறுபவரே சித்தர் எனப்பட்டனர்.

இவர்கள் எல்லாம் காயசித்தி பெற்று மரணத்தை வெல்ல முயன்று வெற்றி பெறுவதே வீடென்பர்.

அட்டாங்கயோகம்

- இயமம்
- நியமம்
- ஆசனம்
- பிராணாயாமம்
- பிரத்தியாகாரம்
- தாரணை
- தியானம்
- சமாதி

செய்து நெறிபிறழாது வாழ்ந்து, சட உணர்வைக் குறைத்துக்கொண்டு, நாடிகளைத் தூய்மையாக்குவதால் உடலிலுள்ள ஒவ்வொரு உயிர் அணுவையும் தூய்மையாக்கிப் பின்னர் மௌன வழிபாட்டால் அணு இயக்கம் முற்றி, ஒளிவடிவம் என்னும் திவ்விய வடிவம் வளர்ந்து வரும்போது, மாறி மாறி வரும் சவிகற்ப நிலையும் பின்னர் நிலையாக ஒளிரும் நிர்விகற்ப சகஜநிலையும் தோன்ற உடலினை இவ்வாறு ஞான ஒளிமயமாகி, நாத தத்துவத்தோடு இணைத்து மரணத்தை வெல்வோம் என்பர் ரகேஸ்வரவாதிகளாம் நாத சித்தர்கள்

இதுதான் கால தகனமாகும்.

சடவுடலை நீக்கிப் படிப்படியாகச் சித்தாக்கு முறையில் அதனை பிரணவ தனுவாக்கியும், ஞான தனுவாக்கியும், பரத்தில் வாழுவது மகேஸ்வர சித்தியாகும்.

சித்தர்கள் யோகப் பயிற்சியையும் மருந்துக் கலையையும் வளர்த்து வந்திருக்கிறார்கள். புரியும் மொழி, புரியாத கருத்துக்கள், பேச்சுவாக்குத் தமிழில் பேருண்மைகளைப் புகுத்தி வைத்துள்ளனர்.

சித்தர்களின் நுண்ணுணர்வு, ஆழ்நிலை எண்ணங்கள் வெடிப்புற்று சிந்தனைகளில் வீசும் அலைகள் பொறி போலச் சுடர்விடுகின்றன.

சித்தர் சிந்தனை எப்போது தோன்றியது; எவ்வாறு வளர்ந்து ஓங்கியது என்று யாராலும் கூற முடியவில்லை.

சித்தர் பாடல்களால் செந்தமிழ் செழுமை பெற்றுள்ளது. கருத்துக்கு எட்டாத சிந்தனை களையும் அவர்கள் பாடல்களில் சொல்ல முயன்றுள்ள திறம் கற்று இன்புறத் தக்கது. சித்தர்களின் வாழ்க்கை வரலாற்றின் சுவடுகளைக்கூட அறிய முடியவில்லை.

சித்தர்கள் தம்மை உயர்த்திக் கொண்டதோடு உலக மக்களையும் உயர்த்துவதற்கு உதவினார்கள்.

சித்தர்கள் உடல் நோய்களைத் தீர்க்கும் மூலிகைகளைக் கண்டறிந்து மருந்து செய்யும் முறைகளைக் கற்றறிந்திருந்தனர். காலமாறுபாடு, கோள்களின் நிலை, சுடர்களின் இயக்கம் ஆகியவற்றை விளக்கிச் சோதிட நூல்களை இயற்றியுள்ளனர்.

மாந்திரீகங்களையும் தெய்வங்களுக்கு முறைப்படி செய்யும் பூசை விதிகளையும் இயற்றினார்கள். ஆத்ம சக்தி, யோகசக்தி கற்றிருந்தனர். சமரச சன்மார்க்கத்தை போதித்தவர்கள் சித்தர்கள். போலிச் சடங்குகளையும், பொருளற்ற செயல்களையும் மூட நம்பிக்கைகளையும் கண்டித்து, மனித நேயத்தைப் போற்றுவதையும் கொண்டிருந்தனர்.

மனித வாழ்வு உயர்ந்தது என்றும், உடம்பைப் பேணிக்காக்க வேண்டும் என்றும், மனிதன் சிற்றின்பத்தில் ஈடுபட்டுச் சீரழியக்கூடாது என்றும் எச்சரிக்கின்றனர்.

வட இந்தியாவில் 84 சித்தர்கள் வாழ்ந்ததாக சொல்லப்படுகின்றது. இவர்கள் பயின்ற யோக மார்க்கத்தை நாத மார்க்கம் என்பர். சித்தர்கள் தாங்கள் கண்ட ஆத்மசுக அனுபவங்களையும் சத்திய சோதனைகளையும் யோக சாதனைகளையும் உலகியல் உண்மைகளையும் அதன் ஆசாபாசங்களையும். நேரே பாமர மக்களின் நாவிலும் மனத்திலும் பதியும் வண்ணம் பாடல்களாக வழங்கி மறைந்திருக்கிறார்கள்.

எத்தனையோ சித்தர்கள் வாழ்ந்து மறைந் தாலும் அட்டமாசித்திகள் பெற்ற பதினெண் சித்தர்களே முக்கியமாக பேசப்படுகின்றார்கள்.

- அகத்தியர்
- நந்தீஸ்வரர்
- போகர்
- புண்ணாக்கீசர்
- கைலாயநாதர்
- உரோமரிஷி

- கோரக்கர் ♦ மச்சமுனி
- திருமூலர் ♦ கூர்மமுனி
- குட்டைமுனி ♦ கமலமுனி
- கொங்கணர் ♦ வாசமுனி
- கூன் கண்ணர் ♦ பிரமமுனி
- இடைக்காடர் ♦ சுந்தரானந்தர்

என்போரே அவர்களாவர்.

ஈழத்திலும் இத்தகைய சித்தர்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதை வரலாற்று ரீதியாகவும் கர்ண பரம்பரைக் கதைகள் மூலமாகவும் அறியக் கிடக்கின்றது. லெமூரியாக் கண்டம் இருந்த காலத்திலே அதாவது இந்து சமுத்திரம் தரைப்பரப்பாக இருந்த காலத்திலே ஈழமும் பாரத நாடும் ஒன்று சேர்ந்திருந்தன என்று கூறப்படுகின்றது. " நிலந்தொட்டுப் புகார் ; வானமேறார்; விலங்கிரு முந்நீர் காலிற் செல்லார் " எனக் குறுந்தொகை மூன்று சித்திகளைக் கூறுகிறது. இதனைக் கொண்டு சங்க காலத்திலும் சித்தர்கள் இருந்தார்கள் என்று எண்ண இடமுண்டு.

சமய வாழ்க்கை இன்றி மனிதன் மனித வாழ்க்கை வாழ முடியும் என்று கனவு காண்கின்றான். அதன் பலன் தான் இன்றைய மனிதனுடைய மிருக வாழ்க்கையாகும். கலாசாரம் என்றொரு சொல் இன்று எல்லார் நாவிலும் உதிப்பதைக் காணுகின்றோம். அகச் சீர் திருத்தம், புறச் சீர் திருத்தம் இரண்டையும் அகப்படுத்தி நிற்பதே கலாசாரத்தில் பூரண இலக்கணமாகும். சித்தர்கள் புறச்சீர் திருத்தத்துக்கு முக்கியத்துவம் அளித்தாரில்லை.

அகச்சீர்திருத்தத்துக்கே முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்துள்ளார்கள். இந் நிலைக்கு மனிதன் தள்ளப்பட்டு விடுவான் என்று கருதியே நம் முன்னோராகிய சித்தர்கள் புறச்சீர் திருத்தத்துக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. உட்சுவர் இருக்கப் புறச்சுவர் பூசுவதா? என்ற பழமொழி தமிழர் வாழ்க்கையில் எப்பொழுதோ கேள்விக்குறியாகிவிட்டது.

சமயத்தை இழந்து நமது சமூகம் வாழ முற்படுதல் உயிரை இழந்த பின் உடல் வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுப்பது போலாகும். பட்ட மரத்துக்குத் தண்ணீர் ஊற்றித் தழைக்கவைக்க முயற்சிப்பது போலாகும்.

இறையுணர்வு பெற்றவர்கள், இறைவனை அடைய இறைவழி சென்றவர்கள், இறை தரிசனம் பெற்றவர்கள், இறைவனோடு கலந்தவர்கள் என்ற நிலையில் ஆத்ம ஞானிகள் உணரப்படு கின்றவர்கள் சித்தர்கள் பெறும் அனுபவங்களாவன;

- வீதி அனுபவம் ♦ உயிர் அனுபவம்
- அருள் அனுபவம் ♦ மரண அனுபவம்
- ஆத்ம அனுபவம் ♦ ஞான அனுபவம்
- இறைக்காட்சி ♦ இறைவனோடு ஐக்கியமாகும் சச்சிதானந்த அனுபவம்

என்பவையாகும்.

சமய அடிப்படையிலே மெய்ப்பொருளைக் காணும் முயற்சியில் இரு முறைகள் பொதுவாக காணப்படுகின்றன. குறிப்பிட்ட ஒரு மதத்தில் பிரமாணங்களாக கொள்ளப்படும் நூல்கள், சாத்திரங்கள், கட்டளைகள் ஆகியன விதிக்கும் நெறிமுறைகளினின்றும் வழுவாமல் அறிவு பூர்வமாக மெய்ப்பொருளை நாடுவது ஒருவழி: குறிப்பிட்ட ஒருமதத்தின் அடிப்படைகளைச் சார்ந்திருக்கும் சுவானுபவமும் உள்ளுணர்வும் காட்டும் ஒழுகலாற்றில் நின்று உணர்ச்சி பூர்வமாக மெய்ப்பொருளை நாடுவது மற்றொரு வழி. இவையிரண்டும் ஒன்றையொன்று விலக்கும் வழிகள் அல்லனவாயினும், நடைமுறையில் வேறுபட்டுச் செல்வனவாகவே உள்ளன. ஆன்மீகப் பயணிகள் இவ்விரு பாதைகளிலும் சென்று தமது இலக்கை அடைகின்றனர் எனலாம்.

தமிழ் நாட்டிலே குறிப்பாகச் சைவம், வைணவம் என்ற இருபெரும் பிரிவுகளிலும் இத்தகைய பாகுபாட்டினைக் காணக்கூடியதாக உள்ளது. உலகிலுள்ள ஏனைய மதங்களிலும் இவ்விரு (போக்குகளும்) அணுகுமுறைகளும் வெவ்வேறு அளவுகளில் செயற்படுவதைக் கண்டுகொள்ளலாம். இதனடிப்படையிலேயே உலகப் பொதுவான மறை ஞானத்தைப் பற்றி நாம் பேசக்கூடியதாக உள்ளது. இந்த அடிப்படை யிலேயே கிழக்கும் மேற்கும் இணையக்கூடியதாக உள்ளது.

தமிழ் உலகிலே சமயாசாரியார்கள் வழிவரும் சைவ சித்தாந்தம் வேதாகமங்களையும் மெய்கண்ட சாத்திரங்களையும் ஆதாரமாகக் கொண்டு இயங்குவது. அது பெரும்பாலும் அறிவு பூர்வமான சமய நெறியாகும். சமய தத்துவம் என்ற வகையில் வைதீகத்துள் அது அடங்குமாயினும், வைதீக சமயங்கள் பலவற்றினின்று அது வேறுபடுவது விசேஷமாய்க் கருதப்படுகின்றது. சைவ சித்தாந்தத்தின் தனித்துவம் சுத்தாத்துவ வாதிகளினால் விதந்துரைக்கப்படுவது யாவரும் அறிந்ததே. ஆயினும் சைவ மரபிலேயே பலகாலமாகச் சமரச போக்கும் உயிராற்றலுடன் இருந்து வருகின்றது. செந்நெறி இலக்கிய மரபும் சாத்திர மரபும் அதனைப் பல வேளைகளில் புறக்கணித்தாலும், தன்னிலை கெடாமல் அச்சமரர் நெறிதமிழுக்கு தண்ணளி செய்து வந்துள்ளது. திருமூலர் தொடக்கம் தாயுமானவர் வரைக்கும் அவருக்குப் பின்னரும் இராமலிங்கர் ஈறாக பல மறைஞானிகள் சமயங்களின் பொதுப்பண்புகளை போற்றி சமரச ஞானத்தையும் அநுபூதி மார்க்கத்தையும் கடைப்பிடித்து வந்துள்ள இடைக்காலத் தமிழ் நாட்டுச் சூழ் நிலையிலே சைவ வைணவ வேறுபாடுகள் மட்டுமன்றி சமய உணர்ச்சி பெற்றிருக்கவும் பெருந்தொண்டாற்றினர். சமரச ஞானச்செல்வராகிய தாயுமானவரும்,

வேதாந்தஞ் சித்தாந்தம்

வேறென்னார் கண்களிக்கும்

நாதாந்த மோன

நலமே பராபரமே

என்று பரவசத்துடன் பாடினார்.

பிரமாணாதீத நிலையில் நின்ற ஞானியருள் தமிழ்நாட்டுச் சித்தர் கணத்துக்குத் தனிச் சிறப்பான ஓர் இடமுண்டு. இவர்கள் மனிதன் கற்பித்துக் கொண்ட வரம்புகளையும்,

சடங்குகளையும் சம்பிரதாயங்களையும், பாகுபாடுகளையும் பாரபட்சங்களையும் கடந்தவர்கள். சாதி, குலம், பிறப்பு, இனம், நிறம், கொள்கை, பெண், ஆண், அந்தஸ்து என்ற அளவு கோல்களையும் தாரதம்மியங்களையும் இவர் பொருட்படுத்தினரல்லர். சித்தர்களில் ஒருவரான சிவவாக்கியர் கூறியதுபோல் 'உங்கள் பேதமன்றியே உண்மை பேதமில்லையே' என்றே அநுபூதிமான்கள் கூறி வந்திருக்கின்றனர். ஆன்மீக விபரிப்பே – பேதமற்ற போத நிலையே அவர்களின் இலட்சிய மாக இருந்தது. ஆகுலமும் ஆரவாரமு மற்ற மேலான நிலையைப் பலர் கைக்கொண்டி ருந்தனர். அத்தகைய வைராக்கியர்களால் ஆகர்ஷிக்கப்பெற்ற பொதுமக்கள் அவர்களின் அற்புதங்களும் அருஞ்செயல்களும் ஆற்ற வல்லவர்கள் என்றும் நம்பினர். அவர்களாற் பற்பல பயன்களும் பெற்றனர். சித்தர்கள் வழிவருவதே சித்த வைத்தியம்.

பதினெண் சித்தர்களுள் ஒருவராம் திருமூலரால் 'சிவபூமி' என்று சிறப்பிக்கப்பெற்ற நம் ஈழத்திருநாட்டிலும் எதேச்சையாக வாழ்ந்து வந்த சித்தர் பரம்பரை இருந்து வந்துள்ளது. இவர்கள் பொதுவான சமூக வாழ்க்கையிலிருந்து விலகியிருந்தமைபோல் ஏட்டிலும் இடம்பெறாது போயினர். மனதில் தோன்றும் சகலவிதமான ஆசைகளையும் நீக்கி ஆன்மாவில் முழுநிறைவு எய்தும் சாதுக்கள் தங்களைப் பற்றிய செய்திகளையும் தகவல்களையும் பிறருக்குக் கூறுவது இல்லை. இதனால் சித்தர்களைப் பற்றிய வரலாறுகள் சரிவரத் தெரியாமல் மறைந்து போயின. இலங்கையில் ஒரு அருட்பரம்பரைக்கு மூலவித்திட்டவர் சுவாமி முத்தியானந்தா எனும் தீட்சா நாமம் கொண்ட ஆதிகடைநாதன் என்கின்ற கடையிற்சுவாமிகளாவார். இந்தியாவிலிருந்து வந்த இவருடன் சுவாமி சின்மயானந்தர், சுவாமி நிரஞ்சனானந்தர் (பரமகுரு சுவாமிகள்) என்போரும் ஈழத்திற்கு வருகை தந்துள்ளனர். ஈழத்தில் வாழ்ந்து மறைந்த சித்தர்கள்.

- கடையிற்சுவாமிகள்
- பரமகுருசுவாமிகள்
- குழந்தைவேற் சுவாமிகள்
- செல்லாச்சி அம்மையார்
- அருளம்பல சுவாமிகள்
- சடைவரத சுவாமிகள்
- ஆனந்த சடாட்சரக்குரு
- தாளையாண் சுவாமிகள்
- யோகர் சுவாமிகள்
- மகாதேவ சுவாமிகள்
- நவநாத சுவாமிகள்
- சடையம்மா
- பெரியானைக்குட்டி சுவாமிகள்
- நாகநாதச் சித்தர்
- சித்தானைக்குட்டி சுவாமிகள்
- நயினாதீவுச் சுவாமிகள்
- செல்லப்பாச் சுவாமிகள்.

என்போராவர். ஈழத்தில் வாழ்ந்த சித்தர்களைப் பற்றி அறிந்திருத்தல் ஈழத்தமிழ் மக்களாகிய எமது அவசியமான கடமையாகும்.

தொகுப்பு
யோ. அரவிந்தன்
உயர்தரம் – 2001
விஞ்ஞானப்பிரிவு

பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில், மேற்பிரிவில் 1ம் இடம்பெற்ற கவிதை

## கருகி விழும் சருகுகள்

புதுச் சூரியனொன்று
புனைவோம்.
முத்தமிழ் தர்மத்தால்
முக்காடு போடுவோம்
உலகின்
நிறத்தை மாற்றுவோம்
பிறகு
நிர்வாணமாக்கி விடுவோம்

பால் மனம் மாறாத
பாலகர்களின்று
யுத்தப் பள்ளத்தாக்கில்
பலியாக்கப் படுவதேன்?

ஓ!
இதுவும்
சமாதான வரங்கேட்டு
நடக்குமோர்
நரபலியோ!

இந்தப்
பிஞ்சு இலைகள்
அன்புக் காற்றின்
அடிமைகள்
பிரபஞ்ச விருட்சத்தின்
உடமைகள்

சத்தியம் செய்ய
இவைகள் இன்னும்
பழக்கப்படவில்லை - ஏனெனில்
பொய்களெனும்
சக்தி இழந்தவைகள்

உரிமைகள் கோரி
உத்தரவு போட - இன்னும்
உதிரம் சுரக்கவில்லை - ஏனெனில்
உய்வெனும் முக்தியில்
திகழ்ந்தவைகள்.

சருகா? இல்லை
சரமாரி பொழியும் மழைகள்
சம தர்மமூட்டும் சந்நிதானங்கள்

மரங்களுக்கு - இலைகள்
மதிய உணவு தயாரிப்பது போல்
மனித குலத்திற்கே
மனித நேயம் தயாரிக்கும்
மாஷட இயந்திரங்கள் - குழந்தைகள்

அவைகள்
சுகம் விசாரித்து
சுத்தமாய் யாரும்
பார்த்ததில்லை

தன்
தயாரிப்பின் மீதான
தளரா நம்பிக்கை

அப்படியாயின்

கலப்படம் - கலப்பது
எங்கே?

அன்புகள்
பொசுங்கி விட்ட - சில
உள்ளங்களில்

கனவுகள் கலைக்கப்படும்
கயவர்களின்
கரு இதயங்களில்

ஓர்
யுகத்தின் முகத்தை
மாற்ற - எங்கள்
முகங்களை
மாற்றிக் கொள்வது
தர்மத்தின்
எந்த பக்கத்தில்

வேண்டாம் .... வேண்டாம்...

அன்புகளை நாம்
பொசுக்குகையில் - அங்கு சில
உண்மை யுள்ளங்கள்
நசுங்குகின்றன

மிதிபடும்
சருக்குகளின் சப்தங்கள்
நமக்கு
சங்கீதமாயிருக்கலாம்
ஆனால்,
அவைகள் அறியாமலேயே
அனுபவிக்கும்
வேதனைகள்
சத்தியமாய் - எங்களை
சுகப்படுத்தி விடாது
சும்மா விடாது

அன்பு தழைத்த
அந்தப்
புது ரோஜாவின்
புன் சிரிப்புக்குள் மட்டும்
எத்தனை
புத்தகங்களை - இறைவன்
புதைத்து வைத்துள்ளான்

ஓ! குழந்தாய்!
வெப்பத்தில்
கருகி விழும் சருகாகி
நாளைய விடியலுக்கு
உரமாவது தான் - உனது
திட்டமா?

அதோ!
பாருங்கள்
தன்னை உருக்கி
மெழுகு வர்த்தி ஒன்று
சிரிப்பதனை

ஒரு விடியல்
நமக்கு வேண்டாதிருக்கட்டும்
நாளை
வாலிபங்களில் விழிக்கப்போகும்
இந்த பிஞ்சுகளுக்கேனும்
பிறக்கட்டுமே!

\- ஒன்றில் -
செத்து மடிவோம்
குழந்தைகளெனும் இலைகளின்
உற்பத்தியை
நிறுத்தி விட்டு இல்லையேல்

மனமகிழ்ந்து வாழ்வோம்
யுத்தமெனும் களையின்
உற்பத்தியை உடைத்துவிட்டு

பின்னது சிறப்பென்றால்,

புதுச் சூரியனொன்று
புனைவோம்
முத்தமிழ் தர்மத்தால்
முக்காடு போடுவோம்
உலகின்
நிறத்தை மாற்றுவோம்
பிறகு
நிர்வாணமாக்கி விடுவோம்.


எம். ரிஸ்வான்
நீர்/விஜயரத்தினம்
இந்து மத்திய கல்லூரி

*With Best Compliments*

*From*

# SIGMA ENTERPRISES

**IMPORTERS AND STOCKISTS OF QUALITY TOOLS AND GENERAL HARDWARES**



359, SRI SANGARAJA MAWATHA,
COLOMBO-10..

TEL: 320963, 422628
FAX: 334840

பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்டபோட்டிகளில் கீழ்ப்பிரிவில் 1ம் இடம் பெற்ற சிறுகதை

# சோம்பல் மிகக்கெடுதி

அன்று திங்கட் கிழமை மணி ஏழு பதினைந்து ஆகின்றது ஆனால் கோபாலன் இன்னும் எழவில்லை. அவன் கட்டிலில் உறங்கிக் கொண்டிருந்தான் அவனது தாயார் சமையலறையில் சமைத்துக்கொண்டிருந்தார். அவர் நேரத்தை பார்த்துவிட்டு "கோபாலா மணி ஏழு பதினைந்து ஆகின்றது இன்று நீ பாடசாலைக்கு போகவில்லையா "என்றார்.

அவனது தாயார் அதற்கு அவன் " அம்மா எனக்கு தூக்கம் வருகின்றது "என்றான். அதன்பின்னர் அவன் தானாக சென்று காலைக்கடன்களை அவசர அவசரமாக முடித்து விட்ட பாடசாலை சீருடையை அணிந்துவிட்டு தன் தாயாரை நோக்கி " அம்மா உணவு சமைத்து விட்டாயா?" என்றான். அதற்கு அவனது தாயார் " நான் சமைத்து விட்டேன் நீ தான் உணவு ஆறிய பின்பு என்னை கேட்கிறாய் உன்னுடைய சோம்பேறித்தனம் என்று தான' மாறப்போகிறதோ " என்று சலித்தபடியே தாயார் கூறினார். கோபாலன் புத்தகப்பையினுள் புத்தகங்களை அடுக்கி விட்டு அதைத் தூக்கியபடி வீதியில் இறங்கினான். அவன் பேருந்து தரிப்பிடத்திற்கு செல்லும் போது அவன் ஏறவேண்டிய பேருந்து சென்றுகொண்டிருந்தது. அவன் அதை துரத்தியபடி ஓடிச்சென்றான் . அவ்வாறு அவன் துரத்தி செல்லும் போது கல் ஒன்றில் தடுக்கி விழுந்துவிட்டான். எழுந்து தன் காலைப்பார்த்தான். விழுந்ததால் ஏற்பட்ட காயத்தில் இருந்து இரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. அந்த வலியினால் அவனது கண்களில் நீர் நிரம்பியது. ஆனாலும் அதை அடக்கியவாறு காலைநொண்டியவாறு வீடு சேர்ந்தான். வாசல் அழைப்பு மணியை அழுத்தியதும் தாயார் கதவை திறந்தார் இரத்தம் சொட்ட சொட்ட நிற்கும் கோபாலனைப் பார்த்து அவனது தாயார் "என்ன நிகழ்ந்தது?" என கேட்டார். அவன் நடந்த சம்பவத்தை கூறினான் தாயார். அவனுடைய புண்ணுக்கு மருந்திட்டபடியே "இனியாவது அதிகாலையில் எழுந்து பேருந்தில் ஏறுவதற்குசெல் அத்துடன் உன்னுடைய சோம்பலை விட்டொழி" என்றான். ஆனால் அவன் காதில் வாங்காமல் இருந்தான்.

சிலதினங்களில் மீண்டும் பாடசாலை சென்று வந்தான். அவனது பாட்டி இறந்துவிட்டார் என்ற செய்தி அவர்களுக்கு கிடைத்தது ஆனால் கோபாலனுக்கு அங்கு செல்ல முடியாமல் போய்விட்டது ஏனென்றால் அவனுக்கு பரீட்சை தொடங்கியிருந்தது. ஆனால் அவனுடைய தாயார் ஊருக்கு சென்றிருந்தார். கோபாலன் மறுநாள் காலையும் வழமைபோல் பிந்தி எழுந்தான். எழுந்து மணியை பார்த்தால் அப்பொழுது ஏழு இருபது. பின்பு அவன் அவசரமாக காலை கடன்களை முடித்துவிட்டு பாடசாலை சீருடை அணிந்துகொண்டு புத்தகப்பையில் அன்றைய பரீட்சைக்கு தேவையான பொருட்களை எடுத்துக்கொண்டு வீதியில் இறங்கி முச்சக்கர வண்டி ஒன்றை பிடித்து பாட்சாலை சென்றான். பிந்திவந்ததால் அவனை பரீட்சை எழுத அவனது ஆசிரியர் அனுமதிக்கவில்லை அதனால் அவன் மனவருத்தம் கொண்டான். அந்த சம்பவத்தின் பின்னர்அவன் அதிகாலை எழுந்து சுறுசுறுப்பாக கடவுளை வணங்கிய பின்னர் பாடசாலைக்கு செல்வான். ஊரிலிருந்து வந்த தாயார் அவனது செயல்களால் வியந்து அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

கு. ஜெனீவன்
பம்பலப்பிட்டி இந்துகல்லூரி

பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் கீழ்ப்பிரிவில் 1ம் இடம் பெற்ற கட்டுரை

# நவராத்திரி பூசை

நவராத்திரி பூசை என்பது மூன்று பெண் தெய்வங்களை வழிபடும் பூசை ஆகும். சக்தி, சரஸ்வதி, லக்ஷமி ஆகியனவே அத்தெய்வங்களாகும். இங்கே சக்தியை நோக்கி மூன்று நாட்களும், சரஸ்வதியை நினைத்து மூன்று நாட்களும் லக்ஷமியை எண்ணி மூன்று நாட்களும் மக்கள் வழிபடுகின்றனர். சக்தியை நோக்கி வீரத்தை கேட்பார்கள். சரஸ்வதியை நோக்கி கல்வி கேட்பர். லக்ஷிமியை நோக்கி செல்வத்தை கேட்பர். இங்கே ஒன்பது பூசைகளையும் நவராத்திரி பூசை என்று அழைப்பர். (நவம் – ஒன்பது) இந்த ஒன்பது பூசைகளும் முடிந்த அடுத்த நாள் விஜயதசமி நடக்கும். விஜயதசமி என்றால் சிறு பிள்ளைகளுக்கு ஏடுதொடக்குவர். சக்தி சரஸ்வதி, லக்ஷி விரதங்களை பிடிப் போர்கள் விரதம் இருத்தல் வேண்டும்.

இங்கே விரதமிருப்போர் எந்த நோயும், கஷ்டங்களும் வரக்கூடாது என்று மஞ்சட்குடம் எடுப்பார்கள். நவராத்திரி எப்படி வந்தது என்று உங்களுக்கு எண்ணம் ஏற்படலாம். ஒரு அரக்கன் தேவர்களையும் மக்களையும் துன்புருத்தி வந்தான். இவனுடைய கொடூரமான செயலைக் கண்ட தேவர்கள் தேவியரிடம் சென்று முறையிட்டார்கள் மூன்று தேவிகளும் 9 நாட்கள் கடுந்தவம் புரிந்து அ வனை அழிப்பதற்கு வரங்களைப்பெற்றார்கள். மூன்று தேவியரும் ஒரு தேவியாக மாறி அவனை அவ்விடத்திலே துவசம் செய்தனர்.

இக்கதையை நினைவு கூறும் முகமாக கொண்டாடப்படும் நாளே, மகா நவராத்திரியாகும். இந்த பூசை சக்தி, லக்சுமி, சரஸ்வதி கோயில்களில் மும்முரமாக சிறப்பாக நடைபெறும். விஜயதசமி அன்று சிலருக்கு திருமணம், பாடசாலையில் சேர்த்தல், கோயில் கும்பாபி சேகம், அலுவலகம் திறப்பு, விழாக்கள் போன்ற நல்லதல்ல நிகழ்ச்சிகள் நடக்கும்.

நவராத்திரி அன்று முதல் மூன்று நாள் சக்திக்கு தேர் இழுப்பார்கள் அடுத்த மூன்று நாள் சரஸ்வதிக்கு தேர் இழுப்பார்கள். பின் கடைசி மூன்று நாள் லக்சுமிக்கு தேர் இழப்பார்கள்.

அன்று ஏழையர்களுக்கு பணம், பிரசாதம், வாழ்விடம் போன்றவற்றை அழித்து அவர்களுக்கு கஸ்டம் வராமல் பாதுகாப்பார்கள்.

நீங்களும் ஏன் எல்லோரும் நவராத்திரி தினத்தை கடைப்பிடியுங்கள் உங்களுக்கு ஓர் நல்ல நீதி கிடைக்கும்.

N. குருஷாந்
இரத்மலானை,
இந்துக்கல்லூரி

# உலக அழகு ஒற்றுமை நியதி

சகத்திரத்து நிகழ்வுகளை சரித்திரமாக்க முயலும்
மாண்புமிகு மானிடம்!
பயணித்த பாதையை மறந்துவிட்டதா என்ன?
படிக்கற்களை எண்ணிப்பார்க்கிறேன்.

பரிணமித்த மனித ஜென்மம்!
ஆலமரவித்திலிருந்து, இன்று விருட்சமாய் நிற்கிறது
அதன் சரித்திரத்துப் பாதை,
ஒரு "மகுட அர்த்தத்தை" இன்னமும் புரிந்துகொள்ளவேயில்லை!

சமயம் கூறும் ஒற்றுமை, மானிடனில்
மறுக்கப்படாமலிருந்திருந்தால், பரிதவித்த அப்பாவி மனித ஜென்மம் எ
விலங்குகளில் ஒற்றுமை விலகாமல் இருந்திருந்தால்,
ஒன்றிற்கு ஒன்று விருந்தாகும் நிலை எது?

மனிதன் மனிதனை நேசித்தால்
இறைவன் மனிதனை நேசிப்பான்!
மானிடா!
நீ வாழவேண்டி வாழ்க்கையென்ன? சிந்தித்துப்பார்!

பிறந்திருக்கும் சகத்திரத்தின் அஸ்த்தமனம்
சமரசத்தில் நிகழ்ந்தால்,
மனித ஜென்மம் மாண்புடையதாகிவிடும்.
படைத்தவன் மானிடரால் துதிக்கப்படுவான்!

அன்னை என்பாள் உள்ளமதில்
பிள்ளைதனில் வர்க்கமில்லை! அதனால்,
அவளுள்ளம் கொண்ட இன்பம்
வேற்றுள்ளம் கொண்டதுண்டோ?

ஒற்றுமை எனுமழகு,
உலகினிலே உண்டெனில்
புதியதோர் அழகுவந்து
பாரிதனை அலங்கரிக்கப்போவதுண்டோ?

மாண்புமிக்கவனே!
படைத்தவனில் வர்க்கமில்லை. அவனின்
படைப்புதனில் வர்க்கமில்லை, பிறகெதற்கு
வர்க்கபேதம் என்றபதம் மானிடத்தில் நிலவுகிறது?

பரமனைப் பண்புள்ளவனாக்கும்
சமயமது கூறுகிறதா?
வர்க்கபேதம் உனது உயிர்மூச்சு என்று
அதனால்த்தான் நீ இன்று, நிலைகுலைந்து அலைகிறாயா?
பரிதவித்த ஜென்மமே!
ஒற்றுமையால் என்னபயன் என்பதை யோசிப்பதைவிடு!
ஒற்றுமையின்மையால் என்ன தீமை என்பதை சிந்தி!
உனது வினாவிற்கு விடை கிடைத்துவிடும்.

உனக்கு ஒன்று தெரியுமா?
சகத்திரத்தில், கலியுகமும் அழியுகமும்
ஒருதாய்ப்பிள்ளைகள் அதனால்த்தான்,
ஒற்றுமை என்பது பகற்கனவு ஆகிவிட்டது.

மானிட ஜென்மமே!
விழித்தெழு! தூங்கியது போதும்.
வெளிச்சத்தில் இருட்டினை உண்டாக்கியவனும் நீதான்!
இருட்டிலே வெளிச்சத்தை உண்டாக்குபவனும் நீதான்!

எது இல்லை மனிதா? இந்த நாட்டில்
செழிப்பான விவசாய வளம் இல்லையா?
தொழில்வழங்கும் தொழிநுட்பம் இல்லையா?
என்ன இல்லை இந்த நாட்டில்?

ஒன்று மட்டும் இல்லை
ஒற்றுமை எனும் அழகு இல்லை
ஆதலால், உணர்வதற்கு மதிப்பு இல்லை
அதனால், உலகினிலே அழகு இல்லை.

மானிடா! நீ உயர்வு தாழ்வு பார்க்கிறாய்
ஒற்றுமை என்பது உனது உணர்வலை. அதனை
உருவாக்குபவனும் நீதான்
உருக்குலைப்பவனும் நீதான்

மானிடா!
நீ உயர்வு தாழ்வு பார்க்கிறாய்!
பெரியவன் யாரெனப் பார்த்ததால்,
படைத்தவன் நிலையென்ன?
நீ மட்டும் ஈம்மாத்திரம்!

ஆதலால், உயர்வுமிக்க மானிடா!
நீ! உணரவேண்டியது இதுதான்
அனைவரும் ஒருவனின் படைப்புகள்
உலக அழகு, உன்னிலேயே தங்கியிருக்கிறது.
அதற்கு வெகுநாட்கள் இல்லை!

தென்றல்கள் தாலாட்ட,
குயில்வந்து இசைமீட்ட,
தரணியிலே துக்கமின்றி தாய்மடியில் உறங்கி
எத்தனை காலம்? மானிடம் எண்ணிப்பார்த்தா?
அதற்கான நேரம் வந்துவிட்டது.

மண்டியிட்டுத் தொழுது,
மனதார வேண்டுகிறேன்!
மாண்புமிகு மானிடா....!
நாளைய ஜீவன்களை
உணர்வுள்ள உயர்களாக்கு!

உலகிற்கு ஒற்றுமை இறைவனின் நியதி
சமயத்தில் ஒற்றுமை விழுமிய வாக்கு
மானிடர்க்கு ஒற்றுமை பாற்கடல் அமிர்தம்
ஆதலால், மானிடா!
"உலகிற்கு அழகு ஒற்றுமை நியதி"

பாலேந்திரன் காண்டீபன்

பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் மத்தியபிரிவில் 1ம் இடம் பெற்ற சிறுகதை

# முறிக்கப்பட்ட சிறகுகள்

" என்னடா மோனை, எழும்பனடா விளக்கு வைக்கிற நேரத்தில், நித்திரை, கடவுள் கோவிக்கப் போறா" அம்மா இருப்புக் கொள்ளாமல் இதே வாசகத்தை திருப்பித் திருப்பி உச்சரித்த வண்ணம். நித்திரையாகக் கிடந்த சங்கருக்கு கோபம் மூண்டது. "என்ன கடவுள்" நித்திரையிலேயே புலப்பினான் ஆலமரத்துக்கு கீழிருந்து எங்கோ சுதந்திரமாய் திரிந்த சிட்டுக்குருவிகள்.

எத்தனை கனவுகள், எத்தனை ஆசைகள் சங்கருக்கு சிறு வயதிலிருந்தே தான் ஒரு வைத்தியனாகி, தன் குடும்பத்தை தன் காலிலே ஊன்ற வைத்து, ஏனைய வறுமையாளருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற ஆசை சங்கரது சகோதரி சாந்தி அவளுக்கும் பல ஆசைகள் நன்றாகப் படித்து சமூக சேவகியாக வேண்டும் என்று. அத்தோடு பல கனவுகள் தனக்கொருவன் எங்கோ பிறந்திருக்கிறான் அவனை மணம் முடித்து எவ்வளவு இன்பமாக வாழப்போகிறோம் என்று ஆனால் இப்போது கனவுகள் ஆசைகள் உடைந்த சிட்டுகளாய் இருவரும் ஆலமரமே கதியென்று.

" அம்மா! அப்பா எங்கம்மா இன்னும் வரல்ல?" சாந்தி கேட்டாள். அப்பா இப்போது காட்டிலே விறகு வெட்டுவாராக இருக்கும் அல்லது விற்றுக் கொண்டிருப்பார். நாளைய சோற்றுக்கு என்ன வழியென்று அவர்கள் திண்டாடிய காலம் சென்று இப்போது, அடுத்த நிமிடத்திற்கு என்ன வழியென்று நிற்கும் நிலைமை.

அம்மா கூப்பிட்டாள், "சாந்தி அண்ணாவண்ட படத்துக்கு விளக்குக் கொளுத்தினியே?" ஆமாம் சாந்தியினதும், சங்கரினதும் அண்ணன் குமார் அவன் இப்பொழுது சுவரிலே தொங்குகிறான். விரைவாகச் சென்றுவிட்டான் என்று சந்தோசப் படத்தான் வேண்டும். காரணம் இவ்வளவு இன்னல்களை தாங்கவில்லையே புண்ணியம் செய்த ஆத்மா.

"டேய் சங்கர் இன்னும் எழும்பல்ல என்ன அம்மா எவ்வளவு பாவம் கத்திக் கத்தி எழுப்பிறா. போய் அப்பா எங்கெண்டு பார்த்திட்டு வா, ஓடிப்போ" சங்கரின் அக்கா அதட்டினாள் சங்கருக்கோ எழும்பப் பிடிக்க வில்லை. எழும்பி என்னத்தை செய்வது? சாப்பிடு வதற்கு ஏதும் இருக்கிறதோ தெரியாது. அப்படிக் கிடைக்கவில்லையென்றால் மீண்டும் வந்து பாய்விரிக்கச் சரி. அவனது மனம் நினைத்தது. பின்னோக்கிய தனது வாழ்வை யோசித்தான்....

இரண்டு வருடங்களுக்கு முதல் காலையில் எழும்பினவுடன் பல்விழக்கி முகம் கழுவி, கடவுளைக் கும்பிட்டு விட்டு பாடசாலைக்குச் செல்வான் சங்கர். அப்போது அவனுக்கு கடவுளை கும்பிடுவதென்றால், அதைப் போல் சந்தோசம் இல்லை. கடவுளுடன் தன்பாட்டில் கதைப்பான். பாடசாலையில் கல்வியில் இவனை வெல்ல யாராலும் முடியாது. புத்தகப் பூச்சியாக மட்டும் இருக்கவில்லை. கலை, விளையாட்டு, போட்டிகள், அனைத்திலும் பங்குபற்றி பரிசில்கள் பெறுவான். பாடசாலையில் சங்கர் தான் நாயகன். பாடசாலை விட்டு வீடு வந்ததும் அவசர அவசரமாய் "டியூசன்" வகுப்பிற்கு ஓடுவான் என்னே சுதந்திரமான வாழ்க்கை வகுப்பெல்லாம் முடித்து, இரவில் தன்னந்தனியாக வீடுவருவான். எந்த பயமும் இல்லை.

சங்கரின் மனம் மீண்டது ஆலமரத்திற்கு சாந்தி, சங்கரை அழைத்தாள். வேண்பா வெறுப்பாக, "என்னக்கா?" வினவினான் சங்கர், "நாளைக்கு, கொழும்புக்கு போறதுக்கு தயார் ஆக்க வேணும். அம்மா நகையள வித்து காசு தயார் பண்ணி வைச்சிருக்கா, உன்ன அனுப்ப, அங்காலப் பக்கம் போனா எங்களுக்கும் வசதி தானே அதால நீ ரெடியாகு". அக்கா கூறிச் சென்றதும் சங்கருக்கு இனம்

புரியாத சந்தோசம். இனி என் வாழ்வு மறுமலர்ச்சியடைந்து விடும். வைத்தியனாகும் ஆசை பலித்துவிடும் என்று எண்ணினான். மீண்டும் பல கனவுகளோடும், ஆசைகளோடும் அடுத்த நாள் காலை ஆல மரத்துக்கு கீழே பெற்றோரையும் விட்டு சகோதரியையும் விட்டு, படாத பாடு பட்டு, ஒரு மாதிரியாக கொழும்பு வந்து சேர்ந்தான். கொழும்பிலே தனது பெரியம்மாவின் வீட்டில் தங்கியிருந்தான். அவன் தொடர்ந்து படிக்க எந்த உறவினரும் எதுவிதமான உதவிகளும் செய்யவில்லை.

தான் என்ன வேலை செய்தாவது, தன் குடும்பத்தைக் காக்க வேண்டும் என்று எண்ணினான். தனது ஆசைகளை ஒரு புறம் மூட்டை கட்டி வைக்க விரும்பினான். அந்த மூட்டையை என்றாவது ஒரு நாள் அவிழ்ப்பேன் என்றும் நம்பினான்.

தெரிந்தவர் ஒருவரைப் பிடித்து, அவர் மூலம் வேலை கேட்டு ஒவ்வொரு நிறுவனத்தின் படிகளிலும் கால் வைத்தான். வைத்த கால்கள் திருப்பி அனுப்பப்பட்டன. ஏதாவது வேலை செய்தாக வேண்டும் என்பதால், ஒரு கடையில் பணியாளனாக வேலைக்கு அமர்த்தப்பட்டான்.

ஒவ்வொரு முறையும் தபால்காரன் மணியடிக்கும் பொழுது தனது பெற்றோரின் அன்பு மடலை எதிர்பார்ப்பான். அவனும் ஒவ்வொரு கிழமையும் தவறாமல் கடிதம் போடுவான். ஒவ்வொரு கிழமையும் அவனது கண்கள் தபால்காரனைத் தேடின.

ஒரு நாள் வந்த கடிதத்திலே, அவனது தாய் குறிப்பிட்டிருந்தாள், சாந்திக்கு கல்யாணம் செய்து வைக்க யோசிக்கிறோம் என்று. சங்கருக்கு இனம் புரியாத சந்தோசம் முகத்திலே ஓடியது. தனது அக்காவிற்கு கல்யாணமா? அவனது மனம், தன்னுடைய அக்காவுடனான வசந்த காலங்களை எண்ணியது. சந்தோசப் பட்டது. ஒரு கணம் யோசித்தாள், பணத்திற்கு என்ன செய்யப்போகிறார்கள்? நான் தான் எப்படியாவது கஷ்டப்பட்டு, சம்பாதித்து அனுப்ப வேணும்.

முன் போல் இல்லாமல் கூடுதலான நேரம் கடுமையாக உழைத்தான்.

ஒரு நாள், இரவு நேரம் கடையிலே இருந்து கடை கணக்கு வழக்குகளைப் பார்த்துவிட்டு, பஸ்ஸிலே வீடு செல்வதற்கு ஏறினான். பஸ் சிறிது தூரம் தான் சென்றிருக்கும். பஸ்ஸை மறித்தனர் பொலிஸ். சங்கர் தைரியமாக இருந்தான். என்னிடம் தான் அடையாள அட்டை இருக்கிறதே என்று பஸ்ஸிலிருந்து கீழே இறங்கினர் அனைவரும். சங்கர் கீழே இறங்கி பையினுள் கையை விட்டு "பர்ஸை" எடுக்க போனான். அவனது கை உணர்ந்தது, பையினுள்ளே பர்ஸ் இல்லாததை. அந்தோ பரிதாபம் அவனது பர்சை யாரோ எடுத்து விட்டார்கள். பொலிஸ் அடையாள அட்டையைக் கேட்டான். சங்கருக்கு எனன செய்வது என்று புரியவில்லை. சிங்களமும் தெரியாது தவித்தான். அழைத்துச் சென்றனர் கம்பி எண்ண. சங்கர் தனது பக்க உண்மையை வெளிக்கொணர முடியாது தவியாய்த் தவித்தான். இனி......

அவனது மூட்டை கட்டி வைக்கப்பட்ட ஆசைகளை யார் அவிழ்ப்பது? அவனது அக்காவின் கல்யாணம்? எல்லாம் கேள்விக் குறியாகி விட்ட நிலையில், முறிக்கப்பட்ட சிறகுடன் சங்கர் கூண்டுக்குள் நின்றான். இவனது சிறகு மட்டுமா முறிக்கப்பட்டது? அவனைத் தங்கி வாழ்வோரதும் சிறகுகளும் தான் முறிக்கப்பட்டன. முறிக்கப்பட்ட சிறகுகளை யாரினால் ஒட்ட முடியும்?

ச. சுதாமதி.

இராமநாதன் இந்துமகளிர்கல்லூரி

# அடிமை என்றினி அகிலமெங்குமில்லை

அடிமைகளாய் நாம் இருப்பதில்லை
அமைதிக்காய் போர் தொடுப்பதில்லை
அல்லல் படுவோரை கைவிட்டதில்லை - நாம்
யாருக்கும் அடிமைகளல்ல

அப்பர் சொன்னார் இதை அன்று
கவிதையாய் வடிக்கிறோம் நாம் இன்று
சுதந்திரத் தடைகளை வென்று - நாம்
இனி வாழ்வோம் நன்று

முலலைக்கோர் தேர்கொடுத்தான் பாரி
சுதந்திரத்தை நாம் கொடுப்போம் வாரி
ஓடும் இரத்தத்தில் சமாதானம் என்று ஊறி
அடிமைக்கு விடுதலை கொடுப்போம் வாரீர

கல்வியால் நாம் அடிமைப்படுவதில்லை
அடிமைப்பட்ட போதும் சளைத்து நிற்பதில்லை
பொங்கி யெழுவோம் நாங்கள் - நாளை
எமக்காய் விடியும் இனியதொரு காலை

அன்று தோன்றியது எங்கள் தமிழ்மொழி
இன்றும் நிலைக்கிறது எங்கள் தமிழ்மொழி
என்றும் அடிமைப்படாது எங்கள் தமிழ்மொழி
நீராலும் நெருப்பாலும் அழியாது எங்கள் தமிழ்மொழி

சிந்து வெளியில் உருவான எங்கள் மதம்
சிவனை வழிபடும் எங்கள் மதம்
கடமைகளை உணர்த்திடும் எங்கள்மதம் - மதத்தை
வதம் செய்ய வந்தாரை அழித்திடும் எங்கள் கரம்

எம் சொந்த மண்ணில் உருளுகிறது பல தலைகள்
பேரினவாதம் செய்கிறது பல அடிமைக் கொலைகள்
இவைதான் இவர்களுக்குக் கைவந்த கலைகள்
எம்மை அடிமையாக்கி பேசுகிறார்கள் பலவிலைகள்

நீலவானம் நம்மை அடிமை என்று செப்பிடாது
புரண்டோடும் அலைகள் நம்மை அடிமை என்று செப்பிடாது
அடர்ந்து நிற்கும் காடுகள் நம்மை அடிமை என்று செப்பிடாது
நாம் பிறந்தமண் நம்மை அடிமை என்று செப்பிடாது.

எங்கள் தமிழ்மொழி நம்மை அடிமை என்று செபபிடாது.
எங்கள் மதம் நம்மை அடிமை என்று செப்பிடாது
நாம் கற்கும் கல்வி நம்மை அடிமை என்று செப்பிடாது
எம் தமிழினம் நம்மை அடிமை என்று செப்பிடாது.

கல்வியால் நாம் யாருக்கும் அடிமையல்ல
மொழியால் நாம் யாருக்கும் அடிமையல்ல
மதத்தால் நாம் யாருக்கும் அடிமையல்ல
இனத்தால் நாம் யாருக்கும் அடிமையல்ல.

ரா. டிலுக்ஷன்
10 Q

# சமயம் கொண்டு சாமம் பெறுவாய்

சமயம் என்பது சாமத்தின் வழியென
சாதிப்பிரிவினை சாக்கடை என்று
மோதல் இன்றி சாமம் கொண்டு
சாந்தி பெற்று வாழ்ந்தாய் மனிதர்!

ஆதியில் மறந்த சாதிப்பிரிவையும்
ஆதியில் கொண்ட சமயம் அத்தனையும்
மீதியில் தொடர மனமே இன்றி
மறந்து வாழ்கிறாய் மனிதா! மனிதா!

சமயம் தன்னை சாக்கடை என்று
சாதிப பிரிவினை நறை எனப்பருகி
பிறரை நசுக்கும் கறையைசெய்து
சாமத்தை கொல்கிறாயே மனிதர்! மனிதா!

சமயம் சற்றும் அன்பை மறந்து
சாதியால் கொண்ட வன்பை வளர்த்து
உடலில் ஓடும் உதிரத்தின் நிறமே காட்ட
சாதிக்கு சண்டை செய்கிறாய் மனிதா!

சாதியால் அழிவுறுவதும் நீயே மனிதா
சாமத்தால் சாந்தி அடைவதும் நீயே
சமயம் கூறும் வழியில் வாழ்ந்து
சாமம் பெற்று வாழ்வாய் மனிதா! மனிதா!

நி. நிஷாந்தனன்
ஆண்டு 10 "R"

*With Best Compliments From:*

# Ganesh Textiles

## (Private) Limited



*Wholesale & Retail Dealers in Textiles*

*81-83, Main Street,*
*Colombo-11.*
*Sri Lanka*
*Tel : 325128, 343078*

*With Best Compliments From:*

RA

# ROYAL AGENCY

## IMPORTERS & GENERAL MERCHANTS


Dealers in Eversilver, Aluminium, Brass,
Copper Materials, Buckets, Cotton Ropes, Plasticware,
Glassware, Fancy Goods & Nylon Ropes.

*187-D, Centrel Road,*
*Colombo-12.*
*Tel: 321794*

*With Best Compliments*

*From*

# CROWN JEWELS



76A, Sea Street,
Colombo-11.
Tel: 323937, 337545
Fax: 337545

பாடசாலைகளுக்கிடையேயான போட்டிகளில் மத்திய பிரிவில் 1ம் இடம் பெற்ற கட்டுரை

# சைவ சமயத்தினர் உபயோகிக்கும் சின்னங்களும் அதன் பயன்களும்

இந்த நவீனயுக காலத்திலே இருக்கின்ற எல்லாச் சமயங்களிலும் முக்கியமாகக் கருதப்படுவது இந்து சமயமாகும். இம் மதம் தொடங்கிய காலமும் தெரியாது முடிவுறாப் போவது எப்போதுமென்று ஒருவராலும் திட்டவட்டமாகக் கூறமுடியாது. இம்மதத்திலே ஆறு பிரிவுகள் உள்ளன. அவையாவன – சைவம், வைணவம், சாக்தம், காணபத்தியம், கௌமாரம் சௌரம் ஆகியனவாகும். அவற்றிலும் முன்னிலையி லிருப்பது சைவ சமயமாகும்.

சைவ சமயத்தின் முழுமுதற்கடவுள் சிவபெருமான் ஆவார். அம்மதத்திலுள்ளவர்கள் தாங்கள் சைவசமயங்கள் தான் என்று மற்றை யோருக்கு காண்பிப்பதற்காக உள்ளன்போடு சிவத்தையே நினைத்து அணிபவைதான் சிவ சின்னங்கள் எனப்படும். சிவசின்னங்கள் என்ற வகைக்குள் திருநீறு, உருத்திராக்கமாலை, பஞ்சாட்சர செபம் என்பனவையே அடங்கு கின்றன.

திருநீற்றை முதலில் எடுத்து நோக்கு வோமானால் கோமாதா என்றழைக்கப்படும் கன்றையும் உடையதுமான தாய்க்கு அடுத்த படியாக வைத்து சைவசமயிகளால் வணங்கப் படும் பசுவின் சாணத்தினை எடுத்து வட்டத் தட்டுக்கள் போன்று தட்டி வெயிலிற் காய வைக்கின்றோம். பின் நெற்சப்பட்டையால் எரித்துப் பெறப்படும் நீற்றைப் புதுப்பானையிலிட்டு அவற்றின் மீது நறுமலர்களைப் போட்டு உபயோகப்படுத்துகின்றோம். அதுவே திருநீறு எனப்படும்.

வீட்டிலே தினமும் காலையிலும் மாலையிலும் உள்ளன்போடு "சிவசிவ" என்று சொல்லிப் பூசுகின்றோம். திருநீற்றை மதித்து அவற்றைப் பூசியிருப்பவர்களை தெய்வமாகவே போற்றிப் பணிந்திருக்கின்றனர் எமது முன்னையோர். அவர்களில் உதாரணமாக மெய்ப்பொருள் நாயனார், சேரமான் பெருமாள் போன்றோரைக் குறிப்பிடலாம்.

முதலில் மெய்ப்பொருள் நாயனாரின் வரலாற்றைச் சுருக்கமாக எடுத்து நோக்குவோம். மெய்ப்பொருள் நாயனார் ஒரு அரசர். அவர் ஆட்சி செய்து வரும் அவ்விடத்தில் தெய்வ அருளோ. என்னவோ! பஞ்சம் என்ற பெயரே இல்லை சகல மக்களும் மகிழ்ச்சியுடனே வாழ்ந்து வந்தனர். அவருடைய அரண்மனைக் கதவு எப்போதுமே சிவனடியார்களுக்காகவும் சிவசின்னங்கள் அணிந்தோருக்காகவும் வரையறை இல்லாமல் திறந்திருக்கும். சிவனடியார்களுக்கு ஒரு குறையுமே இல்லாமல் இவ்வரசு நடைபெற்று வந்தது.

மெய்ப்பொருள் நாயனாரைப் பலமுறை எதிர்த்துக் கொண்டிருந்தவன் முத்தநாதன் ஆவான். பலமுறை சண்டையிட்டுத் தோல்வியும் அடைந்திருந்தான். மெய்ப்பொருள் நாயனார் சிவனடியார்களுக்குக் கொடுக்கும் மதிப்பைப் பற்றிக் கேள்விப்பட்டான். உடனடியாக சிவனடியார் வேடம் எடுத்துக் கொண்டு பையில் ஒரு புத்தகமும் அதற்குள் ஒரு கத்தியையும் எடுத்து வைத்துக்கொண்டு அரண்மனையை நோக்கிச் சென்றான்.

வாயிற் காவலனான தத்தன் "அரசர் நித்திரைசெய்கின்றார்" என்று எவ்வளவோ சொல்லியும் கேட்காமல் உள்ளே சென்றான். அரசர் சிவனடியாராக வந்த முத்தநாதனைக் கண்டதும் நிலத்தில அமர்ந்து அவரைக் கதிரையிலே இருக்கச் செய்தார். உடனே முத்தநாதன் "என்னிடம் ஒரு ஆகமம் இருக்கின்றது. அதனை உமக்குக் கூறவே இங்கு நான் வந்தேன். நீவிரும் நானும்

மட்டுமே இருக்கவேண்டும்" என்றான். அதைக்கேட்ட அரசர் மகாராணியை வெளியே செல்லுமாறு கூறினார்.

சிரம் தாழ்த்தி இருந்த மெய்ப்பொருள் தாயனாரை தனது கத்தியால் முத்தநாதன் குத்தினான். எவ்வேடத்திற்கு மதிப்பளித்து வந்தாரோ. அவ் வேடத்திற்காகவே உயிர் விட்டார். இறக்கும் தறுவாயிலும் திருநீற்றினையே காப்பாற்றி உலகறியச் செய்ய வேண்டுமென்றார்.

திருநீற்றைப் பூசி அதன்மேல் சந்தனக் குங்குமப் பொட்டிடுகின்றோம். ஏனெனில் சிவனுடைய கண்களைக் குறிப்பதற்காக ஆகும். திருநீற்றை ஒருவரிடமிருந்து வாங்கும் போது இடதுகையின் மேல் வலது கையை வைத்து கும்பிட்டு வாங்கவேண்டும். பூசும்போதும் அண்ணாந்து சிறிதளவை வாயிலிட்டு "சிவசிவ" என்று கூறிக் கொண்டு பூசவேண்டும். நிலத்தில் சிந்தாமல் பாதுகாக்கவேண்டும்.

திருநீற்றினால் திருநாவுக்கரசு நாயனாரின் சூலை நோய் தீர்க்கப்பட்டது. அத்துடன் சம்பந்தரால் பாண்டியனுடைய வெப்புநோய் தீர்க்கப்பட்டது. அத்துடன் திருநீற்றுப்பதிகம் என்ற பதிகம் கூடப் பாடப்பட்டு வருகின்றது. இதிலிருந்து நாம் திருநீற்றின் மகிமையை உணர்ந்துகொள்ளலாம். இற்றைக்காலம் வரை சைவசமயம் அழிவுறாதிருப்பதற்கான காரணம் திருநீறுதான் என்று கூடச்செய்யலாம்.

சேரமான் பெருமாளை நோக்கினால் உடம்பில் பூச்சுப் பூசியது போல் தனக்கு எதிரே வந்தது சலவைத்தொழிலாளி தான் என்று தெரிந்தும் தனது தேரிலிருந்து இறங்கிச் சலவைத் தொழிலாளியைப் பார்த்து "திருநீற்றின் வேடம் நினைப்பித்தீர்" என்று கூறி கும்பிட்டார். சலவைத் தொழிலாளியோ நடுக்கத்துடன் தனது தொழிலைப்பற்றிக் கூறினான். அதைக்கேட்ட சேரமான் பெருமாள் கவலைப்படாமல் செல்க என்று கூறினார்.

இவ்வாறான பல விடயங்களிலிருந்து நாம் திருநீற்றின் பெருமையையும் அதற்கு நாம் கொடுக்க வேண்டிய மதிப்பையும் அறிந்து கொள்ளலாம்.

அடுத்து உருத்திராக்கத்தை எடுத்து நோக்குவோமானால் உருத்திரன் + ஆக்கம் எனப்பொருள்படும். உருத்திரன் என்பது சிவபெருமானுடைய பெயராகும். அக்கம் என்பது கண்ணாகும். ஆதலால் உருத்திராக்கம் என்பது உருத்திரனுடைய கண் எனப்பொருள்படும். உருத்திராக்கத்தை சிலர் மாலையாகக் கைகளிலும் கழுத்திலும் அணிந்திருப்பர். சிலர் கழுத்தில் மட்டும் அணிந்திருப்பர். சிலர் ஒருமணியைமட்டும் அணிந்திருப்பர்.

அடுத்து பஞ்சாட்சரத்தை மந்திரத்தை நோக்கினால் பஞ்சாட்சர மந்திரமாவது "நமசிவாய" எனப்பொருள்படும். நாம் எந்நேரமும் ஓதிக்கொண்டிருப்போமானால் எம்மை ஒரு துன்பமும் அணுகாது. துன்பம் ஏற்பட்டால் நாம் மறந்தாலும் எமது நாவானது மறக்காமல் ஓதும் திருநாவுக்கரசரது வாழ்க்கையை நோக்கி னோமானால் சமணர்கள் அவரைக் கல்லுடன் கட்டிக் கடலில் போட்டனர். ஆனால் அவர் அதற்காகக் கவலைப்படவில்லை. சிவத்தை நினைத்துக் கொண்டும் பஞ்சாட்சர மந்திரத்தை ஓதிக்கொண்டும் இருந்தார். உடனே கல் தொப்பமாக மாறியது. இதிலிருந்தும் நாம் இதன் பெருமையை அறியலாம்.

ஒருவன் சைவசமயி தான் எனக்கொள்ளும் போது அவன் சிவசின்னங்களைத் தரித்த வனாகவும் அவற்றை மதிக்கும் பண்புடைய வனாகவும் இருத்தல் வேண்டும். இதிலிருந்து நாம் சைவசமயத்திற்குள் சிவசின்னங்களின் பயன்பாட்டை அறியலாம். எனவே சிவசின்னங்களுக்கு மதிப்பளித்து சைவ சமயத்தை வளர்ப்போமாக.

சி. மயூரி
நீர்/விஜயரத்தினம் இந்து மத்தியகல்லூரி

*With Best Compliments From:*

# Atlas International (Pvt) Ltd.

E.mail: atlas_int@hotmail.com

**E.M.S**

*International Courier Service*

A.I.C. (PVT) LTD.

**E.M.S**

*International Courier Service*

**ATLAS COMMUNICATION**
227, Central Road, Colombo-12
Tel: 431498, 330325
Fax: 436254
Telex: 23450ATLAS-CE

**ATLAS INN LODGE**
76A, Sri Kathiresan Street,
Colombo-13.
Tel: 342195, 422612

**ATLAS COMMUNICATION**
76A, Sri Kathiresan Street, Colombo-12
Tel: 471788
Fax: 471789
Telex: 23473CE

**ATLAS INN**
Lodging House
167, Wolfendhal Street,
Colombo-13.
Tel: 342080, 074-712217

**ATLAS EXPRESS**
International Corier Service
223-1/2, Central Road,
Colombo-12.
Tel: 342617, 342618

**ATLAS TRAVELS &TOURS**
223-1/2, Central Road,
Colombo-12
Tel: 348572, 342617

## ATLAS AGENCY POST OFFICE

227, Central Road, Colombo-12.
Tel: 431498 Fax: 436254 Telex: 23450ATLAS CE

*With Best Compliments*

*From*

# Natasha Trading Ltd., Part.

**BANGKOK GEMS & JEWELRY TOWER**

## We Under Take

Import & Export Air Tickets
Hotel Reservation Around The World
Passport And Visa Service

**322, SURIWONGSE ROAD,**
**16/FLOOR, SUITE No. 33-B**
**BANGRAK, BANGKOK 10500**

***TEL: 267-1212, 267-1213***
***MOBILE: 01-3380033, 01-8154645***
***FAX: 662-267-1170***

# *With Best Compliments*

1987 - 1997

10 IBS ANNIVERSARY

*From*

1987 - 1997

10 IBS ANNIVERSARY

The professional Computer Academy paving the way to the millenium.
This is your opportunity! *DON'T MISS!*
Come join us and master the tremendous potential in computer technology.

## *Exclusive Courses from IBS*

* *Certified Computer Professional - CCP (USA)*
* *Associate Computing Professionals - ACP (USA)*
* *Australian Computer Society (ACS)*
* *Certificate in Microsoft Offie (MSO)*
* *Diploma in Software Engineering (DSE)*
* *Higher Diploma in Software Engineering (HDSE)*
* *PC Configuration & Troubleshooting*
* *PC Networking using Novell, Microsoft Windows NT*
* *Certified DTP Specialist*
* *Certified AUTO CAD Specialist*
* *Certified Internet Specialist*
* *Certified WEB Specialist*
* *Certified Programming Specialist*
* *Advanced Programming Specialist*

1987 - 1997
10 IBS ANNIVERSARY
Founder Member of ACTOS

**International Business Systems Overseas (Pvt) Ltd.,**
**No: 40 2/1, Edward Lane, Colombo-03, Sri Lanka.**
**Tel: 585636, 585631, 585605 Fax: 595329**
**E-mail: ibstd@slt.lk**
***Overseas Branch:***
*Galolthu Vaffushi", Male',*
*Republic of Maldives*

பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் மேற்பிரிவில் 1ம்
இடம்பெற்ற கட்டுரை

# சமய விழாக்கள் சமயத்திற்கு ஆற்றும் தொண்டு

இன்றைக்கு இருபத்தோராம் நூற்றாண்டு பிறந்து விட்டகாலத்தில், நவநாகரிகம் என்ற போதையில் மக்கள் மூழ்கி விட்ட காலத்தில், மக்கள் சமுதாயத்தினரிடையே காணப்படும் சமயப் பற்றானது அருகிக் கொண்டு செல்லும் காலத்தில், சமயப்பற்றை மக்கள் சமுதாயத்தினரிடையே வளர்க்கும் நோக்கை முக்கிய நோக்கமாகக் கொண்டு இன்றைய காலகட்டத்திலும் சமய விழாக்கள் பல கொண்டாடப்படுகின்றன.

சமய விழாக்கள் என்று கூறுகையில் ஒவ்வொரு சமயத்தினருக்கும் வெவ்வேறு சமய விழாக்கள் காணப்பட்டாலும் அவை அனைத்தினதும் பொதுவான உட்கருத்தும், பொதுவான நோக்கமும் சமூகத்தில் உள்ள மக்களினரிடையே சமயப் பற்றை வளர்ப்பதாகும். சமயப் பற்றானது ஒரு மனிதனது உள்மனதில் மிகவும் அழுத்தமாக ஆழமானதாக உட்சென்று பதிய வேண்டுமாயின் அம் மக்கள் சமூகத்தினரிடையே ஒவ்வொரு மக்களிடமும் அன்பு, கருணை, பொறுமை சாந்தி போன்ற நற்குணங்கள் வளர வேண்டும். இவ்வாறான நற்குணங்களை சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு மக்களிடையேயும் வளர்ப்பதற்கு இச்சமய விழாக்கள் பெருந் தொண்டளிக்கின்றன.

இந்து சமய விழாக்களாகவோ, பௌத்த சமய விழாக்களாகவோ, கிறிஸ்தவ சமய விழாக்களாகவோ அல்லது இஸ்லாம் சமய விழாக்களாகவோ இருந்தாலும், அனைத்துச் சமய விழாக்களும் சமுதாய வகுப்பினரிடையே நற்பண்புகளை வளர்ப்பதற்கும், அவர்களிடையே ஒற்றுமை நிலவுவதற்கும், ஒவ்வொரு சமய மக்களும் அவர் அவர்களது சமய பாரம் பரியத்தை காலம் காலமாக கட்டைப் பிடிப்பதற்கும், சமுதாய மக்களினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குமாக சமுதாயத்திற்கு தொண்டுகள் பல அளிக்கின்றன.

ஒரு மனிதனுக்கு காணப்படும் ஆறு பரம விரோதிகளையும் இச்சமய விழாக்களே அழிக்கின்றன. ஒவ்வொரு மனிதரிடையேயும் காணப்படும் பரமவிரோதிகளான ஆசை, அழுக்காறு, கோபம், அவா, இன்னாச்சொல் பேசல், புறங்கூறல் போன்ற ஆறு எதிரிகளையும் அழித்து மனித சமுதாயத்தினரிடையே நற்பண்புகளை சாந்தி, அன்பு, கருணை, இனிமையாக பேசல், புறங் கூறாமை, பொறுமை போன்றவற்றை வளர்த்து அவர்களை நற்பாதையில் வழிகாட்டிச் சென்று நல்லதொரு பொன்மயமான சமுதாயத்தை உருவாக்குவதற்கு இச்சமய விழாக்களே ஊன்றுகோலாக அமைகின்றன.

இந்து சமய விழாக்களில் ஒன்றான நவராத்திரியை எடுத்தோமானால், இவ் விழாவானது ஒவ்வொரு வருடமும் புரட்டாதி மாதம் அனுஷ்டிக்கப்படுகிறது. நவராத்திரியானது அன்னை பராசக்தியை தாயாக உருவகுத்து ஒன்பது நாள்களும் முறையே வீரத்துக்கு அதிபதியாம் துர்க்கைக்கும், செல்வத்துக்கும் அதிபதியாம் இலக்குமிக்கும், கல்விக்கு அதிபதியாம் சரஸ்வதிக்கும் மூன்று மூன்று நாள்களாக விரதம் அனுஷ்டித்து பத்தாம் நாள் விஜயதசமி என்ற பெயரில் மானம்பூத் திருவிழா நடைபெறுவது வழக்கம். இவ் நவராத்திரியானது சக்தியின்றேல் சகலதும் ஜடமே என்பதை உட்கருத்தாகக் கொண்டு முப்பெரும் தேவியர்களுக்கும் விரதம் அனுட்டித்து அவர்களைச் சரணடைந்து வேண்டும் வரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக கொண்டாடப்படுகிறது.

சமூகமென்று கூறும் போது அச்சமுகத்தை குடும்பம், பாடசாலை, ஒரு ஊர், இறுதியில் நாடு, அதற்குமிறுதியில் உலகம் என்று வகைப் படுத்தலாம். சமூகத்தில் ஒன்றான குடும்பத்தை

எடுத்தோமானால் நவராத்திரி விழாவின் போது அக்குடும்ப அங்கத்தவர்களிடையே ஒற்றுமையோடு விரதம் அனுட்டிக்கப்படும். இவ்வாறாக நவராத்திரி விழாவின் போது பாமாலைகள் மூலமும், பூமாலைகள் மூலமும் தேவியர்களை அனுட்டிக்கையில் அங்கு இறைபக்தி வளர்கின்றது. இவ்இறை பக்தி வளர்வதனால் அக் குடும்பத்தினரிடையே நற்பண்புகளான பற்று, பாசம், கருணை, சாந்தி வளர்கின்றது. இவ் நற்பண்புகள் வளர்வதனால் ஒவ்வொருவரிடேயும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை தானாகவே அடிமனதில் எழுகின்றது. ஆகவே அக் குடும்பத்தில் கணவன் மனைவிக்காகவும், மனைவி கணவனுக்காகவும், பிள்ளைகள் பெற்றோர்களுக்காகவும், பெற்றோர்கள் பிள்ளைகளுக்காகவும், அக்கா அண்ணன், தம்பி, தங்கை ஆகியோர் தங்கள் ஒவ்வொரு வருக்காகவும் விட்டுக் கொடுத்தல் என்னும் நற்பண்பை வளர்ப்பதால் அவர்களிடையே சண்டை சச்சரவுகள் ஏற்படாமல் அமைதியான குடும்பமாக உருவாவதற்கு இச்சமய விழாக்களில் ஒன்றான நவராத்திரியே வழி வகுத்தது.

இவ்வாறு ஒரு குடும்பத்தில் ஏற்படும் இவ்நற்பண்புகள் பல குடும்பத்தார்களிடையே வளர்வதனால் எல்லாக் குடும்பங்களும் அமைதியான பாதையில் அழகாக உருவாகி வளர்ந்து செல்வதற்கு இச்சமய விழாக்களே அத்திவாரமாக அமைகின்றன. இவ்வாறான ஒரு சமூகத்திடையே அமைதியான அன்பான அழகான குடும்பங்கள் காணப்படுவதனால் அவ் அனைத்துக் குடும்பங்களும் ஒன்று சேர்வதன் மூலம் நல்லதொரு அமைதியான சண்டை சச்சரவில்லாத சமுதாயத்தை உருவாக்க முடியும்.

அடுத்ததாக சமூகத்தில் ஒன்றான பாடசாலையை எடுத்தோமானால் கூடுதலாக அனைத்துப் பாடசாலைகளிலும் சமய விழாக்கள் பல கொண்டாடப்படுகின்றன. இவ்வாறான நேரத்தில் மாணவர்களிடையே ஒற்றுமை நிலவும். இவ்வாறு ஒவ்வொரு வேலைக்கும் ஒவ்வொரு குழுக்கள் பொறுப்பாக இருப்பதால் அக்குழுக்களிடையே நிலவும் ஒற்றுமை படிப்படியாக வளர்ந்து மாணவர்கள் அனைவர்களிடையே பரவி அமைதியான பாடசாலை சமுதாயத்தை உருவாக்குவதற்கு வழிவகுக்கின்றது.

பாடசாலைகளிலே பல மதத்தை சேர்ந்த மக்களும் கல்வி கற்கிறார்கள். இவ்வாறு பல மதங்கள் காணப்படுவதால் அவர் அவர்களது சமய விழாக்களும் அங்கு கொண்டாடப் படுவதால் அங்கு அவர்களுக்கு மற்றைய சமயத்தின் கலை, சலாச்சாரங்களை புரிந்துணரக் கூடியதாக உள்ளது. மேலும் அ வர்கள் ஒவ்வொருவரும் பிற சமய விழாக்கள் நடக்கும் போது அவர்களுக்கும் உதவி புரிவதால் அவர்களிடையே ஒற்றுமை நிலவும். " நீ தமிழன்" " நான் சிங்களவன்" " அவன் முஸ்லிம்" என்ற இனவெறி ஒழிக்கப்படுவதுடன், " நான் இந்து சமயத்தவன் எனது சமயம் தான் பெரியது", இல்லை நான் கிறிஸ்தவன் எனது மதம் தான் பெரியது என்ற மதவெறி ஒழிக்கப்பட்டு அனைவரும் வெவ்வேறு இனத்தினராக இருந்தாலும், மதத்தினராக இருந்தாலும் அனைத்து மாணவர்களதும் முக்கிய குறிக்கோள் தங்கள் தங்கள் சமயத்திற்கு ஒரு மனிதன் எவ்வளவு மதிப்பும் மரியாதையும் கொடுக்கிறானோ அவ்வாறே அனைவரது சமயத்திற்கும் மரியாதை செலுத்த வேண்டும் என்ற மனப்பக்குவம் வளரும். மேலும் இவ்வாறு சமய விழாக்கள் பாடசாலைகளில் கொண்டாடப் படுவதால் படிப்பு மட்டும் வாழ்க்கைக்கு அவசியம் என்ற கருத்து ஒழிக்கப்பட்டு, படிப்பு மட்டு மல்லாமல் வெளிக்கள வேலைகளிலும் மாணவர்கள் ஈடுபட வேண்டும் என்ற ஆர்வம் ஒவ்வொரு மாணவர்களிடையேயும் வளரும். இவ்வாறு சமய விழாக்களை பாடசாலைகளில் கொண்டாடுவதற்கு முன் பல போட்டிகள் நிகழ்த்தப்படுவதால் ஒவ்வொரு மாணவரும் தனக்குள்ளே புதைந்து கிடக்கும் திறமையை வெளிக்காட்டுவதற்கு ஒரு வாய்ப்பாக அமைகின்றது. இவ்வாறு மாணவர்கள் சமய விழாக்களை கொண்டாடும் போது அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சமயத்தின் பெருமையையும், தொன்மையையும் அறிந்து கொள்ள கூடியதாக உள்ளது. தங்களிடமுள்ள சமய கலாசாரங்களையும், பாரம்பரியங்களையும் பற்றிய போதுமான அறிவையும் வளர்த்துக்

கொள்ளக் கூடியதாகவுள்ளது.

பாடசாலை என்பது ஒரு கலைக்கூடம். இங்கு மாணவ சமுதாய்த்தினரிடையே சமய அறிவு பரந்த அளவில் சிறந்தமுறையில் வளர்க்கப்படுமானால் அவர்கள் மூலம் வேறுவேறு மக்கள் சமுதாயத்தினரிடையேயும் இச் சமயப் பற்றானது வளர்க்கப்படுகின்றது. பாடசாலையில் கல்வி கற்கும் பராயமே ஒரு மனிதனது சிறந்த காலம். இவ்வாறு பிஞ்சு வயதிலேயே மாணவர்களிடையே நற்பண்புகளையும், சமயப்பற்றையும் வளர்ப்பதால் அது அவர்களது மனதில் பசு மரத்தாணி போல் பதிகின்றது. இதனால் அவர்களது எதிர்காலம் சுபீட்சமாக அமைவதற்கு வழிவகுக்கின்றது. இவ்வாறாக மாணவ சமுதாயத்தை சிறந்த முறையில் வளர்த்தெடுப்பதற்கு சமய விழாக்களே மூல காரணமாக அமைகின்றன.

கோயிலை ஒரு சமூகமாக எடுப்போமயானால் அங்கும் சமய விழாக்கள் கொண்டாடப்படுகிறது மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரினதும் இறுதி நிலை முத்தியே ஆகும். இந்த முத்தியை பெறுவதற்கு மனிதர்களிடையே பக்தி காணப்பட வேண்டும். இந்த பக்தியை வளர்க்கும் சிறந்த நிலைக்களமாக கோயில் அமைகின்றது. பக்தியை மனிதர்கள் பின்வரும் இரு முறைகளில் பின்பற்றுகின்றனர். தாங்கள் சுகமாக வாழ்வதற்காக இறைவனை வணங்குவது முதல் முறை. இம்முறை சுயநலனை அடிப்படையாக கொண்டது. மற்றைய முறை உலகத்திலுள்ள மக்கள் அனைவரும் சுகமாக வாழ்வதற்கு இறைவனை வணங்குதல் ஆகும். இம் முறையானது பொது நலனை அடிப்படையாகக் கொண்டது. இவ் பொதுநலனை அடிப்படையாகக் கொண்ட பக்தி முறை மூலமே ஒருவன் முக்தி நிலையை அடையலாம்.

முக்தியை அடைந்த எமது சமய நாற்குரவர்களில் ஒருவரான மாணிக்கவாசகர் இறைவனை காதலனாகவும், தன்னை காதலியாகவும் மனதில் நினைந்து இறைவனை வழிபட்டார். இறுதியில் சாயுச்சிய முக்தியைப் பெற்றார். திருநாவுக்கரசர் எனப்படும் எமது சமய குரவரும் இறைவனை அடைவதற்கு பல சோதனைகளை கடந்தும் சாரூப முக்தியைப் பெற்றார். மனதிலுள்ள ஆசாபாசங்களை துறந்து, தனக்கு பல தடைகள் வந்த போதிலும் அத்தடைகளை உடைத்து இறைவனை இறுதியில் அடைந்தார். இவரைக் கல்லிலே கட்டி கடலிலே சமணர்கள் விட்ட போதிலும், பாற்சோற்றில் நஞ்சைக் கலந்துகொடுத்த போதிலும், மதம்பிடித்த யானையை அவர்மீது ஏவிவிட்ட போதிலும் அச்சோதனைகளை யெல்லாம் பொறுத்து இறுதியில் இறைவனை அடைந்தார்.

இவ்வாறு எமது சமய குரவர்கள் இறைவனை அடைவதற்கு அவர்களிடம் காணப்பட்ட நற்பண்புகளும், பக்திமுறையின் தூய நிலையுமே காரணமாகும். நாம் சமயவிழாக்களைக் கொண்டாடுவதன் மூலம் இவற்றைப் பெற்று நல்லதொரு பிரஜையாக வாழ்ந்து இறைவனை அடைய வேண்டும்.

. ஒரு கப்பலானது நீரில் தான் செல்லமுடியும். கப்பலுக்குள் நீர் சென்றால் கப்பலானது மூழ்கி விடும். அதே போல் நாம் நற்பண்புகளை கொண்டு நல்லதொரு பாதைக்குள் செல்ல வேண்டும். அவ்வாறு செல்லாமல் பரமவிரோதிகளான தீயபழக்கவழக்கங்களில் மூழ்கினோமானால் எமது வாழ்வும் இருட்டறையில் சென்று விடும்.

ஆகவே சமயவிழாக்கள் சமூகத்திற்கு ஆற்றும் தொண்டுகளை கருத்தில் கொண்டு அவற்றை நடைமுறைப்படுத்தி அவற்றை சிறந்த முறையில் பயன்படுத்தி நல்லதொரு சமுதாயத்தைப் பெறுவோமாக.

" வாழ்க சமயம் "

" வளர்கசமயம் தொண்டுகள் "

G. சுபோதினி

மெதடிஸ்த கல்லூரி

*With Best Compliments From:*

**Lanka Aluminium Suppliers**

*No. 34, Dam Street, Colombo-12, Sri Lanka.*
*T.Phone: 437448 Fax: 347545*

**Bodhiraja Aluminium**

*No. 230, Bodhiraja Mawatha,*
*Gasworks Street, Colombo-12.*
*Sri Lanka.*
*Phone: 422999, 342208 Fax: 347545*

*With Best Compliments From:*

JL

***JAYA LALITHANGHI***

***Jewellers***

*225, GALLE ROAD, BAMBALAPITIYA.*
*COLOMBO-04. Tel: 595144*

பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் மேற்பிரிவில் 1ம்
இடம்பெற்ற சிறுகதை

# சமயமும் மனித வாழ்க்கையும்

சமயத்தோடும் ஒன்றியதாகவே மனித வாழ்க்கை செல்ல வேண்டும். சமயம் வேறு வாழ்க்கை வேறு என்று நாம் பிரித்து நோக்குதல் தகாது. மனிதனாகப் பிறந்து விட்டாலே மதம் ஒன்று கட்டாயமாக அமைதல் வேண்டும். அது எந்த சாதி ஆகிலும் எந்த இனம் ஆகிலும் ஆகட்டுமே. மனிதனைக் கட்டாயப் படுத்தி மதத்தினுள் திணிக்கக் கூடாது. அவன் பரம்பரையாக ஒரு மதத்தைப் பின்பற்றி வருவானே ஆனால் அவனுக்கு அந்த மதத்தில் நம்பிக்கை. அந்த மதக்கட்டுக் கோப்புக்குள் தன்னை உள்ளடக்குவான் ஆயின் அவன் வாழ்க்கை சீர்ப்படுத்தப்படும். அவன் அதனைத் தவிர்த்து புறம்பாக ஒரு வழியில் தன்னை எடுத்துச் செல்வானே ஆயின் அவன் வாழ்க்கை சீர்படுத்தப்படாமல் அல்லப்படும்.

எனவே உலகில் பிறந்த ஒவ்வொருவனுக்கும் மதம் இன்றியமையாதது. அதனை அடிப்படை யாகக் கொண்டு இவர்கள் வாழ்விலும் இவர்கள் மதத்தில் தங்கள் நம்பிக்கையை பூரணமாக வைத்திருந்தமை பற்றியும் அது வீண்போகவில்லை என்பதனையும் கீழே காணும் ஒருகதை மூலமாக நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

தபால் காரன் வாசலில் வந்து நின்று மணி அடிக்கிறான் முரளி ஓடிவந்து தபால் காரனிடம் ஒருமடலை வேண்டுகிறான். அது அவன் அண்ணாவின் மடல்.

சாந்தசோலை,

காந்தபுரம்.

அன்புள்ள என் அம்மா சகோதரர்களுக்கு

நான் இங்கு நலம். உங்கள் நலம் அறிய ஆவலாக உள்ளேன். நான் படித்துக் கொண்டிருக்கிறேன். இதுதான் என் பல்கலைக்கழக இறுதி ஆண்டு. எனக்கு மேலதிகமாக கொஞ்சம் பணம் தேவைப்படுகிறது. கடன் வாங்கியாவது அனுப்பிவிடவேண்டும். இந்த வருடம் முடிந்தவுடன் நான் பிரபல வைத்தியர் ஆகி விடுவேன் – தானே அம்மா.

இப்படிக்கு,

சாந்தன்

இக்கடிதத்தைக் கண்ட முரளிக்கோ, ஒரே அதர்ச்சி இக்கடிதத்தை அம்மாவிடம் காட்டுவதா?... வேண்டாமா? இதனால் அம்மாவின் மனம் வேதனைப்படுமல்லவா, "பாலன் பஞ்சம் பத்து வருஷம்" இன்னும் சிறிது நாட்களில் என்மகன் வைத்தியன். எனக்கு என்ன குறை. நான் இடியப்பம், தோசை விற்றேன். யாருக்காக என் மகனுக்காக என் குடும்பத்திற்காக, என் பிள்ளையின் எதிர்காலத்திற்காக என்று சொல்லுவாள். இருந்தும் அவளுக்கு இப்போது உள்ள நிலைமையில் மகியம் உணவுக்கு கூட என்ன செய்வது. இரண்டு பிள்ளைகளும் நானும் என்ன செய்யப்போகிறோம் என்று சிந்தித்துக் கொண்டிருப்பவளின் மீது இப்படி பெரியதொரு அதிர்ச்சியான செய்தியை, அவள் தலையில் போட்டாள் அவள் என்ன தான் செய்வாள். என்று பலவாறாக எண்ணிக் கொண்டே முரளி பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த பார்வதியை நோக்கிப் பரிதாபமாகச் சென்றான் அவள் இறைவனைத் தியானித்துக் கொண்டிருந்தாள். அவன் பொறுமையாக நின்று அன்னையவள் தியானம் முடிவடைந்தவுடன் பக்குவமாக எடுத்துச் சொன்னான். "புயலில் அகப்பட்ட சிறு துரும்புபோல" அவள் மணம் அலைந்தது நான்

எப்படி அந்தப் பணத்தைக் கொடுக்கப் போகிறேன். என்று நினைத்துக் கொண்டு மௌனமாக உட்கார்ந்தாள் பிரமை பிடித்தவள் போல் ஆன அவளைப்பார்த்து. முரளி என்ன அம்மா இது என்ன பெரிய விஷயமா அண்ணாவிற்கு நான்கு நாட்களுக்குள் இந்தப் பணத்தைக் கொடுத்தால் சரிதானே. எல்லோரும் நினைத்தால் முடியும். முடியாது என்ற வார்த்தைக்கு இடம் இல்லை அம்மா, தைரியமாக இருங்கள். அடுத்த வருடம் பிரபல வைத்தியர் ஆக வருவதற்கு அவனை உன்னால் முடிந்தது. இது உன்னால் முடியாத அம்மா, நானும் இதற்கு நிச்சயமாக ஒத்துழைப்பேன். என்று கூறி விட்டு முரளி குடிசையில் இருந்து. வெளியில் வந்து வானத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான், ஏன்தான் எங்களுக்கு மட்டும் இப்படி ஒரு நிலை. இல்லை, இது ஆண்டவன் சோதனை. இந்தப் பணத்தை அண்ணாவுக்கு அனுப்புவதற்காக வேண்டி இன்று நான் கூலி வேலை செய்வதற்காக போகப் போகிறேன். நாளையும், அடுத்த நாளும் பாடசாலை செல்லாமல் வேலைக்குப் போனேன் என்றால் இந்தப் பணத்தை அண்ணாவுக்கு அனுப்பலாம். என்று யோசித்து விட்டு புறப்பட்டுச் செல்கிறான். வேலை தேடி அலைந்து, ஒரு இருவேலை செய்து அதில் கிடைக்கும் பணத்தைக்கொண்டு நேரடியாக கடைக்குச் சென்று பொருட்கள் வாங்க தாயிடம் கொடுத்து தாய்க்கு ஒத்தாசையாக இருந்து ஒரு பெட்டி இடியப்பம் தயாராக்குகிறான். தாயைக் கூட்டிக் கொண்டு போய் அது விற்கும் இடத்தில் அமர்த்திவிட்டு. அவன் வேலைக்குச் செல்கிறான். ஒருபடியாக மூன்று நாட்களும் அலைந்து திரிந்து ஆயிரத்து முன்னூற்று ஐம்பது ரூபாவைச் சேர்த்தார்கள். உடன் கொண்டு சென்று அதில் நூறு ரூபாவைச் சேர்த்தார்கள். உடன் கொண்டு சென்று அதில் நூறு ருபாவை எடுத்து விட்டு. மிகுதியை அண்ணனுக்கு வைத்து அனுப்பிவிட்டு ஐம்பத்தி எட்டு ரூபாவுக்கு தன் வீட்டிற்குத் தேவையான பொருட்களைத் தாயிடம் ஒப்படைத்தான். பின்பு அவன் வழமைபோல் பாடசாலை சென்றான். எவ்வளவுதான் அவன் கஷ்டப் பட்டாலும் அன்று பாடசாலையில் நடந்த பரீட்சையில் முன்நிலையில் நின்றவன் அவன் தான். எல்லா மாணவர்களும் பொறாமையாக கண் உற்றார்கள் அவன் பொருட்படுத்தவில்லை. பின்பு அப்படியாக அவன் உடையை பார்த்தும் சில மாணவர்கள் கேலி செய்தவர்களும் உள அவர்கள் இவனிடம் வந்த தெரியாத வினாக்கள் சிலவற்றைக் கேட்க அவன் "இன்னா செய்தார்க்கும் அவர் நாண நன்னையம் செய்யவேண்டும்" என்று மனதில் நினைத்துக் கொண்டு அவர்களுக்கு விடை அளித்தான். அவர்களில் இவர் அவனைப் பார்த்து திருந்தியவர்களும் உள. இப்படியாக நான்கு மாதங்கள் உருண்டோடின.

அவன் அண்ணன் வைத்தியராக வரும் காலம் நெருங்கி விட்டது. இப்போ அந்த நாளும் வந்தடைந்து விட்டது. அவர்கள் ஓரளவு நன்னிலையில் இருந்தார்கள். இப்படி இருந்து வரும் நாள்களில் அவனுக்கு திருமணம் செய்து வைக்க விரும்பிய தாயார் நல்ல பெண் என்று, ஒரு பெண்ணை அவனுக்கு மணம் முடித்து வைத்தார்கள். அந்தப் பெண் பெரிய இடத்துப்பெண் ஆடம்பர வாழ்க்கை வாழ நினைப்பவள். பெரிய பணம் படைத்து வசதியானவர்களுடன் வாழ வேண்டும் என்று நினைப்பவள். இதனால் மாமியார் ஆகிய பார்வதிக்கும் மருமகளாகிய கஜாங்கிகைக்கும் மோதல்கள் வந்தன இறுதியில் அவர்கள் இருவரும் மோதல்கள் தாய் மகனுக்குள் பிரிவை ஏற்படுத்தியது. அவர்கள் (மகன், மருமகள்) இருவரும் தனியாக குடித்தனம் சென்று விட்டார்கள். இதனால் பத்து மாதம் சுமந்து பாலூட்டிச் சீராட்டி கண்ணை இமை காப்பது போல காத்த தாயுள்ளம் வேதனையில் மூழ்கியது. இதை அந்த தாயுள்ளம் இறைவனிடம் சென்று முறையிட்டு அழுது புலம்பியது. இந்த தாய் என்னதான் நடந்தாலும் ஒவ்வொரு நாளும் தவறாமல் காலை ஆறு மணிப்பூசைக்கு விநாயகரிடம் சென்று அவனை வழிபடுவாள். எவ்லோரும் இவளைப் பார்த்துச்சிரித்தார்கள். கேலி செய்தார்கள். "எந்தநாளும் கோயிலுக்குச் செல்கிறாதான். என்ன இவ இறைவனிடம் வேண்டிக் கொள்கிறா". என்பார்கள் இரண்டாவது மகன் படித்து உயர்தர வகுப்பில் நல்ல புள்ளிகளைப் பெறவில்லை. இருந்தாலும் அவன் தான் அடுத்தமுறை படித்து சித்தி அடைவேன் என்ற மனஉறுதியும் கடவுள் மீது கொண்ட நம்பிக்கை

யால் இரண்டாவது தடவையாக பரீட்சையில் கணிதத்துறையில் அதிஉயர்ந்த புள்ளிகளைப் பெற்று பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டான். படித்தான் கல்வியில் உச்ச நிலை அடைந்து கற்றுக்கொண்டிருக்கும் வேளை அவனுடைய கால் விளங்காத கடைசி சகோதரி இறந்து விட்டாள். இது அவனை வேதனைக்கு உள்ளாக்கியது. இதனால் அவன் தாய்க்குப் பைத்தியம் பிடித்து விட்டது. எத்தனை கஷ்டங்கள் எதிர்நோக்கி ஒரு உயர்ந்த நிலைக்கு உள்ளாக்கிய அவன் மூத்த மகனை அவன் மனைவி கல் நெஞ்சக் காரனாக மாற்றினாளோ. இப்படியான ஒருதாய் நிலைகண்டு உருகாவிட்டால் அவன் மனிதனா? அல்லா விட்டால் மரமா? தாயின் நிலைகண்டு கோயிலும், வைத்தியசாலையும், பல்கலைக்கழகமுமாகத் திரிந்த முரளி. தன் விருப்பத்திற்கு தன்தாயை ஒழுங்காக, பாசத்துடன், பரிவுடனும் பார்க்கக்கூடிய ஒரு ஏழைப் பெண்ணை திருமணம் செய்ய முடிவு செய்தான். பல்கலைக்கழக வாழ்க்கை முடிவடைந்து விட்டது. அவனும் ஒரு பொருளியளாலராக மாறினான். தன்னை இப்படி நன்நிலைக்கு உயர்த்திய தாயாகிய உள்ளத்தை முதற்கண் வணங்குவான். தினம் தினம் கோயிலுக்குச் சென்று ஆண்டவனிடம் பிரார்த்திப்பான் "ஆண்டவா நீதான் எனக்கு நல்ல வழியைக் காட்ட வேண்டும்". என்று முரளிக்கும் நந்தினிக்கும் திருமணம் நடைபெற்றது.

அவர்கள் இருவரும் ஆலோசித்து கொஞ்சம் வசதியான வீடு ஒன்றை ஒழுங்குபடுத்தி அங்கு சென்று தாயை தெய்வத்தின மேலாக போற்றி ஒரு பல வைத்தியங்கள் எல்லாம் செய்தார்கள். தாய் குணம் அடையவில்லை. இப்படியே நாளுக்கு நான் அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்தது. வாழ்க்கைத்தரம் உயர தாயின் மேல் இவர்கள் வைத்த கண்காணிப்பும் அதிகமானதே தவிர குறையவில்லை. இவர்களின் துரித வேக உயர்ச்சியைப்பார்த்த இவன் சகோதரனும் மனைவியும் இவர்களுடன் வந்து ஒட்டிக் கொண்டார்கள். இது இவனுக்குப் பிடிக்காமல் தான் இருந்தது. ஆனாலும் அண்ணனை எதிர்த்து ஒன்றும் பேசாமல் சம்மதம் செய்தவன் போல் ஆனான்.

இப்படியாக நாட்கள் உருண்டோடின. வருடங்கள் பல கழிந்து சென்றது தாயின் வடிவில் எம்மாற்றமும் நிகழாததைக் கண்டு சோக மானான். கடவுளே, தினம்தினம் உன்னிடம் வந்து தன் தாயைக்குணமாக்கு என்று கேட்கிறேன். எனக்கு இதை நீ செய்யவேண்டி இவ்வளவு நாளும் தான் எங்களால் அவள் கஷ்டப்பட்டாள் வேதனைப் பட்டாள் இறைவா, நாங்கள் உயர்நிலையில் இருப்பதைப் பார்த்து அவள் அகம் குளிரவேண்டாமா, என்று தெரிந்து இறைவனை வேண்டுவான்.

முரளியின் மனைவி தன் மாமியாரைக் கவனிக்கும் அளவு ஒருவன் நல்ல புண்ணியம் செய்தால் ஒழிய இப்படியாக ஒரு பலாபலனைப் பெறமுடியாது என்று சொல்லும் அளவுக்கு இருந்தது. கடவுளின் அருளால் இவர்கள் இருவருக்கும் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. ஆண் குழந்தையைப் பெற்றுத்தன் கணவனிடம் ஒப்படைத்து விட்டு அப்புண்ணியவதி, தன் கணவனிடம் ஒரு சத்தியத்தைப் பெற்றுக் கொண்டு இறைவனடி எய்தி விட்டாள்.

இந்த அதிர்ச்சியில் தாயின் மனநிலை மீண்டும் பழைய நிலை திரும்பியது. உலகமெல்லாம் இவளைச் சிரித்தது. "நாங்களும் தான் இருக்கிறோம் இறைவனில் எங்களுக்கு மட்டும் இப்படி பக்தியில்லை இவர்கள் இப்படி பக்தி வைத்திருப்பதனால்தான் இவர்களின் குடும்பநிலமை இப்படி" அவன் காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை இறைவனிடம் சென்று முறையிட்டு விம்மினான் துடித்தான். "மாண்டார் வருவரோ இம்மண்ணுலகு" என்று நினைத்தான் தன்பாரத்தை இறைவனிடம் ஒப்படைத்து விட்டு வீடு சென்றான்.

மனைவியின் சத்தியத்தை அவனால் மீறவும் முடியவில்லை அதே நேரம் அதை மறுக்கவும் முடியவில்லை. தாயின் வேண்டுகோளின் பெயரில் தாயின் உத்தரவுடன் அவள் கூறும் பெண் ஒருத்தியை மணந்தான். அந்தப்பெண், குழந்தையை நன்றாகக் கவனித்தாள். கணவனிடமும்

மாமியாரிடமும் மிக்க மரியாதை வைத்திருந்தாள். இவர்களின் வாழ்வு சந்தோஷமாக ஓடியது.

அன்னையவள் இவ்வளவு நாளும்பட்ட கஸ்டங்களுக்கு இப்பதான் ஒரு ஓய்வுகிடைத்தது என்று அவன் எண்ணினான். பார்வதி தன் பெரும் பொருளை கோயிலில் செலவிட்டாள் ஆலயத் தொண்டு செய்தலில் அவள் காலம் ஓடியது அவள்,

தான் இறைவன் மீது வைத்திருந்த நம்பிக்கை வீண்போகவில்லை. என் பிள்ளைகள் உயர்நிலை எய்திவிட்டார்கள் என்று எண்ணி இறைவனிடம் தன்னை முழுமையாக அர்ப்பணித்து வாழ்ந்து வந்தாள். காலனவன் இவள் வறுமையில் வதிந்த நாட்கள் கழிந்தன என்று கவர்ந்து சென்று வீட்டான்.

இக்கதை யாவும் கற்பனையே

இவர்கள் குடும்பத்தில் எத்தனையோ இழப்புக்கள் துன்பங்கள் கஷ்டங்கள் வேதனைகள் கண்ணீரும் கம்பலையும் அந்தப் பார்வதி தான் வாழவில்லையா?

* அவள் தான் பிறந்த பிறப்பின் மீது நம்பிக்கை வைத்திருந்தாள்.

* தன் சமயத்தின் மீது நம்பிக்கையோடும்

* அந்த சமயத்தை தோற்றுவித்த பரம்பொருள் மீதும் நம்பிக்கை கொண்டாள்.

" படைத்தவன் பாடி அளப்பான் " என்று, கடவுள் மீது வைத்திருந்த நம்பிக்கை எள்ளளவேனும் குறையாது இருந்ததே காரணம். இவளின் ஆசை நிறைவேறியது. பிள்ளைகளின் வெற்றிக்கும்.

இவளைப் போன்று எல்லோரும் வாழ வேண்டும். அப்படி வாழ்ந்தால் நாம்போற்றும் மதத்தின் பெருமை உயரும்,. வாழ்வு சிறக்கும். என்று கூறி சமயம் வளர வேண்டும் மென்மேலும். இச் சைவசமயத்தை எவரும், எவருக்கும் வலுக்கட்டாயமாகத் திணித்தால் முன்னேற்றம் காணமுடியாது. சமயத்தின் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். கொள்ளும்படி மற்றவர்களையும் வழிநடத்த வேண்டும் என்றும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆண்டவன் படைப்பில் எல்லோரும் ஒன்று சாதியில்லை மதம் இல்லை " ஒன்றே குலம் ஒருவனே தேவன் " ஆனால் பின்பே குலமும் மதமும் தோன்றுகிறது. அதை நாம் எங்களுக்கு பொருந்தும்படி உருவாக்கிக் கொள்கிறோம் அப்படியாக நாங்கள் உருவாக்கிக் கொண்டமதத்தை நன்னிலையில் வழிநடத்திச் செல்வோம்.

" அச்சமயத்தின் பெருமையை நாம் காப்போம் "

முற்றும்

T.ரகுமாலா
இராமநாதன்
இந்துமகளிர் கல்லூரி

*With Best Compliments*

*From*

Mr. & Mrs. N.Kumaraguruparan CFC, PHD

Tel: 581886

*With Best Compliments*

*From*

**WATTALA MATALS COMPANY**

*With Best Compliments From:*

# GATEWAY METALS

GENERAL HARDWARE MERCHANTS & IMPORTERS

*335, Old Moor Street,*
*Colombo-12.*
*Tel: 337556, 438624*

*With Best Compliments From:*

# Thilina Manpower Enterprises

*223 ½, Central Road, Colombo-12.*
*T.P. 452256 Fax: 00941 436254*

# திரும்பிப்பார்

- றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் தனது வருடாந்த பொதுக் கூட்டத்தை 2000 ஆம் ஆண்டு, பங்குனி 15 புதிய செயற்குழு தெரிவுசெய்யப்பட்டு, பொறுப்புக் கையளிக்கப்பட்டது.
- அதன்பின், இதுவரையுள்ள காலப்பகுதிவரை எமது மன்றம் பொறித்த பொற்சுவடுகள் இதோ உங்கள் முன்.
- வளமைபோல், மாதாந்தம் போயா தினங்களில் இந்துசமயப் பெரியார்கள் தலைமையில் எமது இந்து மாணவர்களுக்கு போதனைகளும், அறிவுறுத்தல்களும் வழங்க வழி சமைத்தோம். மேற்படி போதனைகளில், வித்துவான் திருமதி.வசந்தா வைத்தியநாதன், இந்து சமயத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திரு.குமார் வடிவேல், "சற்குரு சித்தமுத்தடிகள்" தவச்சாலை தவப்புதல்வர் திரு.சிவகுருநாதன், "சின்மயா மிஷன்" ரமாணா சுவாமிகள் ஆகியோர்களும், மேற்படி போதனைகளை நடாத்தியமை குறிப்பிடத்தக்கது.
- அன்று தனது பாடசாலைகளுக்கிடையிலான சமயத் திறன்காண் போட்டிகளை மிகச் சிறப்பாக நடத்தி வெற்றிகண்டோம். மேற்படி போட்டியில் 20 இற்கும் மேற்பட பாடசாலைகளிலிருந்து, சுமார் 400 இற்கு மேற்பட்ட போட்டியாளர்கள் பங்குபற்றி, எமக்கு ஊக்கமளித்தார்கள். இவர்களுக்குரிய அனைத்துப் போட்டி முடிவுகளும் அன்றைய தினமே அறிவிக்கப்பட்டது. அத்துடன், சமயத் திறன்காண் போட்டிகளில் முதன்முறையாக "சமய அறிவு வினாவிடைப்போட்டி" என்ற திறந்த பிரிவிற்கான போட்டியை Atlas International (Pvt) Ltd ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் நடாத்தி அமோக வெற்றிகண்டோம்.
- எமது பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகளையும் சிறப்பாக நடாத்தி வெற்றி கண்டோம்.
- எமது வருடாந்த நிகழ்வான கலைமகள் விழாவை சிறப்பாக நடாத்த நிதிதிரட்டும் பொருட்டு எமது மன்றத்தினரால் 19/08/2000 அன்று சரஸ்வதி மண்டபத்தில் நடாத்தப்பட்ட "Film Show 2000" இனை சிறப்புற நிகழ்த்தினோம்.
- இன்று உங்கள் முன், எமது இந்து மாணவர் மன்றத்தில் 45 ஆம் ஆண்டிலே, எம் வெற்றி விழாவான "கலைமகள் விழா"வினை அரங்கேற்றிக் கொண்டிருக்கும் நாம், இன்றுபோல் என்றும் எம் சமய நற்பணியில் தொடர உங்கள் ஒத்துழைப்பையும், ஆதரவையும் நாடுகின்றோம்.

**"உணர்வுள்ளவரை எம் பணி தொடரும்"**

செயற்குழு **2000/2001**


# நன்றி நவிலல்

"என்னன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

- எமது விழாவிலே, பிரதம அதிதியாகப் பெருமையுடன் எமதழைப்பை ஏற்று வருகை தந்த பேராதனைப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திரு.V.மகேஸ்வரன் அவர்களுக்கும், அவரது பாரியாருக்கும்,
- கலைவாணிக்கு முத்தமிழால் முடிசூட்டி நிறைந்த மனத்துடன் அனுமதியும், வாழ்த்துக்களும் வழங்கி எம் அதிபர் திரு.H.L.B.கோமஸ் அவர்களுக்கும்,
- உயர்வான வார்த்தைகளால் விழாவினை மெருகூட்டவும் பேச்சாளராகக் கலந்துகொள்ள வருகைதந்த வித்யாசாகர் திரு.சசாங்கன் சர்மா அவர்களுக்கும்,
- கல்லூரி உபஅதிபர், விளையாட்டு மற்றும் மன்றங்களிற்கான பொறுப்பாசிரியர்கட்கும், தமிழ்த்துறைப் பொறுப்பாசியருக்கும்,
- சிரமங்கள், தடங்கல்கள் பல நேர்ந்தபோதும், எமது ஊக்கம் குன்றாது நாம் செய்த கடமையை கண்ணியமாய் நிறைவேற்றிட வழிநடத்திய எமது மன்றப் பொறுப்பாசிரியர் திருமதி.புஷ்பா நீலலோஜனன் அவர்களுக்கும்,
- எமது மன்றத்தின் வளர்ச்சிக்கு தூண்களாக நின்று துணைபுரிந்த தமிழ் இலக்கிய, நாடக, கர்நாடக இசைமன்றப் பொறுப்பாசிரியர்களுக்கும், மேற்படி மன்றங்களின் மன்ற உறுப்பினர்களுக்கும்,
- பாடசாலை மட்டத்திலான, பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் நடுவர்களாகப் பணியாற்றிய பெருந்தகையினருக்கும், ஆசிரியர்களுக்கும்,
- பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் நடுவர்களாகப் பணியாற்றத் தமது ஊழியர்களைத் தந்துதவிய வோட் பிளேஸ், இந்து சமயத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திரு.குமார்வடிவேல் அவர்களுக்கும்,
- பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் இம்முறை விஷேடமாக அறிமுகப்படுத்தப்பட்ட "சமய அறிவு வினாவிடை"ப் போட்டிக்கு அனுசரணை வழங்கிய "Atlas International (Pvt) Ltd" இன் உரிமையாளர் திரு.பாலேந்திரன் அவர்களுக்கும்,
- இம்மலரிற்கு இல்லையென இயம்பாது, இயன்றவரை விளம்பரத்தை அள்ளித்தந்த விளம்பரதாரர்களுக்கும், Teleprint அனுசரணையாளர்களுக்கும்,
- வேந்தியர் விழா காண களிப்புடன் எமதழைப்பை ஏற்று, வந்திருந்த சகோதர பாடசாலை மாணவ மாணவிகளுக்கும்,
- குறைந்த காலத்தில் எமது விருப்பப்படி மலரை அச்சிட்டுத்தந்த **Admiral Graphics (pvt) Ltd.,** ஸ்தாபனத்திற்கும்,
- இனிக்கும் இன்ப மாலைப்பொழுதிலே எம் கலைநிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்க வந்த ரசிகப் பெருமக்களுக்கும்,
- எமக்கு பலவிதங்களிலும் அனுசரணையாக இருந்து எம்மை வழிநடத்திய பழைய மாணவர்களுக்கும், மாணவத் தோழரிற்கும்,
- குறிப்பறிந்து பல உதவிகள் நல்கிய அனைவருக்கும், குறிப்பிட மறந்த அனைவருக்கும

**"நவில்கின்றோம் நன்றிகள் பலகோடி"**

**செயற்குழு**
**இந்து மாணவர் மன்றம்**



*With Best Compliments*
*From:*

MAHARAJA

# ROASTED RICE FLOUR

இது துப்பரவாக்கப்பட்ட
அரிசியை ஊறவிட்டு இடித்து
கையினால் வறுக்கப்பட்டது.
எவ்வித இரசாயனச்
சேர்க்கையும் இல்லாதது.
இந்த மாவை நன்றாகக் கொதித்த நீரில்
தேவையான அளவு உப்புசேர்த்து
இடியப்பம், பிட்டு தயாரிக்கலாம்.

**Made in**
**Sri lanka**

MAHARAJA FOOD PRODUCT
18/3, DR. E.A. Coory Mawatha, Colombo-06, Sri Lanka.
Tel: 437990, 338116, 591139, 448928 Fax : 591139

*A QUALITY MAHARAJA FOOD PRODUCTS*

ROHAN'S
EMPORIUM (PVT) LTD.

*An Exclusive Garment shop*

73, Main Street, Colombo-11.
Tel: 440139, 343478
Fax: 327182

3-14, 2nd Floor, Majestic City,
Bambalapitiya, Colombo-04.
Tel: 555754

409A, R.A.De Mel Mawatha, (Duplication Road)
Colombo-03, Sri Lanka.
Tel: 506304, 506305

ADMIRAL GRAPHICS, 403-1/2, GALLE ROAD, COLOMBO-06.